# அஹ்மதிய்யா இயக்கம்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)
இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்

# அஹ்மதிய்யா இயக்கம்

*(1924 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் இலண்டன் மாநகரில் நடைபெற்ற சர்வ சமய மாநாட்டில் வாசிக்கப்பட்ட சொற்பொழிவு)*

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி)
(அஹ்மதிய்யா இயக்கத்தின் இரண்டாவது கலீ:பா)

**வெளியிடுவோர்:**

**நஸாரத் நஷ்ரோ இஷாஅத்**

**காதியான்**

Tamil Translation of the book

# Ahmadiyya Movement

# அஹ்மதிய்யா இயக்கம்

Author : Hadhrat Mirza Basheeruddin
Mahmood Ahmad, Khalifatul Masih II[ra]

Translated by : S.S.H.Mohamed Lebbai

Composed by : S.S.H.Mohamed Lebbai

First edition : 2020

Copies : 1000

Publisher : Nazarat Nashr-o-Isha'at, Qadian,
Gurdaspur Dist – 143516, Punjab

Printed at : Fazl-e-Umar Printing Press
Qadian - 143 516

***National Toll Free No:*** 1800 103 2131

***Tamil Toll Free No:*** 1800 425 40000

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 5 |
| 2 | அஹ்மதிய்யத் என்றால் என்ன? | 15 |
| 3 | இயக்கத்தின் தோற்றமும் அதன் தற்போதைய வளர்ச்சியும் | 16 |
| 4 | அஹ்மதிய்யா இயக்கத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையே உள்ள தொடர்பு | 22 |
| 5 | வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதத்தின் தன்மை | 27 |
| 6 | வாக்களிக்கப்பட்ட ஒருவர் தோன்றவேண்டிய காலம் இதுவே என்பதற்கான காலத்தின் சாட்சியம் | 31 |
| 7 | தெய்வீகப் பாதுகாப்பில் இருப்பதாக வாதிக்கும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமே | 43 |
| 8 | வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டினார்கள் | 57 |
| 9 | இறைவனின் ஏகத்துவம் | 57 |
| 10 | இயேசு உயிரோடு இல்லை | 61 |
| 11 | மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தொடர்பு | 67 |
| 12 | இறைவனின் பண்புகளும் அவற்றின் நிறுத்தமும் | 69 |
| 13 | இறைவெளிப்பாட்டைப் பற்றிய புரிதல் | 72 |

| | | |
|---|---|---|
| 14 | எல்லாச் சமுதாயங்களும் இறைவெளிப்பாட்டைப் பெற்றன | 76 |
| 15 | திருக்குர்ஆன் முழுமையான வேதநூல் | 78 |
| 16 | இஸ்லாமும் ஜிஹாதும் | 83 |
| 17 | இஸ்லாமும் அடிமை முறையும் | 85 |
| 18 | இஸ்லாமும் வட்டியும் | 87 |
| 19 | இஸ்லாமும் பலதார மணமும் | 89 |
| 20 | இஸ்லாத்தில் விவாகரத்து | 90 |
| 21 | நல்லொழுக்கப் போதனை | 91 |
| 22 | மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை | 107 |
| 23 | சொர்க்கமும் நரகமும் | 110 |
| 24 | அன்னாரின் வாதத்திற்கான சான்றுகள் | 112 |

# முகவுரை

அஹ்மதிய்யா இயக்கத்தின் இரண்டாவது கலீஃபாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் அஹ்மதிய்யா இயக்கத்தின் கண்ணோட்டத்தில் இஸ்லாத்தை விளக்கி எழுதிய ‘அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாம்’ என்ற நூலின் சுருக்கமே ‘அஹ்மதிய்யா இயக்கம்’ என்ற இந்நூலாகும்.

**1924** ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் வெம்ப்லீ அமைப்பின் (Wembley Exhibition Organisation) சார்பில் நடத்தப்பட்ட அப்போதைய ஆங்கிலப் பேரரசில் நிலவி வந்த மார்க்கங்களின் கருத்தரங்கில் வாசிப்பதற்காக இந்தச் சிறிய விளக்கவுரை தயாரிக்கப்பட்டது.

கருத்தரங்க ஏற்பாட்டாளர்களின் அழைப்பினை ஏற்று அஹ்மதிய்யா இயக்கத்தின் தலைவர் அவர்கள் தாமே இலண்டன் மாநகருக்கு நேரில் வருகை தந்து கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். ஸர் ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களால் வாசிக்கப்பட்ட அன்னாரது உரை கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இந்நூல் வெளிவந்து **43** ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் இயக்கத்தின் உலகளாவிய வளர்ச்சி பற்றியும் அதன் பிரச்சார வெற்றி பற்றியும் அது கொண்டிருக்கும் தகவல்கள் மிகவும் பழையனவாகி விட்டன. இதன் காரணமாகவே இப்போதைய நிலையைப் பற்றிய சிறிய குறிப்பு கீழே தரப்படுகின்றது.

**1924** ஆம் ஆண்டு இந்நூல் எழுதப்பட்ட போது இவ்வியக்கம் மேற்கு ஆப்பிரிக்காவில் அப்போதுதான் தோன்றியிருந்தது. **1921** ஆம் ஆண்டுதான் கானா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பிரச்சாரத்திற்காக அதிகாரப்பூர்வமான முதல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. இப்போது அந்தக் கண்டத்தில் பிரச்சார நிலையங்கள், பள்ளிவாசல்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் என ஒரு பரந்த அமைப்பை உருவாக்கியிருக்கிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத் நைஜீரியாவின் தொலைதூரப் பகுதிகளிலெல்லாம் தன்னுடைய கிளைகளை நிறுவியிருக்கிறது. மேலும் உள்ளூரிலேயே பயிற்சி பெற்ற இயக்கத்தின் பிரச்சாரகர்கள் தமது நாட்டு மக்கள் மத்தியில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்பி வருகின்றனர்; ஜமாஅத்தின் நூல்களையும் பரவச்செய்து வருகின்றனர். இதுவல்லாமல், பாகிஸ்தானிலிருந்து மிகச் சிறப்பான பயிற்சி பெற்ற பிரச்சாரகர்களும் வந்து கொண்டிருக்கின்றனர். ஜமாஅத் நூல்களும் தொடர்ந்து அந்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஜமாஅத் பல ஆரம்பப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் நடத்திக் கொண்டிருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்க சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி கற்று வருகின்றனர்.

கானாவிலும் சிராலியோனிலும் உள்ள எங்கள் அமைப்புகளும் இதே போன்று முன்னேறி வருகின்றன. இந்த நாடுகளிலும் ஆப்பிரிக்க அஹ்மதிகளைக் கொண்ட அமைப்புரீதியாக பலம் வாய்ந்த, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஜமாஅத்துகளைப் பெற்றிருக்கிறோம். பல ஆரம்பப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும்

ஆரம்பிக்கப்பட்டுள்ளன; பல ஆப்பிரிக்கர்கள் பிரச்சாரகர்களாகப் பயிற்சி பெற்றுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் இஸ்லாத்தைப் பரப்புவதிலும், கிறித்தவத்தின் சவாலை எதிர் கொள்வதிலும் ஜமாஅத் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கிறது. சிராலியோன் நாட்டின் மக்கள் குடியமைப்பு, பொதுப்பணித்துறை அமைச்சர் மரியாதைக்குரிய சீஃப் கண்டே புராஹ் ஜமாஅத்தின் பணிகளைப் பாராட்டிப் பின்வருமாறு கூறுகிறார்.

“இன்று சிராலியோனில் நாட்டுப் பணியாற்றுவதில் ஏதாவதொரு முஸ்லிம் அமைப்பு தீவிரமாக ஈடுபட்டு வருகிறதென்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தும் அதன் பிரச்சாரகர்களும் தான் என்பதை என்னால் ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. அஹ்மதிய்யா பிரச்சாரகர்கள் இந்த நாட்டுக்கு வந்து கிறித்தவ அமைப்புகளின் பிரச்சாரத் தாக்குதல்களுக்கு எதிராக இஸ்லாத்தைப் பாதுகாத்திருக்காவிட்டால், தற்காப்பில் ஈடுபட்டிருக்காவிட்டால் இப்போது இந்தப் பகுதிகளில் இஸ்லாத்தின் பெயரைத்தவிர எதுவும் எஞ்சியிருக்காது என்பதையும், ஒருவரும் அதனோடு தம்மைத் தொடர்பு படுத்திக் கொள்ள விரும்பியிருக்க மாட்டார் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளாவிட்டால் அது அநீதியாக இருக்கும்.”

கானாவில் இப்போது கிறித்தவத் தலைவர்கள் நம்பிக்கை இழந்து காணப்படுகின்றனர். இந்தக் கண்டத்தில் கிறித்தவத்தின் வெற்றி என்ற நீண்ட நாள் எதிர்பார்ப்பு இப்போது வீணாகிக் கொண்டிருக்கிறது.

‘கிறிஸ்துவும் முஹம்மதும்’ என்ற தனது நூலில் S.G.வில்லியம்ஸன் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.

“அஷாந்தியிலும் கோல்ட் கோஸ்டின் தென் பகுதியிலும் கிறித்தவம் தற்போது முன்னிலையில் இருந்து வருகிறது. ஆனால் சில பகுதிகளில், குறிப்பாகக் கடற்கரைப் பகுதிகளில், அஹ்மதிய்யா ஜமாஅத் மிகப் பெரிய முன்னேற்றம் கண்டுவருகிறது. வெகு விரைவில் கோல்ட் கோஸ்ட் கிறிஸ்தவமாகிவிடும் என்று பொதுவாக மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கை நாம் நினைப்பதை விட மிகுந்த அபாயத்தில் இருக்கிறது.”

“கிறிஸ்தவத் திருச்சபைக்கு மிகப் பெரிய சவால் இருக்கிறது என்பதில் சந்தேகம் கொள்ளமுடியாது. ஆப்பிரிக்காவை ஆளப்போவது சிலுவையா இளம்பிறையா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.”

மேலும் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள எங்கள் ஜமாஅத்துகள் பெரும்பாலும் தன்னிறைவு பெற்றவையாக விளங்குகின்றன. அவர்களுடைய தேவைகளுக்கான நிதியை தாமே உள்ளூரிலேயே பெற்றுக்கொள்கின்றன. கானாவின் ஆண்டு பட்ஜெட் மட்டுமே **66,370** பவுண்ட்களாக உள்ளது. (**1976** ஆம் ஆண்டு நிலைமை) இது இஸ்லாத்திற்காக ஆப்பிரிக்க முஸ்லிம்கள் காட்டும் தியாக உணர்வைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

லைபீரியா, டோகோலாண்ட், ஐவரி கோஸ்ட் மற்றும் காம்பியா போன்ற இடங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முறையான அமைப்புகள்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்கெல்லாம் ஆப்பிரிக்கர்கள் தொடர்ந்து இஸ்லாத்தைத் தழுவி வருகின்றனர்.

**1924** ஆம் ஆண்டு கிழக்கு ஆப்பிரிக்காவில் எங்களுக்கு எந்த அமைப்பும் இருந்ததில்லை. இப்போது கண்டத்தின் அந்தப் பகுதியில் எங்கள் ஜமாஅத் ஓர் முக்கியமான சக்தியாக விளங்குகிறது. கென்யா, உகாண்டா, தாங்கனிகா ஆகிய இடங்களில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. காங்கோ, மத்திய ஆப்பிரிக்கா ஆகியவற்றோடு பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த ஜமாஅத் கிழக்கு ஆப்பிரிக்காவின் மக்கள் தொடர்பு மொழியான ஸ்வாஹிலி மொழியில் திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த மொழிபெயர்ப்பு இந்தக் கண்ட வரலாற்றின் மார்க்க இலக்கியத்திற்கு ஆற்றிய ஒரு மிகப் பெரும் சேவையாக எப்போதும் ஒளிரும். லுகாண்டா, கிகுயோ மற்றும் சில மொழிகளில் மொழி பெயர்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விஸா பெறுவதிலுள்ள கட்டுப்பாடுகளின் காரணமாகத் தென் ஆப்பிரிக்காவுக்கு எங்களால் பிரச்சாரகர்களை அனுப்ப முடியவில்லை. ஆனால் உள்ளூர் அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இஸ்லாமிய மார்க்கப் பணி ஆற்றி வருகின்றனர்.

டென்மார்க், ஜெர்மனி, ஹாலந்து, ஸ்விட்சர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய பிரச்சார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலண்டன், திஹேக், ஹாம்பர்க், ஃப்ராங்க்ஃபர்ட் ஆகிய இடங்களில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. ஸூரிச்சில் தற்போது பள்ளிவாசல் கட்டப்பட்டு வருகிறது. ஐரோப்பாவில் மேலும் சில பள்ளிவாசல்கள் கட்டும் திட்டமும் இருக்கிறது.

ஆங்கிலம், டச்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஃபிரென்ச் மொழிபெயர்ப்பு அச்சில் உள்ளது. டேனிஷ் மொழியிலும், ரஷ்ய மொழியிலும் மொழிபெயர்ப்புகள் தயாராகி வருகின்றன. இதில் டேனிஷ் மொழிபெயர்ப்பில் பத்து பாகங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டன. இஸ்லாமிய இலக்கியங்கள் ஐரோப்பிய மக்களுக்கு எளிதில் கிடைக்கும் விதத்தில் இஸ்லாத்தைப் பற்றிய பல நூல்கள் பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இதேபோல், அமெரிக்கா, ஃபிஜி தீவுகள், இந்தோனேஷியத் தீவுக்கூட்டங்கள், சிங்கப்பூர், மலேயா, சிலோன், பர்மா, மொரீஷியஸ் மற்றும் உலகின் பல பாகங்களில் இப்போது ஜமாஅத்தின் பிரச்சார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னுள்ள இஸ்லாத்தின் நிலையைக் காணுகின்ற ஒருவர் அந்நேரத்தில் அதன் பரிதாபமான, பலவீனமான நிலையைக் கண்டு திகைத்துப் போவார். அதன் மரணம் தவிர்க்க முடியாதது என்று கிறித்தவப் பிரச்சாரகர்கள் நம்பிக்கையோடு இருந்தனர். அதன் முடிவு சமீபத்தில் இருக்கிறது என வெளிப்படையாக அறிவித்தனர்.

நம்பிக்கை தளர்ந்த அந்நேரத்தில் அஹ்மதிய்யா இயக்கத்தின் தோற்றுநரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அவர்கள் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காகத் தாம் தோன்றியிருப்பதாகவும், அது மீண்டும் வெற்றியோடு உதித்தெழுந்து மனித இனத்தின் உள்ளங்களை ஆட்சி செய்யும் என்று முன்னறிவிப்புச் செய்தார்கள்.

அந்த முன்னறிவிப்பு முற்றிலும் உண்மையாகியிருக்கிறது. இப்போது இஸ்லாத்திற்குச் சாதகமான அலை அடிக்கின்றது. ஒரு காலத்தில் கிறித்தவர்களின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்த இஸ்லாம் இப்போது முன்னிலை வகிக்கின்றது. கிறித்தவம் அதன் முன் பின்வாங்கிச் செல்கின்றது.

கிறித்தவ எழுத்தாளர்கள் இஸ்லாத்தின் வெற்றியை வெளிப்படையாக ஒப்புக் கொள்கின்றனர். ஹௌஸ்டன் ஸ்மித் எழுதிய ‘மனிதனின் மார்க்கங்கள்’ என்ற நூலின் சுருக்கத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கீழே தருகிறோம். இஸ்லாத்தைப் பற்றிய அதிகாரத்தின் இறுதியில் அதன் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்:-

“இந்நூலில் நாம் ஆய்வு செய்துள்ள சில மார்க்கங்கள் மறைந்துவிடும் அல்லது அழிவுப் பாதையில் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். ஆனால் இஸ்லாம் அப்படியல்ல. உலகின் பெரிய மார்க்கங்களில் மிகவும் இளமையான அது மீண்டும் இளமைக்கேயுரிய ஆற்றலோடும் வீரியத்தோடும் எழுச்சிபெற்று இருக்கிறது. அட்லாண்டிக் பெருங்கடலில் மொரோக்கோ முதல் கிழக்கே எகிப்து, மத்திய கிழக்கு நாடுகள், பாகிஸ்தான், இந்தோனேஷியாவிலிருந்து

பசிஃபிக் பெருங்கடலில் உள்ள ஃபிலிப்பைன்ஸ் வரையுள்ள நாடுகளில் இஸ்லாம் தற்போதைய உலகில் ஓர் ஆற்றல்மிக்க சக்தியாகத் திகழ்கிறது. இந்தப் பகுதியில் எண்ணிக்கையைப் பொருத்த அளவில் முப்பத்தைந்து கோடியாக உள்ளது. இன்றைய உலகில் ஏழில் ஒருவர் அந்த மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார். மேற்கத்திய உலகால் போட்டியிட முடியாத அளவுக்கு விரிவான அளவுக்கு அது சிந்தனையையும் செயலையும் வழி நடத்துகிறது. இஸ்லாம் தன்னுடைய நிலையை உறுதிப்படுத்த மட்டும் செய்யவில்லை; அது மிகவும் வேகமாக வளர்ந்தும் வருகிறது. **1773** ஆண்டிலேயே கோத்தே ஒரு கவிதை எழுதினார். அதில் முஹம்மது அவர்களைத் தமது சகோதரர்களை தெய்வீகத் தந்தையை நோக்கி அழைத்துச் செல்லும் எப்போதும் பெருகி ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நீரோடைக்கு ஒப்பிட்டுக் கூறினார். இப்போது இஸ்லாம் ஆப்பிரிக்காவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் மட்டும் பரவவில்லை. மாறாக, சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் ஓரளவுக்குப் பரவிக் கொண்டிருக்கிறது. சிலர் அதனை உலகில் மிக வேகமாக வளரும் ஒரு மார்க்கம் என்று கூறுகின்றனர். சமீபத்தில் **1947** ஆம் ஆண்டு **7** கோடி மக்களைக் கொண்ட பாகிஸ்தான் என்னும் புதிய முஸ்லிம் நாடு உருவாகியிருக்கிறது. *இஸ்லாமும் கிறித்தவமும் மதமாற்றம் செய்வதற்காகப் போட்டியிடும் சில பகுதிகளில் ஒன்றுக்குப் பத்து என்ற விகிதத்தில் இஸ்லாம் முன்னணியில் இருக்கிறது.*” (எழுத்துக்களின் சாய்ந்த வடிவம் நம்முடையது)

இந்த இயக்கத்தின் தோற்றுநர் முன்னறிவித்தது போன்று குழப்பமிக்க இன்றைய உலகு இஸ்லாத்தில் அடைக்கலம் தேடுகின்ற நாள் வெகு தூரத்தில் இல்லை என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

இச்சிறு நூல் இஸ்லாமியப் போதனைகளின் சாராம்சமாக இருப்பதுடன் இக்காலத்தில் தோன்றிய சீர்திருத்தவாதியான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களின் வாதத்தை விவரிப்பதுடன் அறிவுபூர்வமான வாதங்களின் மூலம் அதை நிரூபிக்கவும் செய்கிறது என்பதை இறுதியாகக் கூறிக்கொள்கிறோம்.

மிர்ஸா வஸீம் அஹ்மது
நாஸிர் தஃவத் வ தப்லீக்
காதியான், பஞ்சாப், இந்தியா

بسم الله الرحمٰن الرحيم

نحمده ونصلى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

# அஹ்மதிய்யா இயக்கம்

இறைவனின் அருளாலும் கருணையாலும்!
அவனே உதவியாளன்.

அவனை முழுமையாக அறிவதற்கும், அவனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேவையான ஆற்றல்களை நமக்கு வழங்கிய இறைவனின் எல்லையற்ற கருணையை நான் முதலில் ஒப்புக் கொண்டாக வேண்டும். அவனை உணர்ந்து கொள்வதற்கான அறிவுப் பாதைகளைத் திறந்து தந்தமைக்காகவும், அவனை அடைவதற்கான பாதையைக் காட்டித் தந்ததற்காகவும் அவனுக்கு நான் எண்ணற்ற நன்றிகளைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். அடுத்து பிரிட்டிஷ் பேரரசில் உள்ள சர்வ சமய மாநாட்டின் அமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டபடி என்னுடைய கருத்துக்களை அதாவது அஹ்மதிய்யத்தைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறத் துவங்குகிறேன்.

## அஹ்மதிய்யத் என்றால் என்ன?

பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலகிற்கு வழங்கப்பட்டதும், திருக்குர்ஆனின் கட்டளைகளின் வழி நிர்மாணிக்கப்பட்டதுமான இஸ்லாமே அஹ்மதிய்யத் ஆகும். கடந்து சென்ற நூற்றாண்டுகளில் பல

புதுமைகளும், இடைச்செருகல்களும் இஸ்லாத்தில் நுழைந்துவிட்டன. மறுபுறம் அதன் பல அம்சங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. இதன் விளைவாக அவை கண்டு கொள்ளப்படாமல் இருக்கின்றன. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இத்தகைய இடைச்செருகல்கள் அனைத்தையும் அகற்றினார்கள். மக்கள் தங்கள் இறையச்சமின்மையின் காரணமாகப் பெற முடியாமல் இருந்த திருக்குர்ஆனின் வசனங்களில் மறைந்து கிடந்த ஆன்மீக உண்மைகளின் செல்வத்தைக் கண்டு பிடித்து வெளியிட்டார்கள். வேறொரு வார்த்தையில் சொல்வதென்றால், மறக்கப்பட்டுத் தன் உண்மை வடிவத்தை இழந்து நின்ற நிலையில் இறை வழிகாட்டலுக்கிணங்க வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உலகிற்கு வழங்கிய உண்மை இஸ்லாமே அஹ்மதிய்யத் ஆகும்.

## இயக்கத்தின் தோற்றமும் அதன் தற்போதைய வளர்ச்சியும்

அஹ்மதிய்யா இயக்கம் என்பது ஒரு பழம்பெரும் இயக்கமல்ல. அது துவங்கப்பட்டு **34** ஆண்டுகள் தாம் ஆகின்றன. இந்த இயக்கம் இறைவனின் கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களால் **1890** ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட இமாம் மஹ்தியும், பைபிளிலும் சில இஸ்லாமிய நூல்களிலும் முன்னறிவிக்கப்பட்ட மஸீஹும், இறுதிக் காலத்தில் தோன்றவிருப்பதாக எல்லா இறைத்தூதர்களாலும் முன்னறிவிக்கப்பட்ட வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியும்

தாமே என்று அவர்கள் வாதித்தார்கள். அவர்கள் பெற்ற இறையறிவிப்புகளில் இறைவன் அவர்களை நோக்கி இவ்வாறு கூறினான்.

بشارة تلقاها النّبیّون۔ جری اللہ فی حلل الانبیاء۔ الحمد للہ الذی جعلك المسیح ابن مریم۔لا یسئل عما یفعل وھم یسئلون۔ انت الشیخ المیسح الّذی لا یضاع وقتہ۔

برہمن اوتار سے مقابلہ اچھا نہیں  اے کرشن رود گوپال تیری مہما گیتا میں ہے

“உம்முடைய தோற்றத்தில் முன்சென்ற இறைத் தூதர்களின் முன்னறிவிப்புகள் நிறைவேறியுள்ளன. நீர் அனைத்து இறைத்தூதர்களின் ஆடைகளினால் போர்த்தப்பட்டிருக்கிறீர். (அதாவது நீர் அவர்களின் ஆற்றல்களாலும், உணர்வாலும் நிரப்பப்பட்டிருக்கிறீர்). உம்மை மஸீஹ் இப்னு மர்யமாக ஆக்கிய இறைவனுக்கே எல்லாப் புகழும். அவன் ஏன் அவ்வாறு செய்தான் என்று யாரும் அவனைக் கேட்க முடியாது. ஆனால் அவனது தீர்ப்புக்குக் கட்டுப்படத் தவறியதற்காக மக்கள் விசாரிக்கப்படுவர். நீரே தலைவரும், மஸீஹும் ஆவீர்! உம்முடைய நேரமும் உழைப்பும் வீணாகக் கழியாது. பிராமணர்களின் அவதாரங்களையொத்த இறைத்தூதரை மக்கள் எதிர்ப்பது நல்லதல்ல. ஆசீர்வதிக்கப்பட்ட கிருஷ்ணனே! பசுக்களின் பாதுகாவலனே! உன் மகிமை கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது.”

மனித இனத்தின் புது வாழ்வுக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், கிருஷ்ணராகவும், பிரம்ம அவதாரமாகவும், அனைத்து இறைத் தூதர்களின் முன்னறிவிப்புகளையும் நிறைவேற்றுபவராகவும் இறைவன்

அவர்களை நியமித்திருக்கின்றான் என்று இந்த இறையறிவிப்புகள் காட்டுகின்றன.

ஆரம்பத்திலிருந்தே எல்லாப் பிரிவினரிடமிருந்தும் அனைத்து வகுப்பாரிடமிருந்தும் அவர்களுக்குக் கடுமையும் உறுதியும் மிக்க எதிர்ப்பு இருந்து வந்தது. ஆனால் அவர்களுடைய பணி தொடர்ந்து முன்னேறி வந்ததுடன் மேலும் மேலும் வெற்றியும் பெற்று வந்தது. இஸ்லாத்தின் வெற்றி வீரரான அவர்களது தோற்றத்தைக் கண்டு போற்றி மகிழ வேண்டிய முஸ்லிம்கள் இன்றும் அவர்களது கொடிய எதிரிகளாக விளங்கி வருகின்றனர். முஸ்லிம் ஆலிம்கள் அவர்களைப் பொய் வாதியென்றும், மதத்தை விட்டு வெளியேறியவர் என்றும் கூறி அவர்களுக்கு எதிராக மார்க்கத் தீர்ப்பு வழங்கினர். அவர்களுடைய நூல்களைப் படிப்பதும், அவர்களோடு பேசுவதும், ஏன் அவர்களோடு கை குலுக்குவதும் கூட ஒருவரை இஸ்லாமிய வட்டத்திலிருந்து வெளியேற்றுவதற்குப் போதுமான கடுமையான குற்றங்கள் என அறிவிக்கப்பட்டன. ஒருவர் அஹ்மதியாக மாறினால் அதுவே அவரது திருமணத்தை முறிப்பதற்குப் போதுமான காரணமாகும் என்றும், அஹ்மதிகளைத் தாக்குவதும், அவர்களுடைய பொருளைக் கொள்ளை அடிப்பதும் ஆகுமானது மட்டுமல்லாமல், அவை இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்குப் போதுமான வழிகளுமாகும் என்று மார்க்கத் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. சொல்வதற்கே கூசுகின்ற மானக்கேடான வெட்கங்கெட்ட பல செயல்களை இப்படிப்பட்டத் தீர்ப்புகள் தூண்டிவிட்டன. எந்த விதமான தியாகமும் செய்யாமல் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்குக் கிடைத்த இது போன்ற வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்த பாமர மக்கள் இந்தப்

பொன்னான வாய்ப்பை நழுவ விட வாய்ப்பில்லை. இந்தத் தீர்ப்புகள் வெளிவந்த மறுகணமே அவர்கள் அதனைச் செயல்படுத்தத் துவங்கினர். இதன் விளைவாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட சிறு எண்ணிக்கையிலான மக்களின் வாழ்க்கை தொடர்ந்து இன்னலுக்கு ஆளானது. இந்த இயக்கத்தின் மீது நன்னம்பிக்கை கொண்டிருந்த மக்கள் அச்சத்திற்காளாகினர்.

கிறித்தவர்கள், ஆரியர்கள், சீக்கியர்கள் ஆகியோரும் அன்னாரை எதிர்ப்பதில் சளைத்தவர்களாக இல்லை. அன்னாருக்கு எதிராக இவர்கள் வெளியிட்ட துண்டறிக்கைகளிலும், பிரசுரங்களிலும் உள்ள விஷயங்கள் மீண்டும் எடுத்துக் கூற நாகரீகம் தடுக்கும் அளவுக்கு அசிங்கமும் ஆபாசமும் நிறைந்தவையாகக் காணப்பட்டன.

மக்களிடம் காணப்பட்ட கண்மூடித்தனமும் ஆராய்ந்து பார்க்கும் ஆற்றலற்ற தன்மையும் அன்னாருக்கு எதிரான கருத்துக்களை எழுதும் பழக்கம் கொண்ட மக்களுக்கு அன்னாருக்கு எதிராக எல்லாவிதமான பொய்களையும் அவிழ்த்து விடும் துணிச்சலைத் தந்தன. அன்னாருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எதிராகப் பொய் குற்றச்சாட்டுகளை அவிழ்த்து விடத் தயங்காத துணிச்சலைத் தந்தன. அரசாங்க ஆவணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அக்குற்றச்சாட்டுகளின் பொய்மை உறுதியாக நிரூபணமாயின.

இந்த இயக்கத்தைப் பற்றி அரசாங்கம் கொண்டிருந்த பார்வையும் சரியானதாக இருக்கவில்லை. உதாரணமாக அன்னார்மீது எழுப்பப்பட்ட மிகச்

சாதாரணமான குற்றச்சாட்டுகளில் ஒன்று அவர் மிகத் தாழ்ந்த நிலையிலான பின்புலத்தைக் கொண்டவர்; வாழ்க்கை வசதி அற்றவர்; மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதற்காகவே தாமே மஸீஹ் என்ற வாதத்தைக் கண்டுபிடித்தார். தாம் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற அவருடைய கூற்றுக்கள் எல்லாமே பொய்யானவை. அவையெல்லாம் அவரது திட்டத்தின் அம்சமாகும் என்பதாகும்.

ஆனால் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஆவணங்கள் அன்னாரது குடும்பத்தின் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும், அன்னாரது குடும்பம் பஞ்சாப் தலைவர்களின் குடும்பங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது என்பதற்கும் சான்று பகர்ந்தன. வெகு தொலைவில் வாழ்ந்த மக்கள் இது போன்ற அவதூறுகளால் எளிதாக ஏமாற்றப்பட்டனர். இத்தகைய பொய்களை நடைமுறையாகக் கொண்ட ஒருவர் இத்தகைய புனிதமான உயர்ந்த இடத்திற்கு எவ்வாறு நியமிக்கப்பட்டார் என்று புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருந்தனர்.

இத்தனை எதிர்ப்புகள் இருந்தபோதிலும் மக்களின் உள்ளங்கள் இந்த இயக்கத்தின் தூய நிறுவனரை நோக்கி ஈர்க்கப்பட்டன. அன்னாரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டவர்களும், அன்னாரின் நூல்களைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றவர்களும் அன்னாரின் உண்மையால் கவர்ந்திழுக்கப்பட்டனர். இவ்வாறு தாமே வரவேண்டிய மஸீஹ் என்ற தமது வாதத்தை வெளியிட்டதிலிருந்து பதினெட்டு ஆண்டுகளுக்குப்பின் **1908** ஆம் ஆண்டு அன்னார் மரணித்தபோது அன்னாரைப் பின்பற்றியோரின் எண்ணிக்கை நாற்பதிலிருந்து பல இலட்சங்களாகப்

பெருகியது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தோர் ஆப்கானிஸ்தான், பர்மா, இலங்கை, ஆப்பிரிக்கா போன்ற இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடுகளிலும் காணப்பட்டனர்.

அன்னாரின் மரணத்திற்குப்பின் அன்னாரின் முதல் கலீஃபாவும், என்னுடைய மரியாதைக்குரிய ஆசிரியருமான ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் (ரலி) அவர்களின் காலத்தில் இந்த இயக்கம் தொடர்ச்சியான நிலைத்த வளர்ச்சியைக் கண்டது. முதல் கலீஃபாவின் மரணத்திற்குப்பின் இதனை எழுதுகின்ற நான், இறைவனருளால், இயக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் இவ்வியக்கம் இன்னும் வேகமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றது.

தற்போது இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, கோல்ட்கோஸ்ட், எகிப்து, பாரசீகம், புகாரா, மொரீஷியஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இந்த இயக்கத்தின் முறையான அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிற்கு வெளியே ஆப்கானிஸ்தான், புகாரா, பாரசீகம், மொஸபடோமியா, ஹிஜாஸ், சிரியா, எகிப்து, அல்ஜீரியா, ஸான்ஸிபார், கென்யா, உகாண்டா, நேடால், கோல்ட் கோஸ்ட், சிராலியோன், நைஜீரியா, சிலோன், பர்மா, ஸ்ட்ரெய்ட்ஸ் காலனிகள், பிலிப்பைன்ஸ், மொரீஷியஸ், ஆஸ்திரேலியா, ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ஹாலந்து, அமெரிக்கா, டிரினிடாட், கோஸ்டா ரிகா ஆகிய நாடுகளில் அஹ்மதிய்யா இயக்கத்தின் அமைப்புகள் இருக்கின்றன.

ஆங்கிலத்தில் ஒரு பத்திரிகையும், உள்ளூர் மொழிகளில் ஐந்து செய்தித்தாள்களும், பத்திரிகைகளும் இயக்கத்தின் தலைமையகத்திலிருந்து

வெளியிடப்படுகின்றன. வங்காளத்திலிருந்து வங்காள மொழியில் ஒரு பத்திரிகையும், இலங்கையிலிருந்து ஒரு ஆங்கிலப் பத்திரிகையும், ஒரு தமிழ் பத்திரிகையும் வெளிவருகின்றன. மொரீஷியஸிலிருந்து ஃபிரஞ்ச் மொழியில் ஒரு பத்திரிகை வெளியிடப்படுகின்றது. அமெரிக்காவிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் பருவ இதழ் ஒன்று வெளியிடப்படுகின்றது. இங்கிலாந்திலிருந்தும் விரைவில் ஒரு பத்திரிகை வெளியிடப்படும். பத்து இலட்சம் பேர் இயக்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். எல்லா நாட்டினரும், எல்லா மதத்தினரும் இதில் அடங்குவர். கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், இந்துக்கள், யூதர்கள், ஸொராஸ்டியர்கள், இஸ்லாத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளனர்; இன்னும் இணைந்து வருகின்றனர். அமெரிக்காவில் இந்த இயக்கத்தின் அமைப்பு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் துவங்கப்பட்டது. இந்தக் குறுகிய காலத்திற்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமெரிக்காவில் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

## அஹ்மதிய்யா இயக்கத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையே உள்ள தொடர்பு

அஹ்மதிய்யா இயக்கத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையே உள்ள தொடர்பு கிறிஸ்தவ மதத்திற்கு அதன் ஆரம்ப காலத்தில் யூத மதத்துடன் நிலவிய அதே தொடர்பாகும். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் (அலை) அவர்களின் வாதங்களில் ஒன்று, அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பதாகும். இதனைக் கருத்தில் கொண்டால், கிறித்தவ மதம் யூத

மதத்திலிருந்து தோன்றிய இன்னொரு மதமாக இல்லாமல் அதன் தூய எளிய வடிவமாக இருப்பது போல், அஹ்மதிய்யத்தும் இஸ்லாத்திலிருந்து முளைத்தெழுந்த இன்னொரு மதமாக இல்லாமல் இஸ்லாம்தான் அஹ்மதிய்யத் என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும்.

இயேசு கூறுகிறார்: "நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு **5:17,18**)

அதேபோன்று மத்தேயு **8** ஆம் அதிகாரத்தில் இவ்வாறு காணப்படுகிறது. தொழுநோயாளியைக் குணப்படுத்திய பின் அவரிடம் இயேசு பின்வருமாறு கூறினார்.

"நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்." (மத்தேயு **8:4**)

மேலும் இயேசு தமது சீடர்களிடமும், பொதுமக்களிடமும் பின்வருமாறு கூறியதாகக் காணப்படுகிறது.

"வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற

யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள். சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்' (மத்தேயு **23:2,3**)

மலைப் பிரசங்கத்தின் இறுதியில் இயேசு இவ்வாறு கூறுகிறார்.

"இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாகும்" (மத்தேயு **7:12**)

மோசேயின் வேதப்பிரமாணமே மக்களை இப்போதும் கட்டுப்படுத்தக் கூடியதென்றும், வேதப்பிரமாணத்தைப் பின்பற்றும்படியே, இயேசு தமது சீடர்களுக்கும், மற்றவர்களுக்கும் போதித்தார் என்றும் இதிலிருந்து தெளிவாகின்றது. மேலும் தம்முடைய போதனைகளை வேதப்பிரமாணம், தீர்க்கதரிசிகளின் போதனைகள் ஆகியவற்றின் சுருக்கமேயென்றும், தனியான மார்க்கமல்ல என்றும் இயேசு கருதினார் என்பதையும் இந்த வசனங்கள் காட்டுகின்றன. சுவிசேஷங்களைக் கவனமாகப் படிக்கும்போது இயேசு ஒரு புதிய சட்டத்தையோ, புதிய மார்க்கத்தையோ நிறுவவில்லை என்பது தெளிவாகிறது.

அதேபோன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹும், ஒரு புதிய மார்க்கச் சட்டத்தையோ, புதிய மார்க்கத்தையோ கொண்டுவரவில்லை; இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை எடுத்துரைப்பவராகவே விளங்கினார். இயேசுவின் காலத்தில் மோசேயின் மார்க்கம் தம்முள் தோன்றிய புதுமைகளாலும், இடைச் செருகல்களாலும் மோசேயின் உண்மையான போதனைகளை எடுத்துக் கூறுவதை விட்டுவிட்டது போல் வாக்களிக்கப்பட்ட

மஸீஹின் காலத்தில் இஸ்லாமும் அதன் ஆரம்பகாலப் போதனைகளின் சாயலை இழந்தது.

இன்று கிறித்தவம் என்று அறியப்படுகின்ற மார்க்கம் உண்மையில் மோசேயின் போதனைகளை அப்படியே பிரதிபலிக்கின்றது என்று நான் கூறுவதாகக் கருதக் கூடாது. அதைவிட உண்மைக்கு மாறான ஒன்று இருக்க முடியாது. நான் கூறுவது என்னவென்றால் மோஸே போதித்ததையே இயேசுவும் போதித்தார்; வேறுபாடு என்னவென்றால் இருவரும் அவரவர் காலத்தில் கைவிடப்பட்டிருந்தவற்றின் மீது சிறப்பான கவனம் செலுத்தினர் என்பதேயாகும். தவ்ராத்தில் கருணை, பழிவாங்குதல் ஆகிய இரண்டைப் பற்றிய போதனைகள் காணப்படுகின்றன. ஆனால் மோசேயின் காலத்தில் யூத மார்க்கத்தை வாளால் அழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால், பழிவாங்குதல் தொடர்பான சட்டங்கள் அடங்கிய பகுதியைக் குறிப்பாக அவர் வலியுறுத்தினார். இயேசுவின் காலத்தில் யூத மதத்தின் எதிரிகள் யூத மதத்திற்கெதிராக வாளைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டார்கள்.

யூதர்களின் இயல்பு கடினமானதாகவும் இரக்கமற்றதாகவும் மாறிப் போயிருந்தது. எனவே இயேசு கருணைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்காளானார். இஸ்லாத்தின் நிலையும் இதுவேயாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எதிரிகள் இஸ்லாத்தை வாளால் அழிக்க முயற்சித்தனர். எனவே அன்னார் (ஸல்) வாளால் செய்யப்படும் ஜிஹாதின் அவசியத்தைக் கற்பிக்க வேண்டியதிருந்தது. தற்காலத்தில் ஒரு மதத்தை வாளால் பரப்பவோ அழிக்கவோ முனையும் பைத்தியக்காரத்தனம்

அனேகமாக மறைந்து விட்டது. தன்னை வாளால் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலையில் இஸ்லாம் இப்போது இல்லை. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் நட்பு, நல்லெண்ணம், நேர்மை ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததோடு மனித இனத்தின் உயர்வுக்காக நேரத்தையும் பணத்தையும் தியாகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

சுருக்கமாக, மோசேயோடும் யூத மதத்தோடும் இயேசுவுக்கும் கிறிஸ்தவத்திற்கும் என்ன தொடர்பு இருந்ததோ அதே தொடர்பு தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் அஹ்மதிய்யத்துக்கும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடும் திருக்குர்ஆனோடும் உள்ளது.

திருக்குர்ஆனில் இறைவன் கூறுவதாவது:

اِنَّآ اَرۡسَلۡنَآ اِلَیۡکُمۡ رَسُوۡلًا ۬ۙ شَاهِدًا عَلَیۡکُمۡ کَمَاۤ اَرۡسَلۡنَاۤ اِلٰی فِرۡعَوۡنَ رَسُوۡلًا

'இன்னா அர்ஸல்னா இலைக்கும் ரஸூலன் ஷாஹிதன் அலைக்கும் கமா அர்ஸல்னா இலா ஃபிர் அவ்ன ரஸூலா'

"நாம் ஃபிர்அவ்னிடம் ஒரு தூதரை அனுப்பியது போன்று நிச்சயமாக நாம் உங்களுக்குச் சாட்சியாக இருக்கக்கூடிய ஒரு தூதரை உங்களிடம் அனுப்பியுள்ளோம்" (சூரா முஸ்ஸம்மில்: **16**)

இந்த வசனத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மோசேயைப் போன்றவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட ஒரு தூதர் தோன்றுவதைப் பற்றி ஆதியாகமம் **18** ஆம் வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. அதில் காணப்படுவதாவது,

"உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்" (ஆதியாகமம் **18:18**)

இஸ்ரவேலர்களின் சகோதரர்களிலிருந்து-அதாவது இஸ்மவேலின் வழித்தோன்றல்களிலிருந்து-தோன்றியவரும், இறைவனின் வார்த்தைகள் வாயில் அருளப்பட்டவரும், மோசேயைப் போன்றவரும், மார்க்கச் சட்டம் கொண்டு வந்தவரும் ஆகிய அந்தத் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. எனவே முதல் மஸீஹ் மோசேயைப் பின்பற்றியவர்களிலிருந்து தோன்றியதைப் போன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹும் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியவர்களிலிருந்து தோன்ற வேண்டியது அவசியமாயிற்று. இயேசுவின் போதனைகளுக்கு மோசேயின் போதனைகளோடு இருந்த அதே தொடர்பு அன்னாரின் போதனைகளுக்கு இஸ்லாத்தோடு இருந்தது.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதத்தின் தன்மை

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதத்தின் சரியான தன்மை பற்றி இங்கு விளக்க வேண்டியது அவசியமாகும். இயேசு (அலை) இன்னும் உயிரோடு இருப்பதாகவும், விண்ணில் எங்கோ வாழ்வதாகவும், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்த உலகத்திற்குத் திரும்பி வருவார் எனவும் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் நம்புவதால் அவர்களிடம் வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றிக் கூறினால் அஹ்மதிகள் மறுபிறவிக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று கற்பனை செய்யும்

வாய்ப்பு உள்ளது. உண்மை என்னவென்றால், இயேசுவின் ஆன்மா தம்மிடம் மறுபிறவி எடுத்துள்ளது என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதிக்கவில்லை. அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதித்தபோது இயேசுவின் ஆற்றலிலும் உணர்விலும் தாம் தோன்றி இருப்பதாகவே கூறினார்கள். ‘இரண்டாவது வருகை’ பற்றிய கேள்விக்கு இயேசுவே விடையளித்திருக்கிறார். மஸீஹின் தோற்றத்திற்கு முன்னர் எலியா இரண்டாவது முறை தோன்றுவார் என்று யூதர்கள் நம்பி வந்தனர். எலியாவின் இந்த இரண்டாவது வருகை மஸீஹின் தோற்றத்திற்கு ஒரு முன் நிபந்தனையாக மல்கியாவில் கூறப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

“இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.” (மல்கியா **4:5**)

ஆனால் நடந்ததோ இயேசு தோன்றினார்; வானத்திலிருந்து எந்த எலியாவும் இறங்கி வரவில்லை. இதைப் பற்றி இயேசுவிடம் கேட்டபோது அவர் பின் வருமாறு பதில் அளித்தார்:

“நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளும் யாவரும் யோவான் வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு.

நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால் வருகிறவனாகிய எலியா இவன் தான்.”

(மத்தேயு **11:13,14**)

இவ்வாறு வானத்திலிருந்து இறங்கி வரும் ஒரு தீர்க்கதரிசியின் இரண்டாவது வருகையைப் பற்றித் தீர்க்கதரிசனங்கள் பேசினால் உண்மையில் ‘அவரைப் போன்ற’ ஒருவரையே அவை குறிக்கும். இயேசுவின்

இரண்டாவது வருகையும் இவ்வாறே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இது ஒரு சம்பவத்திலிருந்து ஊகித்துணரப்பட்ட கருத்து மட்டும் அல்ல. தமது இரண்டாவது வருகை என்பதன் மூலம் தாம் அல்லாத இன்னொரு தீர்க்கதரிசியின் வருகையைப் பற்றியே இயேசு எப்போதும் குறிப்பிட்டார் என்பதைக் காட்டக் கூடிய நேரடியான சான்றும் உள்ளது. அவரே கூறுகிறார்:

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு **23:39**)

அவருடைய நாமத்தில் ஒருவர் தோன்றப்போகிறார் என்று நம்புபவர்கள் மட்டுமே மஸீஹை மீண்டும் காணமுடியும் என்றும் அதே இயேசுவே மீண்டும் வரவேண்டும் என்ற நம்பிக்கையை விடாது பற்றிக் கொண்டிருப்போர் தொடர்ந்து காத்துக் கொண்டிருக்கவே வேண்டும் என்றும் அவர்களது காத்திருப்பு வீணாகத்தான் போகும் என்றும் இந்த வசனங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

இனி இயேசுவின் இரண்டாவது வருகையின் காலம் தொடர்பாக எழுதப்பட்டுள்ளவை அனைத்தும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் காலத்திலும் அவர்களின் கரங்களிலும் நிறைவேறினவா என்று நாம் பார்க்க வேண்டும். அப்போது போர்கள் நிகழும் என்று கூறப்பட்டிருந்தது. இதுவரை கண்டிராத அளவுக்கு ஏராளமான போர்கள் நடைபெற்றன; குறிப்பாகக் கடந்த உலகப்போர். கொள்ளை நோய்கள்

பரவும் என்று கூறப்பட்டிருந்தது; சுகாதாரத்தில் உலகம் கண்டுள்ள மிகப் பெரிய முன்னேற்றதிற்குப் பின்னும் காய்ச்சலாலும், பிளேக் நோயாலும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அழிவுகள் ஏற்பட்டுள்ளன. நில நடுக்கங்கள் ஏற்படும் என்று கூறப்பட்டிருந்தது; இந்த அளவு தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் உள்ள நில நடுக்கங்கள் இதற்கு முன் இதைப் போன்ற இரண்டு மடங்கு கால கட்டத்திலும் ஏற்பட்டதில்லை என்பதை நாம் காண்கிறோம். பஞ்சங்கள் ஏற்படும் என்று கூறப்பட்டிருந்தது; போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்குப் பின்னரும் உலகின் சில பகுதிகள் மோசமான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் சூரியனும் சந்திரனும் இருண்டுவிடும் என்றும், நட்சத்திரங்கள் கீழே விழும் என்றும் எழுதப்பட்டிருந்தது; இந்த அடையாளங்கள் தெளிவாக நிறைவேறி விட்டன. முன்னறிவித்தவாறே சூரியனுக்கும், சந்திரனுக்கும் **1894** ஆம் ஆண்டு கிரகணம் ஏற்பட்டது. மேலும் அவருடைய காலத்தில் எரி நட்சத்திரங்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துவிட்டன.

மேலும் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்று முன்னறிவிப்புகளில் கூறப்பட்டபடியே, மார்க்கங்களின் தாக்கம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆன்மீக விஷயங்கள் குறித்து மக்களிடம் எந்த அக்கறையும் இல்லை. மஸீஹின் தோற்றத்தை முன்னறிவிக்கும் இந்த அனைத்து முன்னறிவிப்புகளும்

இக்காலமே மஸீஹ் தோன்றியிருக்க வேண்டிய காலம் என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

## வாக்களிக்கப்பட்ட ஒருவர் தோன்றவேண்டிய காலம் இதுவே என்பதற்கான காலத்தின் சாட்சியம்

கடந்த கால முன்னறிவிப்புகள் மட்டுமல்லாது இன்றைய உலகின் நிலையும் ஒரு தீர்க்கதரிசி தோன்ற வேண்டியதின் தேவையை வலியுறுத்துகின்றன. ஏனென்றால் தீர்க்கதரிசிகள் தொடர்பாக நாம் படிக்கும் ஒளியையும் நம்பிக்கையையும் இன்று எங்கே காணமுடிகிறது? தீர்க்கதரிசிகளின் கைகளிலும், அவர்களின் தோழர்களின் கரங்களிலும் மக்கள் வழக்கமாக கண்டுவந்த அடையாளங்களையும் அற்புதங்களையும் யார் நிகழ்த்திக் காட்டுவார்? எல்லா மார்க்க நூல்களிலும் ஏராளமான விஷயங்கள் எழுதப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். ஆனால் அவற்றிற்கான நடைமுறைச் சான்றுகளை நாம் எங்கே காண்பது? மோசேயின் தோழர்கள் பெற்றிருந்த தீர்க்கதரிசனத்தின் வெகுமதிகள் எங்கே போயின? இயேசுவின் சீடர்கள் வழக்கமாக காட்டி வந்த அடையாளங்கள் எங்கே?

எல்லா மார்க்க நூல்களும் உயிருள்ள ஓர் இறைவனைப் பற்றிப் பேசுகின்றன. அந்த உயிருள்ள இறைவன் இன்றும் வாழ்கிறானா? மோசேயின் சீடர்களோடு ஜெஹோவா கொண்டிருந்த அதே உறவையும், சீடர்களோடு விண்ணகத் தந்தை வைத்திருந்த உறவையும், ஸொராஸ்ட்ரியர்களோடு யஸ்தான் கொண்டிருந்த உறவும், முஸ்லிம்களோடு

அல்லாஹ் கொண்டிருந்த அதே உறவையும் அந்த இறைவன் தனது அடியார்களுடன் இன்றும் வைத்திருக்கின்றானா? இல்லை என்றால் இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் கூற முடியும்? இந்த மாற்றம் இறைவனிடம் ஏற்பட்டுள்ளதா அல்லது மனிதனிடம் ஏற்பட்டுள்ளதா?

இந்தக் கேள்வியை எதிர்கொள்வதையும் மாற்றம் நிகழ்ந்துவிட்டதை ஒப்புக்கொள்வதையும் தவிர்ப்பதற்கு, பல்வேறு மதங்களின், மார்க்கங்களின் வேத நூல்களில் அடங்கியுள்ள விஷயங்களுக்கு விளக்கம் கொடுப்பதையும், பல்வேறு மார்க்க நூல்களில் அடங்கியுள்ள வசனங்களுக்கு அவற்றிற்குப் பொருந்தாத பொருளைக் கொடுப்பதையும் நாம் காண்கிறோம். விளக்கம் அளிப்பதற்குத் தேவை ஏற்படும் முன் விளக்கம் அளிப்பதற்கான இடம் இருக்கவேண்டும். வசனங்கள் இடம்பெறுகின்ற இடங்களில் வார்த்தைகள் அடையாள மொழியிலோ உருவகமாகவோ பயன்படுத்த பட்டிருக்கின்றன என்றாலோ அல்லது இதே போன்ற வார்த்தைகள் வேறு இடங்களில் அவற்றின் சொற்பொருளல்லாத வேறு விளக்கத்தைப் பெற்றிருக்கின்றன என்றாலோ கொடுக்கப் படுகின்ற விளக்கம் நியாயமானதாக இருக்கும். அல்லது ஒரு குறிப்பிட்ட விதத்தில் புரிந்து கொள்ளப்படும் ஒரு மரபுத் தொடர் அதன் மேலெழுந்தவாரியான பொருளை விடுத்து வேறொரு பொருளைத் தரும். அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒரு குறிப்பிட்ட விதத்தில் தான் நடைபெற்றது; வசனங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கும் விதத்தில் நடைபெறவில்லை என்று உறுதியாகத் தெரிவிக்கும் சான்றுகள் நம் கைக்குக் கிடைக்க வேண்டும். அல்லது

கூறப்பட்டுள்ள விஷயம் நிரூபிக்கப்பட்ட மறுக்கமுடியாத உண்மைக்கோ வரையறுக்கப்பட்ட தெய்வீகச் சட்டத்திற்கோ முரணானதாக இருக்க வேண்டும். இந்த வகையான சந்தர்ப்பங்களில் எல்லாம் அந்த வசனங்கள் தெரிவிக்கும் உண்மையான பொருளைக் கண்டு பிடிப்பதற்காக வார்த்தைகளுக்கு அவற்றின் சொற்பொருளைத் தராமல் விளக்கம் தரவேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாவோம். ஆனால் பல நூற்றாண்டுகளாக எல்லா மார்க்கங்களாலும் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளை நாம் எப்படி மறுக்க முடியும்?

இறைவன் தன் அடியார்களோடு இந்த விதத்தில் பேசினான் அல்லது அந்த விதத்தில் பேசினான் என்றோ இந்த விதத்தில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினான் அல்லது அந்த விதத்தில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினான் என்றோ தன்னுடைய அடியார்களோடு அவன் கொண்டிருந்த உறவின் தன்மை இப்படி இருந்தது அல்லது அப்படி இருந்தது என்றோ கூறமுடியும். ஆனால் எந்தவிதமான சந்தேகத்திற்கோ தவறான புரிதலுக்கோ இடம் கொடுக்காத விதத்தில் இறைவன் மனிதனோடு பேசவே இல்லை என்றோ ஒரு குறிப்பிட்ட மார்க்கம் அல்லது தீர்க்கதரிசியின் உண்மையை உறுதியாக நிலைநாட்டும் விதத்திலான அற்புதங்களை நிகழ்த்தவே இல்லை என்றோ நம்மால் கூறமுடியாது. சென்ற காலத்தில் இறைவனுக்கும் அவனது அடியாருக்கும் இடையே இருந்த உறவு சாதரணமாகப் புரிந்து கொள்ளப்படும் அல்லது ஒப்புக்கொள்ளப்படும் ஒன்றிலிருந்து மாறுபட்ட தன்மையைக் கொண்டிருந்தது என்று வேண்டுமானால் நாம் கூறமுடியும்.

ஆனால் பல்வேறு மார்க்கங்களின் வேத நூல்களைப் படித்துப் பார்த்தபின் உயிருள்ள ஓர் இறைவன் இருக்கிறான் என்பதையும் அவன் தான் நேசிக்கின்ற அடியார்களுக்குத் தன்னுடைய வல்லமையையும் கருணையையும் வெளிப்படுத்திக் காட்டுகிறான் என்பதையும் உலகம் உணர்ந்து கொள்ளும் விதத்தில் இறைவன் தன் அடியார்களோடு நடந்து கொள்ளவே இல்லை என்று நம்மால் நேர்மையோடு கூற முடியாது. விளக்கம் அளிக்கும் வசதியை விரிவாக்கித் தீர்க்கதரிசிகள், அவர்களின் தோழர்கள், அவர்களைப் பின்பற்றியோர் ஆகியோரின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பதிவு செய்திருக்கும் வேத வசனங்களுக்கு மட்டுமல்லாது அவை சொல்லவரும் கருத்துக்கும் விளக்கமளிக்க முற்பட்டால், அந்த வசனங்களை அருளியவனே தான் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்ல முடியவில்லை என்று நாம் விரைவில் ஒப்புக்கொள்ள வேண்டியது வரும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு குறையை இறைவன் மீது நாம் சாட்ட முடியாது என்பதால் அவ்வாறு இல்லை என்று நாம் ஒப்புக்கொள்ளக் கடமை பட்டிருக்கிறோம். இறைவன் தனது தீர்க்கதரிசிகளையும், அவர்களைப் பின்பற்றியவர்களையும் அப்படிப்பட்ட அற்புதங்களைக் காட்டுமாறு செய்தான் என்றும் பின்பற்றி நடந்தவர்களின் நம்பிக்கை உறுதியும் முழுமையும் பெறத்தக்க விதத்தில் அவர்களோடு நடந்து கொண்டான் என்றும், அது மற்றவர்களின் நம்பிக்கையையும் புதுப்பித்தது என்றும் உயிருள்ளவனும் வல்லமையுள்ளவனுமாகிய இறைவனின் இருப்பை உலகம் அறியுமாறு செய்தது என்றும் எல்லா மார்க்கங்களின் வேத நூல்களும் ஒருமித்துக் கூறுகின்றன என்று நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

இவையெல்லாம் கடந்த காலத்தில் நடந்தன என்பது உண்மைதான். இந்த விஷயங்களின் உண்மைத் தன்மையைப் பற்றி எந்தச் சந்தேகமும் கொள்ள முடியாது. எனவேதான் இன்றைய காலகட்டத்தில் ஏன் அவ்வாறு நடைபெறவில்லை என்று கேட்பது நியாயமான கேள்வியாக இருக்கிறது. கடந்த காலத்தில் இறைவன் தன் அடியார்களோடு பேசினான் என்றால் இன்று ஏன் அவன் பேசுவதில்லை? கஷ்டம், ஐயப்பாடு, தவறு நிறைந்த காலத்தில் அவன் தன் வழிகாட்டுதலை இறக்கினான் என்றால் இன்று ஏன் அவன் தன் வழிகாட்டுதலின் வாசலைத் திறப்பதில்லை? எல்லா மார்க்கங்களும் கெட்டுப் போய்விட்டன; அவற்றிலிருந்து எந்த உண்மையையும் காணமுடியாது; அவற்றிற்கிணங்கச் செயல்படுவதன் மூலம் எந்தப் பயனையும் பெறமுடியாது என்பது இதன் பொருளாகுமா? அல்லது உண்மையான மார்க்கம் உலகில் இருக்கிறது; மனிதன் அதன்படி நடப்பதில்லை; எனவே அவனால் ஆன்மீகரீதியில் எந்த முன்னேற்றமும் அடைய முடியவில்லை என்பது சாத்தியமா? எந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொண்டாலும் ஒரு புதிய மார்க்கத்தின் தேவை இருப்பதாக இறைவன் கருதினால், அவன் ஏன் அதனை அருளவில்லை என்ற கேள்வி எழத்தான் செய்யும். மேலும் கடைபிடித்து நடக்க வேண்டிய ஒரு வழிகாட்டுதலை அவன் ஏற்கனவே வழங்கி இருந்து மக்கள் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றால் அவர்களை நேரான பாதையில் நடத்துவதற்கு ஒரு சீர்திருத்தவாதியை அவன் ஏன் எழுப்பவில்லை? அதன் மூலம் அவர்கள் அவனது நெருக்கத்தைப் பெற்றுத் தங்களின் படைப்பின் நோக்கத்தை அடைந்திருக்கக் கூடுமே?

மனித இனம் தவறுகளிலும், உலகப் பற்றிலும் உழன்று கொண்டிருக்கின்றதைக் கண்ட பின்பும் கருணையும் அன்பும் நிறைந்த இறைவன் இரக்கமற்று இருப்பான் என்பதும் அவர்களுக்குப் போதனை செய்வதற்கும், வழிகாட்டுவதற்கும் எந்த ஓர் ஏற்பாடும் செய்யமாட்டான் என்பதும் நம்பமுடியாததாக இருக்கிறது. தந்தையையும் தாயையும் விட இறைவன் அதிக அன்பும் கருணையும் மிகுந்தவனாக இருக்க வேண்டும்; ஏனென்றால் தந்தையும் தாயும் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் இறைவன் படைப்பவன் மட்டுமல்ல; அவன்தான் மனித இருப்பின் முடிவும் நோக்கமுமாக இருக்கிறான். ஒரு குழந்தைக்கும் அதன் பெற்றோருக்கும் உள்ள உறவு தற்காலிகமானது. ஆனால் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியது. பெற்றோரின் ஆற்றல்களும் வளங்களும் எல்லைக்குட்பட்டதும் அழியக்கூடியதுமாகும். ஆனால் இறைவனது ஆற்றல் எல்லையற்றதும் அவனது கருவூலங்கள் குறைவுபட முடியாதவையுமாகும்.

தன்னுடைய படைப்பினங்களோடு இப்படிப்பட்ட தொடர்போடும், இப்படிப்பட்ட ஆற்றல்களுக்கு அதிபதியாகவும் விளங்குகின்ற அவன் தன்னுடைய படைப்பினங்களை மறக்கவோ அவர்களுடைய துயரங்களைக் கண்டு கொள்ளாமல் இருக்கவோ முடியாது. தன்னுடைய பலவீனமான படைப்பினங்கள் மற்றவர் மீது கருணை காட்டவேண்டும் என்று எதிர் பார்க்கும் அவன் மனித இனத்தை ஆன்மீக வழிகாட்டலும் முன்னேற்றமும் இன்றி இருட்டில் அலைய விடவும், ஒளியைத் தேடுவதில் அவர்களது பார்வையை

இழக்கவிடுமளவுக்குக் கருணையற்றவனாக இருக்க முடியாது. இறைவன் என்று ஒருவன் இருந்தால் அவன் இதனை அனுமதிக்க மாட்டான்.

சோதனையிலிருக்கும் தன் அடியார்களுக்காக அவன் வருந்துகிறான்; அதே நேரத்தில் அதிலிருந்து விடுபடுவதற்கான எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லையென்றால், மனித இனத்தை உண்மையின் பக்கம் வழிகாட்டக்கூடிய ஆற்றல் அவனுக்கு இல்லை என்றோ, இறைவனை அடைவது மனித இருப்பின் நோக்கமல்ல என்றோ வெறுமனே உண்பதற்கும், குடிப்பதற்கும், மிருகங்களைப்போன்று உலகமயமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கே மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான் என்றோ நாம் முடிவுக்கு வரவேண்டியதிருக்கும். ஆனால் இந்த மாற்றுச் சாத்தியங்கள் ஒவ்வொன்றும் அடிப்படையற்றவையாகும்.

அகிலத்தைப் படைத்த இறைவன் மனித இனத்தின் ஆன்மீக வழிகாட்டலுக்கான ஆற்றலைப் பெறவில்லை என்று கற்பனை செய்வது அபத்தமாகும். முழுமையான ஒன்றைப் படைத்த இறைவன் அதன் ஒரு பகுதியையும் படைக்கும் ஆற்றலைப் பெற்றே இருக்கவேண்டும். படைப்பவன் ஒருவன் இருக்கின்றான் என்று ஒப்புக்கொண்டால் அவனுக்கு முழுமையான ஆற்றல் இருக்கின்றது என்பதையும் அவனுக்கு இயலாதது எதுவும் இல்லை என்றும் அவனது தூய்மைக்கும் முழுமையான தன்மைக்கும் பொருந்தாதவற்றைத் தவிர அனைத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவன் என்றும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். உலகியல் வாழ்வுக்காக மட்டுமே மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான் என்று நாம்

கற்பனை செய்ய முடியாது. ஏனென்றால் அவ்வாறு இருந்தால் எல்லா ஞானமும், அறிவும் பெற்ற படைப்பாளியான இறைவன் இப்பெரும் பிரபஞ்சத்தை எந்த நோக்கமும் இல்லாமல் படைத்துவிட்டான் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவோம்.

எந்த ஒரு எந்திரமும் அது வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டும் தயாரிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு எந்திரமும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், குறிக்கோளுக்காகவுமே தயாரிக்கப்படுகின்றது. மனித இருப்பின் நோக்கமே உண்பதும், குடிப்பதும், உறங்குவதும் மட்டுமே என்று இருக்குமானால் சுகமாக வாழ்வதற்கு மட்டுமே மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்று பொருளாகிவிடும். தனி மனிதன் படைக்கப்பட்டதற்கு எந்த நோக்கமும் இல்லை என்றால் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்வது வாழ்வின் நோக்கமாக கருதப்பட முடியாது.

மேலும் இறையச்சமிக்க மக்கள், அவர்கள் சிரியா, அரேபியா, பெர்சியா, இந்தியா, சீனா போன்ற எந்த நாட்டில் தோன்றியிருந்தாலும் பொய்யர்களும், போலிகளும் ஆவர் (இறைவன் அப்படிப்பட்ட எண்ணத்திலிருந்து காப்பானாக!) என்று நாம் கருதவேண்டியது வரும். அவர்கள் அனைவரும் மனித இனத்திற்கு ஆன்மீக வழிகாட்டும் பொறுப்பு தம் மீது சுமத்தப்பட்டிருப்பதாகப் போதித்தனர்; இருந்தபோதிலும் அந்தப் பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்க முடியாது. ஏனென்றால் ஒன்று மனித இனத்திற்கு வழிகாட்டுதலுக்கான ஏற்பாட்டைச் செய்கின்ற ஆற்றல்

இறைவனுக்கு இல்லை; அல்லது அவனை அடையும் குறிக்கோளுடன் மனிதன் படைக்கப்படவில்லை. ஆனால் நன்மை, தூய்மை, நேர்மை ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கியவர்களும், உண்மை, புனிதத்தன்மை ஆகியவற்றின் முழுமையான முன் மாதிரிகளாகத் திகழ்ந்தவர்களும், உலகில் ஆன்மீகப் புரட்சியைத் தோற்றுவித்தவர்களும், நேர்மை, தூய்மை ஆகியவற்றின் மீதான காதலை மனித மனங்களில் ஊன்றியவர்களுமான பெருமக்களை உலகில் தோன்றிய மிகப் பெரிய பொய்யர்களும் ஏமாற்றுக்காரர்களுமாவார்கள் என்றும் அவர்கள் மக்களை தம் ஏமாற்றுத்தனத்தின் பக்கம் அழைத்தார்கள் என்றும் உள்ள கருத்தை நம் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளுமா?

மனித இனத்தின் அறிவாற்றல், ஒழுக்கம், ஆன்மீகம் ஆகியவற்றின் முழுமையான முன்னேற்றத்திற்கான பெருமைக்கு உரியவர்களும் மக்கள் மனதில் பல நூற்றாண்டுகள் கழிந்தாலும் அழிக்கமுடியாத தடத்தைப் பதித்தவர்களுமான மனிதர்கள் தங்கள் நிலை பிறழ்ந்து தங்கள் சொந்தக் கற்பனைகளை உயிருள்ளவையும் இவ்வகிலத்தில் இருப்பவையும் என்று நம்பினர் என்பதை நாம் நம்ப முடியுமா? அவ்வாறு இல்லையென்றால் - நிச்சயமாக அவ்வாறு இல்லை - மனிதனை இறைவனிடம் வழி நடத்திச் செல்லும் ஒரு மார்க்கம் உலகில் இருந்தாக வேண்டும் என்ற முடிவிலிருந்து தப்பிக்க வழியே இல்லை. இப்போது இருக்கும் எல்லா மார்க்கங்களும் கெட்டுப்போயிருந்தால் மனித இனத்தின் வழிகாட்டலுக்காக ஒரு புதிய மார்க்கம் அருளப்பட்டாக வேண்டும்.

மனிதனை இறைவனை நோக்கி வழி நடத்தக்கூடிய ஒரு மார்க்கம் இப்போதும் இருக்கிறது; ஆனால் மனிதன் அதன் போதனைகளுக்குச் செவி கொடுக்காத காரணத்தால் அது தன் நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லையென்றால், மனிதனின் கவனத்தை அதன் பக்கம் திருப்பி மனித இனத்தை அவன் பக்கம் கொண்டு வரக்கூடிய ஒரு சீர்திருத்தவாதியைத் தோன்றச் செய்ய வேண்டும்.

உண்மை முற்றிலும் மறைந்து போவதற்கும், மனித இனத்திற்குப் பயன்பட முடியாத அளவுக்குச் சந்தேகத்தால் அது மூடப்பட்டிருப்பதற்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை என்று நான் கருதுகிறேன். இதுவே அறிவுடையார் அனைவரது கருத்தாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். முந்தய நிலையைப் போன்றே பிந்தய நிலையும் மனிதனின் ஆன்மீக நலத்திற்கு ஆபத்தானதாகும்.

எல்லா மார்க்கங்களையும் பின்பற்றுபவர்கள் நம்புவதைப் போன்று முழுமையான ஒரு மார்க்கம் உலகில் இருக்கின்ற அதே நேரத்தில் முந்தய காலத்தில் உருவாக்கியதைப் போன்ற முழுமையான மனிதர்களை உருவாக்க எல்லா மார்க்கங்களும் தவறுகின்றதையும் முற்காலத்தில் ஏற்படுத்தியதைப் போன்ற உறவை மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் அவற்றால் ஏற்படுத்த முடியவில்லை என்பதையும் நாம் காண்கிறோம் என்றால் மார்க்கத்தின் குறிக்கோளான இறை வல்லமையை வெளிப்படுத்தவும் மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஏற்ற வகையில் ஓர்

உண்மையான மார்க்கத்தினை மனித குலத்திற்கு முன்பாக இறைவன் சமர்ப்பிக்காதது ஏன்? ஓர் அழகான வீட்டைக் கட்டி விலையுயர்ந்த பொருட்களால் அதை அலங்கரித்து அதனைப் பாழடைய ஒரு மனிதன் விடுவானா? அல்லது, அழகான ஒரு தோட்டத்தை அமைத்து அதற்கு நீர்ப் பாய்ச்சும் ஏற்பாடு இல்லாமல் அதனை வறண்டு போகவிடுவானா?

இது நடைபெறவில்லையென்றால் மனித இனத்தின் வழிகாட்டலுக்காக இறைவன் ஒரு முழுமையான மார்க்கத்தை அருளினான்; ஆனால் அதனைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டான் என்று கற்பனை செய்வது எப்படிச் சாத்தியமாகும்? யூத மதத்தை உயிரோடு வைத்திருப்பதற்காகவும் அந்த மார்க்கம் அருளப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் இறைவன் தீர்க்கதரிசிக்குப்பின் தீர்க்கதரிசியை அனுப்பியதை நாம் காணவில்லையா? இயேசுவுக்குப்பின் கிறிஸ்தவ மதத்தின் ஆன்மாவை உயிரோடு வைத்திருப்பவர்களை அனுப்பினான். வேதங்கள் அருளப்பட்டபின் வேதங்களின் போதனைகளை செயல்படுத்துவதற்கு கிருஷ்ணரையும், ராம் சந்திரரையும் பிற புனிதர்களையும் அனுப்பினான். ஸொராஸ்ட்ரருக்குப்பின் பாரசீக மதத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். முஹம்மது (ஸல்) அவர்களுக்குப்பின் இறைவெளிப்பாட்டின் உதவியுடன் இஸ்லாத்தை விளக்கிக் கூறும் மனிதர்களை தொடர்ச்சியாகத் தோன்றச்செய்து அதனை உயிரோடு வைக்கவில்லையா? உண்மையான மார்க்கத்தைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை இப்போது நிறுத்திவிட்டான் என்று எப்படி நாம் நம்ப முடியும்?

பழைய மார்க்கங்கள் எதுவும் தெய்வீகப் பாதுகாப்பின் கீழ் இருப்பதாக வாதிக்கவோ அதற்கான சான்றைத் தரவோ இயலவில்லையென்றால் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிவிட்ட ஒரு கட்டிடம் சிதைய விடப்படுவதுபோல், அல்லது தன்னுடைய வாழ்நாளை நிறைவு செய்த தோட்டம் அழிக்கப்படுவதுபோல் இந்த மார்க்கங்களும் தங்கள் வாழ்நாளை நிறைவு செய்து தம்முடைய நோக்கத்தை எய்திவிட்டதால் இறைவன் அவற்றைக் கெட்டுப்போகவும் அழிந்துபோகவும் விட்டுவிட்டு மனித இனத்தின் வழிகாட்டுதலுக்காக ஒரு புதிய மார்க்கத்தை வழங்கி இருக்கிறான் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டும்.

சுருக்கமாக எந்தக் கோணத்தில் இந்த விஷயத்தை நாம் பார்த்தாலும் உலகின் தற்போதைய நிலை தெய்வீக வழிகாட்டுதலைப் பெற்ற ஒரு போதகரின் தேவையை உரக்கச் சொல்கிறது; மனித ஆன்மாக்கள், பிரிந்து இருக்கும் காதலர்களைப் போல் ஆவலோடும் ஏக்கத்தோடும் வானத்தை நோக்குகின்றன. தங்களைப் படைத்தவனிடம் துயரத்தோடும், முழுமையான உள்ளத்தோடும், வழிந்தோடும் கண்ணீரோடும் பிரார்த்திக்கின்றன. தங்கள் மீது இரக்கம் கொள்ளுமாறும் அவனுடைய கருணை, அருள் ஆகியவற்றின் வாசல்களைத் தங்களுக்காகத் திறக்கும்படியும் தங்களுக்கு முன் சென்றவர்களுக்கு அருளப்பட்டவைகளைத் தங்களுக்கும் வழங்குமாறும், தங்களுடைய ஆன்மீகரீதியான பார்வையற்றதன்மையை அகற்றுவதன் மூலம் தங்களின் கண்களிலும் இதயங்களிலும் உள்ள பார்வையற்றதன்மையையும் அழுக்கையும் குணமாக்கி மனிதப் படைப்பின் நோக்கமான நிரந்தர வாழ்வை

நோக்கித் தங்களை வழி நடத்தும்படியும் அவை கேட்டுக்கொள்கின்றன.

## தெய்வீகப் பாதுகாப்பில் இருப்பதாக வாதிக்கும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமே

ஆன்மீக வாழ்வுக்காகத் தாகித்திருப்பவர்களே! இறைவனுக்காகப் பசித்திருப்பவர்களே! உங்களுக்கு மிகவும் தேவையான ஒன்றை இஸ்லாம் வழங்குகின்றது என்ற மகிழ்ச்சியான நற்செய்தியை நான் உங்களுக்கு வழங்குகிறேன். இறந்தவர்களை உயிர்ப்பிப்பவனும், பார்வையற்றவர்களுக்குப் பார்வையை வழங்குபவனும், கேட்காதவர்களைக் கேட்கச் செய்பவனும், முடமானவர்களுக்கு அவயங்களை வழங்குபவனும், தொழுநோயாளிகளைக் குணமாக்குபவனுமானவன் காலத்தின் தேவைக்கேற்பவும் முன் சென்ற தீர்க்கதரிசிகளின் முன்னறிவிப்புகளை நிறைவேற்றுகின்ற விதத்திலும் மஸீஹின் பெயரிலும் அவரது உணர்விலும் முன் சென்ற எல்லாத் தீர்க்கதரிசிகளின் ஆற்றலிலும் உணர்விலும் இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் இதுவரை இறங்கியதுபோல் அவர் விண்ணிலிருந்து இறங்கி இருக்கிறார். “கிழக்கிலிருந்து நீதிமானை எழுப்பி, தமது பாதபடியிலே வரவழைத்தவர் யார்?” (ஏசாயா 41:2) என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் உள்ளபடி உலகத்தைப் பாவம் என்னும் இருளிலிருந்து வெளியே கொண்டுவந்து அதனை இரட்சிப்பின் பக்கம் வழி நடத்துவதற்காக, அவர் கிழக்கிலிருந்து தோன்றியிருக்கிறார்.

மனிதர்களே கேளுங்கள்! பராமரிக்கப்படும் என்று இறைவன் வாக்களித்த மார்க்கமும், அவன்

பராமரித்துவரும் மார்க்கமும் இஸ்லாம் மட்டுமே. எனவே இக்காலத்தின் வழிகாட்டலுக்காக இறைவன் தேர்ந்தெடுத்த மார்க்கமும் அதுவே ஆகும். அவ்வாறு இல்லையென்றால் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்கும், பராமரிப்புக்குமான வழிவகைகளை மட்டும் அவன் செய்து விட்டு மற்ற மார்க்கங்களை ஏன் பாதுகாப்பின்றி விட்டிருக்க வேண்டும்?

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

“இன்னா நஹ்னு நஸ்ஸல்னத் திக்ர வ இன்னா லஹூ லஹாஃபிலூன்” (சூரா அல்ஹிஜ்ர்: **10**)

“இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம்”

இந்தத் தீர்க்கதரிசனத்திற்கு இணங்க திருக்குர்ஆனின் வசனங்களின் தூய்மையும் அதன் பொருளும் வரலாற்றில் வேறொரு உதாரணம் காண முடியாத அளவுக்குப் பாதுகாக்கப்பட்டுள்ளன. வசனங்களைப் பொருத்தவரையில் உலகில் பல நூற்றாண்டுகளாக ஒரு புள்ளிகூட மாறாமல் அப்படியே இருக்கும் நூல் திருக்குர்ஆன் மட்டுமே என்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைமுறையிலும் முழு நூலையும் மனனம் செய்த இலட்சக் கணக்கான மக்கள் தோன்றியுள்ளனர். அதன் காரணமாக எல்லாப் பிரதிகளும் அழிக்கப்பட்டாலும் முற்றிலும் மறைந்து போனாலும் முழு நூலையும் ஒரு புள்ளி கூட மாறாமல் ஒரு நிமிடத்தில் உருவாக்கிவிட முடியும்.

மேலும், அந்நூலின் கருத்தும் அற்புதமான விதத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்,

انّ الله يبعث لهٰذه الامة على رأس كل مائة سنة من يجدد لها دينها

'இன்னல்லாஹ யப் அஸு லி ஹாதிஹில் உம்மத்தி அலா ரஃஸி குல்லி மியதி ஸனதின் மன் யுஜத்திது லஹா தீனஹா' (ஹதீஸ்)

'ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இஸ்லாத்தின் உண்மையான பொருளை மக்களுக்குப் போதிக்கும் ஒருவரை இறைவன் தொடர்ந்து எழுப்புவான்.' இவ்வாறு நபியின் காலத்தை மீண்டும் தோன்றச் செய்வான்.

இந்த முன்னறிவிப்புக்கிணங்க ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இஸ்லாத்தில் அப்படிப்பட்ட மனிதர்கள் தோன்றியுள்ளனர். இடையிடையே சீர்திருத்தங்கள் நடைபெற்றாலும் ஒரு நீண்ட காலம் கழிந்தபின் தீவிர சிகிச்சை தேவைப்படுகின்ற மிக மோசமான குறைபாடுகள் மார்க்கத்திற்குள் புகுந்துவிடுகின்ற காரணத்தினால் பரிபூரணத்தன்மையுடன் ஒரு முழுமையான மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக ஒரு மிகப் பெரிய சீர்திருத்தவாதி எழுப்பப்படுகின்றார். மோசேயின் வம்சத் தொடரின் இறுதியிலும் இதுவே நடைபெற்றது. மோசேயிக்குப் பின் வந்த பதின்மூன்று நூற்றாண்டுகளில் ஏராளமான தீர்க்கதரிசிகள் தோன்றிய போதிலும் இயேசு என்னும் மிகப் பெரிய சீர்திருத்தவாதி எழுப்பப்பட வேண்டியதிருந்தது. அவரது பணி மற்ற யூத தீர்க்கதரிசிகளைவிட மிகப் பெரியதாகவும் பரந்ததாகவும் இருந்தது.

இந்தப் பொதுவான விதிக்கு இஸ்லாம் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாது. பிற்காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சியின் வேகம் தடைப்படுவது மட்டுமின்றி முஸ்லிம்களின் உள்ளங்களிலேயே அது தன் ஆன்மீகக் கட்டுப்பாட்டை இழந்துவிடும். அதன் உண்மையான போதனைகளுக்குப் பதிலாக தவறானதும் மாற்றமானதுமான விளக்கங்கள் அளிக்கப்படும் என்று முன்னரே முன்னறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நேரத்தில் மோசேயின் சமுதாயத்தில் இயேசு செய்த அதே பணிகளைச் செய்வதற்கு இறைவன் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு மஸீஹை எழுப்புவான் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே மோசேயிக்குப் பின் நாசரேத்தைச் சேர்ந்த இயேசு தோன்றியதைப் போன்றே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் பதின்மூன்று நூற்றாண்டுகள் கழிந்தபின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்கள்.

மக்கள் இயேசு தோன்றிய போது செய்த அதே தவற்றை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றிய போதும் செய்தார்கள். அக்காலத்தில் மக்கள் வானத்திலிருந்து தோன்றும் எலியா தீர்க்கதரிசியின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். ஆனால் அவரது இடத்தில் எல்லா மனிதர்களையும் போல் ஒரு பெண்ணிடமிருந்து தோன்றிய யோவான் ஞானஸ்னானன் அனுப்பப்பட்டார். இக்காலத்தில் வானத்திலிருந்து தோன்றும் இயேசுவே வரவேண்டும் என்று மக்கள் காத்திருந்தனர். ஆனால் அவர்களிடத்தில் ஒரு மஸீஹ் அனுப்பப்பட்டார். ஆன்மீகப் பார்வையற்ற மக்கள் கண்களுக்கு அவர் பூமியிலிருந்து தோன்றியவராகக் காட்சியளித்தார்;

ஆனால் உண்மையில் அவர் வானத்திலிருந்து தோன்றியவராக இருந்தார். பூமியோடு அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அவ்வாறு இல்லையென்றால் ஆயிரக்கணக்கான மக்களை அவரால் வானத்திற்கு அழைத்துச் சென்றிருக்கமுடியாது.

மனிதர்களின் நினைவாற்றல் எவ்வளவு முரண்பாடாக இருக்கிறது! இயேசு வானத்திலிருந்து இறங்கி வருவதற்காக அவர்கள் காத்திருக்கின்றனர். ஆனால் பூமியிலிருக்கும் அவரது வார்த்தைகளை மறந்து விட்டனர். ஏனென்றால் இயேசு கூறியிருக்கிறார்: "வானத்திலிருந்து வந்தவனைத் தவிர வேறு எவரும் வானத்திற்கு ஏறிச்செல்வதில்லை." இப்போது இயேசு பூமியின் மீது பிறந்தார் என்றும் அவர் வானத்திலிருந்து இறங்கவில்லை என்பதை அறிந்திருந்தும் அவர் தமது இரண்டாம் வருகையின் போது அவர் வானத்திலிருந்து இறங்குவார் என்று இந்த மக்கள் நம்புவது வினோதமாக இல்லையா? வானத்திலிருந்து வந்த மனிதனே வானத்திற்கு ஏறிச் செல்வார் என்று அவரே கூறுகிறார்; எனவே அவர் பூமியில் பிறந்திருந்தால் அவர் வானத்திற்கு ஏறிச் செல்ல முடியாது; அதன் காரணமாக அவர் அங்கிருந்து இறங்கி வரவும் முடியாது. கன்னி மேரிக்குப் பிறந்ததை வானத்திலிருந்து இறங்கி வருவதாக வர்ணிக்கப் பட்டால் அவர் வானத்திற்கு ஏறிச் சென்றதற்கும் அதே போன்ற பொருளை நாம் ஏன் கொடுக்கக் கூடாது? மேலும் இயேசு கன்னி மேரிக்குப் பிறந்ததை வானத்திலிருந்து இறங்கி வந்ததாகக் கூற முடியும் என்றால் ஒரு பெண்ணின் வயிற்றில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பிறந்ததை ஏன் வானத்திலிருந்து இறங்கி வந்ததாகக் கூற முடியாது?

இயேசுவுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுௗக்கும் உள்ள மற்றொரு ஒற்றுமை என்னவென்றால் யூதர்களின் ஆட்சியதிகாரம் முடிவுற்ற ஒரு காலத்தில் இயேசு பிறந்தார்; அதே போன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹுௗம் முஸ்லிம்கள் தங்கள் உலகியல் பெருமை எல்லாவற்றையும் இழந்து நின்ற ஒரு நேரத்தில் பிறந்தார். இயேசு உண்மையான அன்னிய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த ஆட்சியில் பிறந்தார். அவர்களின் ஆட்சி சட்டத்தின் ஆட்சி என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அதே போன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹுௗம் அன்னியர்களின் ஆட்சியின் கீழிருந்த ஒரு நாட்டில் பிறந்தார்கள். அவர்களின் அரசாங்கமும் ஏகாதிபத்தியத்தின் கீழ் அமைந்திருந்தது. சட்டத்தை மதிப்பதிலும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும் ரோமப் பேரரசைப் போலவே அவர்களின் அரசியல் சட்டமும் சட்டத்தை மதிப்பதையும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

மேலும் இயேசுவின் காலத்தில் அவரை ரோமானிய நீதி மன்றங்களுக்கு இழுக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதே போன்று இக்கால மக்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஆங்கிலேய நீதி மன்றங்களுக்கு இழுக்கின்ற முயற்சி மேற்கொண்டனர். ‘சீசரின் பொருட்களை சீசருக்குக் கொடுங்கள். கடவுளின் பொருட்களைக் கடவுளுக்குக் கொடுங்கள்’ என்று இயேசு போதித்திருந்த போதிலும் அவர் அரசாங்கத்திற்கு விசுவாசமாக நடக்கவில்லை என்று மக்கள் அவர் மீது குற்றம் சாட்டினர். அதே போன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹுௗம் அரசாங்கத்திற்கு விசுவாசமாக

இருக்கவேண்டும் என்று வலியுறுத்திய போதிலும் அவர்கள் அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருக்கவில்லை என்றும், அவர் கிளர்ச்சியைத் தூண்டுகிறார் என்றும் குற்றம் சுமத்தினர். அவர்களுக்கெதிரான கட்டுக்கதைகளைக் கூட அரசாங்கத்திடம் எடுத்துச் சென்றனர்.

இதைவிடவும் ஆச்சரியம் என்னவென்றால், இயேசு அரசாங்கத்தின் மீதான தன்னுடைய விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிவித்தபோதிலும் ரோமப் பேரரசு அவரைச் சந்தேகக்கண் கொண்டு பார்த்ததுபோல், ஆங்கிலேய அரசாங்கமும் வாக்களிக்கப்பட்ட மஸீஹைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சொந்த ஊரான காதியான் அன்னாரின் இறப்புக்கு ஓர் ஆண்டு முன்பு வரை இரகசிய போலீஸாரின் கண்காணிப்பில் இருந்து வந்தது. இந்த ஒற்றுமைகளிலெல்லாம் மிகவும் அற்புதமான ஒற்றுமை என்னவென்றால், இயேசுவின் காலத்து மக்கள் அவரை உரோமானிய நீதி மன்றத்தின் மூலம் தண்டிக்க முயற்சி செய்ததுபோல் சில கிறிஸ்தவப் பிரச்சாரகர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹுுக்கு எதிராகக் கொலை முயற்சிக்கான பொய் வழக்கைக் கொண்டு வந்தனர். இயேசு மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியதால் இது போன்ற வழக்குகளில் ஏற்படக்கூடிய அவமானகரமான விளைவுகளிலிருந்து இறைவன் அன்னாரைக் காப்பாற்றினான். அன்னாரின் எதிரிகளின் உறுதியான முயற்சிகளையும் மீறி அவர்களுடைய குற்றமற்ற தன்மையை பகல் வெளிச்சம் போல் இறைவன் பளிச்சிடச் செய்தான்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பிரிட்டிஷ் சமுதாயத்தைப் பாராட்டுகின்றேன். ஏனென்றால் ரோமானிய பிலாத்தை விட அவர்களுடைய பிலாத்து அதிகத் துணிச்சலைக் காட்டியிருக்கிறார். இயேசுவின் குற்றமற்ற தன்மையைப் பற்றி முழுத் திருப்தி அடைந்த பின்னும் முன்னவர் அவரை யூதர்களிடம் ஒப்படைத்தார். ஆனால் முதலில் சீஃப் கமிஷனர் ஆகவும் பின்னர் குர்தாஸ்பூர் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் ஆகவும் இருந்த கர்னல் டக்லஸ்க்கு முன்னால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு விசாரணைக்கு வந்தது. அப்போது அவர் உண்மையைக் கண்டு கொண்டார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் குற்றமற்ற தன்மையை அவர் புரிந்து கொண்டார். செல்வாக்கு மிக்கச் சில மனிதர்களின் வற்புறுத்தலையும் பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி அன்னாரைக் கண்ணியத்தோடு விடுவித்தார். வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டு சுமத்தியவர்கள் மீது வழக்குத் தொடரவும் அன்னாருக்கு அனுமதி வழங்கினார்.

ஆனால் பதின்மூன்று ஆண்டு காலம் மக்காவின் எதிரிகளின் மிக மோசமான அடக்குமுறைகளைச் சகித்துக் கொண்டு வெற்றி பெற்ற நேரத்தில் அவர்களைத் தாராளமனதோடு மன்னித்த அரேபியாவின் தூய நபி (ஸல்) அவர்களின் வழித்தோன்றலான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் தம் எதிரிகள் மீது வழக்குத் தொடர்வார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. அவர்கள் தம் எதிரிகளை மன்னித்து விட்டதாகவும் அவர்கள் மீது வழக்குத் தொடரத் தாம் விரும்பவில்லை என்றும் உடனடியாக மாஜிஸ்ட்ரேட்டிடம் தெரிவித்தார்கள்.

உரையின் இந்தப் பகுதியை நிறைவு செய்யும் முன் நான் மீண்டும் ஒரு முறை பிரிட்டிஷ் மக்களைப் பாராட்டுகிறேன். அவர்களின் மாஜிஸ்ட்ரேட்களில் ஒருவர் இயேசுவை விசாரித்த உரோமானிய மாஜிஸ்ட்ரேட்டை விட உண்மையையும் நீதியையும் நிலை நாட்டுவதில் அதிகத் துணிச்சலை வெளிப்படுத்தினார். குற்றம் சுமத்தியோர் தமது மார்க்கத்தைச் சேர்ந்த பிரச்சாரகர்களாக இருந்த போதிலும் சக்தி வாய்ந்த சிலர் வழக்குத் தொடுத்தவர்களுக்குச் சாதகமாக அவருக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் பொய்யையும் துன்புறுத்தலையும் ஆதரிக்க மறுத்துவிட்டார்.

காலத்தின் தேவை, பைபிளில் காணப்படும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியது ஆகிய இந்த ஒற்றுமைகள் மட்டுமல்லாது இறுதிக் காலத்தில் தோன்றவேண்டிய தீர்க்கதரிசியைப் பற்றிப் பிற மத நூல்களில் காணப்படும் எல்லா முன்னறிவிப்புகளையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைக்கு ஆதரவாக இறைவன் நிறைவேற்றினான். எடுத்துக்காட்டாக முஸ்லிம் நூல்கள் பின்வருமாறு கூறின. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் வங்கிகள் தழைத்தோங்கும்; பெருமளவில் மது பயன்படுத்தப்படும்; ஆண்களைவிடப் பெண்கள் எண்ணிக்கையில் அதிகரித்து விடுவர்; பெண்கள் தங்கள் அங்கங்கள் வெளியே தெரிகின்ற அளவுக்கு மெல்லிய ஆடைகளை அணிவர்; முன்னர் மறைக்கப் பட்ட தம்முடைய உடலின் பாகங்களில் சிலவற்றை மறைக்காமல் விடுவர்; பெண்கள் பெருமளவில் விற்பனைப் பணியாளர்களாக நியமிக்கப்படுவர்; கிறிஸ்தவ அரசாங்கங்கள் தாங்கள் ஆட்சி செய்யும் பகுதிகளை விரிவாக்குவார்கள்;

இஸ்லாமிய அரசாங்கங்கள் அழிக்கப்படும். பெற்றோருக்குக் குறைவான மரியாதையே தரப்படும்; குறிப்பிட்ட சில மக்கள் மாதங்களைச் சுருக்குவார்கள்; கற்களாலும் நீராலும் இயக்கப்படும் ஒரு புதிய வகைப் போக்குவரத்து சாதனம் (இது நீராவி எஞ்சினைக் குறிக்கும்) கண்டுபிடிக்கப்படும்; உயிரற்ற பொருட்கள் பேசும் (உதாரணமாகக் கிராமஃபோன் போன்றவை). புதிய போக்குவரத்து சாதனம் கண்டுபிடிக்கப்படும்; ஒட்டகங்கள் மிக மிகக் குறைவாக உபயோகிக்கப்படும்.

மூன்று வல்லரசு நாடுகள், மற்ற மூன்று வல்லரசு நாடுகள் மீது போர் தொடுக்கும்; அவற்றுள் கான்ஸ்டாண்டிநோபிள் அரசாங்கம் சேர்ந்து நிற்கும் அணி தோற்றுப்போகும்; ஒரு மனிதர் கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து ஆசியா மைனருக்கு ஓடிப்போய் துருக்கிய அரசாங்கத்தை நிறுவுவார்; செய்தித்தாள்கள், பிரசுரங்கள், நூல்கள் ஆகியவை பெருமளவில் வெளியிடப்படும்; பல கால்வாய்கள் தோண்டப்படும்; மிருகக்காட்சி சாலைகள் பெருமளவில் தோன்றும்; வானவியல் அறிவு பெரும் வளர்ச்சி அடையும். சில கொடூரமான சமுதாயங்கள் அழிக்கப்படும்; பல சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படும்; பூமி தன்னுள் மறைந்துள்ள கருவூலங்களை வெளிப்படுத்தும்; இரு பெருங்கடல்கள் ஒரு கால்வாய் மூலம் இணைக்கப்படும். அதன் ஒரு புறம் பவளமும் மறுபுறம் முத்துக்களும் காணப்படும்; பெரிய கப்பல்கள் தொடர்ந்து இந்த கால்வாய் வழியாகக் கடந்து சென்று மக்களுக்கு இறைவனின் உதவிகளையும், அருட்களையும் நினைவூட்டிக் கொண்டிருக்கும். (இது சூயஸ் கால்வாய் அமைக்கப்பட்டதைக் குறிக்கிறது)

முடியாட்சிகள் வீழும்; தொழிலாளர்களுக்கு ஆட்சி செய்யும் வாய்ப்பு வழங்கப்படும்; காவல்துறையினர் எண்ணிக்கையில் பெருகுவர்; பல்வேறு நாடுகளுக்குள் ஒழுங்கு பராமரிக்கப்படும்; ஆனால் அரசாங்கங்கள் ஒன்றின் மீது ஒன்று சந்தேகம் கொள்வதுடன் ஒருவரையொருவர் தாக்க முனைவர். இதைப்போன்று இன்னும் பல. இவையனைத்தும் நடந்தேறி விட்டன என்பதை நாம் அறிவோம். இவையனைத்தும் ஐரோப்பிய நூல் நிலையங்களிலுள்ள புகழ் பெற்ற நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இக்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் என இந்த முன்னறிவிப்புகள் காட்டுகின்றன. ஆனால் அஹ்மதிய்யா இயக்கத்தின் நிறுவனரைத்தான் இந்த முன்னறிவிப்புகள் குறிப்பிடுகின்றன என்பதற்கான ஆதாரம் என்ன என்ற கேள்வி அடுத்து எழுகிறது. சில முன்னறிவிப்புகள் அவர்களின் தனிப்பட்ட பண்புகளைப் பற்றிக் கூட குறிப்பிடுவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, இறுதிக் காலத்தில் தோன்றவிருக்கும் தீர்க்கதரிசியின் காலத்தில் சந்திர கணக்கின் மாதமான ரமலான் மாதத்தின் பதின்மூன்றாம் நாள் சந்திரனுக்கும், இருபத்தெட்டாம் நாள் சூரியனுக்கும் கிரகணம் ஏற்படும் என்றும் இந்த அடையாளம் இறைத்தூதர் என வாதிட்ட வேறு எவருக்கும் வழங்கப்படவோ நிறைவேறவோ இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த அடையாளம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய வாதத்தை அறிவித்ததற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின் **1894** ஆம்

ஆண்டு வானவியல் அறிஞர்கள் கூட அசாதாரணமான நிகழ்வு என்று கூறத்தக்க விதத்தில் நிறைவேறின.

மேலும் மஹ்தி ஒரு நில பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்றும் அவருடைய தந்தை ஒரு மிகப் பெரிய நில உடமையாளராக இருப்பார் என்றும் ஆனால் மஹ்தியின் காலத்தில் அவருடைய குடும்பம் பெருமளவிலான நிலத்தை இழந்து விடும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது அவ்வாறே நிகழ்ந்தது; வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் அன்னாருடைய குடும்பம் ஆளுகின்ற குடும்பம் என்ற அந்தஸ்தை இழந்தாலும் அன்னார் எட்டு கிராமங்களுக்குச் சொந்தக்காரராக விளங்கினார்கள்; ஆனால் ஆங்கிலேய அரசாங்கம் ஏற்பட்டபோது அந்தக் கிராமங்களும் கைப்பற்றப்பட்டன. இப்போது அவர்களுடைய சொத்துரிமை ஒரு கிராமமாகவும் கிராம நிர்வாக உரிமை மூன்று கிராமங்களுக்குமானதாகச் சுருங்கிப் போனது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தந்தையாரின் மரணத்திற்குப்பின் சிறிய அளவிலான இந்தச் சொத்தும் மேலும் சுருங்கிப் போனது. குடும்பப் பிரச்சனைகள் காரணமாக காதியானில் உள்ள நிலங்களும் குடும்பத்தின் பல பிரிவினர்களுக்கிடையே பிரித்துக் கொள்ளப்பட்டன. மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு இரண்டு நோய்கள் இருக்கும்; ஒன்றின் பாதிப்பு அன்னாரது உடம்பின் மேல் பாகத்தில் காணப்படும்; மற்றொன்றின் பாதிப்பு உடம்பின் கீழ் பாகத்தில் காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதன்படியே வாக்களிக்கப்பட்ட

மஸீஹுூக்குத் தலை சுற்றலும், நீரிழிவு நோயும் இருந்தன.

மஹ்தி அவர்கள் கதா என்ற கிராமத்தில் பிறப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அவர்கள் காதியானில் பிறந்தார்கள். சாதாரண மக்கள் அதை காதியா அல்லது காதி என்று அழைத்தனர். அவர்கள் சிறிதளவு திக்குப்பேச்சினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதே போன்று அவர்களுக்குத் திக்கிப் பேசும் நிலை இருந்து வந்தது. மேலும் மஸீஹ் கோதுமை நிறத்தவராகவும் நேரான முடியையும் கொண்டிருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னார் இவ்விரண்டையும் கொண்டவராக விளங்கினார். அன்னாரது திருமணமும் அதன் மூலம் குழந்தை பிறப்பதும் முன்னறிவிப்புக்கு ஏற்ப நடைபெறும் என்றும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே நடந்தது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் திருமணம் செய்வார்கள் என்று அவர்களுக்கு முன்னறிவிப்புக் கிடைத்தது. சில இன ரீதியான வேறுபாடுகளும், பொருளாதார வித்தியாசங்களும் இந்தத் திருமணத்திற்குத் தடைகளாக இருந்தபோதிலும் அந்தத் திருமணம் நடைபெற்றது. அவர்கள் தாம்தான் மஸீஹ் என்று வாதித்ததற்குப் பின் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் அவர்கள் முன்னரே அறிவிப்புச் செய்த சில முன்னறிவிப்புகளுக்கிணங்கவே பிறந்தன.

மேலும் மஸீஹ் பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்று முஸ்லிம்களின் நூல்களிலும் பாரசீகர்களின் நூல்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்னார் அந்த வம்சா வழியைச் சேர்ந்தவராகவே

இருந்தார்கள். அவர்கள் ஒரு வெள்ளிக்கிழமை பிறப்பார்கள் என்றும் இரட்டைக் குழந்தைகளுள் ஒருவராகப் பிறப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டபடியே அவர்களின் பிறப்பு நிகழ்ந்தது. இந்துக்களின் நூல்களின் படி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இந்தியராக இருப்பார்கள் என்று தெரிய வருகிறது. சுருக்கமாகக் கிறிஸ்தவர்கள், பாரசீகர்கள், முஸ்லிம்கள் ஆகியவர்களின் நூல்களில் காணப்பட்ட அனைத்து முன்னறிவிப்புகளும் அன்னாரிடத்தில் நிறைவேறி இருந்தன. சரியான காலத்தில் அவர்கள் தோன்றியது இஸ்லாம் மட்டுமே இன்றைய காலத்தில் இறைவனை நோக்கி வழி நடத்தும் ஒரே மார்க்கம் என்ற உண்மைக்கும், அதுவே மனித இனத்திற்கு இரட்சிப்பு வழங்கும் ஒரே மார்க்கம் என்பதற்கும் சான்றாக விளங்குகிறது. ஏனென்றால் கனி கொடுக்கும் ஒரு மரத்தை இறந்து போனதென்றும், பட்டுப்போய் கனி கொடுக்காத ஒரு மரத்தை உயிருள்ளதென்றும் கருதுவது எப்படி சாத்தியமாகும்?

அஹ்மதிய்யா இயக்கத்தின் நிறுவனரிடத்தில் நிறைவேறிய சில முன்னறிவிப்புகளையும் அன்னார்தாம் முன்னர் தோன்றிய தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த சீர்திருத்தவாதி என்று எடுத்துக்காட்டும் சில முன்னறிவிப்புகளையும் எடுத்துக் கூறிய பின், இப்போது நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கரங்களில் இஸ்லாம் எப்படி புத்துணர்வு பெற்றது என்றும் அன்னார் உலகிற்குச் செய்தது என்ன என்பதைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறேன்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டினார்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் ஒரு புது மார்க்கத்தைக் கொண்டுவரவில்லை என்றும், இஸ்லாத்தின் சேவைக்காகவும், அதன் மறுமலர்ச்சிக்காகவும், அதனைப் பரப்பவும், இஸ்லாத்தின் மூலமாக மனித இனத்தை இறைவனிடம் அழைத்துச் செல்லவுமே அனுப்பப்பட்டார்கள் என்றும் நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். அவர்கள் எவ்வாறு இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டினார்கள்; அமைப்புக்குள் புகுந்துவிட்ட எல்லாத் தவறுகளையும் எவ்வாறு அகற்றினார்கள் என்பதைப் பற்றி இப்போது விளக்கிக் கூற நாடுகிறேன். எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறுகிய நேரத்திற்குள் அவர்கள் செய்த சீர்திருத்தங்களை எடுத்துக் கூறுவது என்பது இயலாத காரியமாகும். எனவே மிகச் சுருக்கமான விபரத்தை எடுத்துக்கூறிவிட்டு எனது தலைப்பின் பிற பகுதிகளுக்குப் போகலாம் எனக்கருதுகிறேன்.

## இறைவனின் ஏகத்துவம்

மார்க்கத்தைப் பொருத்தவரையில் எழும் முதல் கேள்வியே இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றியதாகும். இறைவனைப் பற்றிய உண்மையான புரிதலைத் தராத மார்க்கம் ஒரு மார்க்கம் என்றே வாதிக்க முடியாது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் தோன்றிய போது இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றிய புரிதல் உலகிலிருந்து முற்றாக மறைந்திருந்தது. ஒவ்வொரு மார்க்கமும் இறைவனுடைய ஏகத்துவத்தைப் போதிப்பதாக உரக்க

வாதித்தன என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தக் கோட்பாட்டின் உண்மையான முக்கியத்துவம் இதுவரை இந்த அளவுக்கு முழுமையாக உணரப்படாமல் போனதில்லை.

'இறைவனின் ஏகத்துவம்' என்ற சொற்றொடர், ஒன்று பல தெய்வக் கொள்கைகளின் தொகுப்பாக இருந்தது; அல்லது அதிக பட்சமாக ஒரே ஒரு கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையாக மட்டும் இருந்தது. இறைவன் அவனைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற கொள்கையைப் பரப்புவதற்காக மட்டும் தீர்க்கதரிசிகளை அனுப்பவில்லை என்ற உண்மையின் பக்கம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் கவனத்தை ஈர்த்தார்கள். ஏனென்றால் இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்வது மட்டும் ஒரு மனிதனின் வாழ்வில் எந்த ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மனிதன் ஒழுக்க, ஆன்மீக ரீதியான முழுமைத்தன்மையை அடையத்தக்க விதத்தில் தன்னுடைய வாழ்வை ஏகத்துவக் கொள்கையோடு இயைந்ததாக ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கமாகும்.

அதாவது இறைவன் மீது கொண்டிருக்கும் அன்பைவிடச் சிறப்பான அன்பை வேறு எந்தப் பொருளின் மீதோ படைப்பின் மீதோ மனிதன் காட்டக் கூடாது. அவனுடைய முழுமையான நம்பிக்கையையும் சார்ந்திருத்தலையும் இறைவன் மீது மட்டுமே வைக்க வேண்டும். தனது செயல்கள் மீது எந்த ஒரு பொருளுக்கோ, படைப்புக்கோ ஆற்றல் இருப்பதாகக் கருதக் கூடாது. இந்தப் பொருளில் இறைவனின் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் ஒருவர் அந்த

நம்பிக்கையின் மீது செயல் பட்டால் ஓர் ஒழுக்கப் புரட்சியை அனுபவிப்பது நிச்சயமாகும்.

உலகிலுள்ள எல்லாப் பாவங்களும், பலவீனங்களும் இரண்டு காரணங்களினால் ஏற்படுகின்றன. ஒரு பொருளை அது இல்லாமல் தான் வாழ்வதே பயனற்றது என்று கருதும் அளவுக்குத் தீவிரமாக மனிதன் அதனை நேசிக்கின்றான்; அல்லது ஒரு பொருள் மிகவும் ஆபத்தானதென்றும், வெறுக்கத்தக்கதென்றும் அதன் அழிவில்தான் தனது ஈடேற்றம் இருக்கின்றதென்றும் கருதுகின்றான். அறிவுக்குப் பொருந்தாத அளவுக்கதிகமான இந்த நேசமும், வெறுப்பும் அவனைத் தூய்மைக்குப் பொருந்தாத செயல்களைச் செய்ய வைக்கிறது.

ஆனால் இறைவனின் ஏகத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை கொண்ட ஒருவர் இறைவன் மீது கொண்ட அன்பை விட வேறு எந்த ஒரு பொருளின் மீதோ, மனிதர் மீதோ அன்பு கொள்ள மாட்டார்; இறைவனை விட்டு விலகிச் செல்லும் அளவுக்குக் கடுமையாக எதனையும் வெறுக்கவுமாட்டார். அப்படிப்பட்ட மனிதன் பாவம் செய்வது சாத்தியமில்லாத ஒன்றாகி விடும். இதுதான் உண்மையான ஏகத்துவக் கொள்கையாகும். அதுதான் மார்க்கம் போதிக்கும் உண்மையான நோக்கமாகும். இறைவனின் ஏகத்துவத்தை வெறுமனே வாயால் மொழிவது மட்டுமன்று. அது இறைவனையும் மகிழ்ச்சியடையச் செய்யாது; அல்லது மனிதனின் வாழ்வில் செயல்ரீதியான எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

இந்த அடிப்படையான கொள்கையை வழங்கியதுடன், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள்

மார்க்க அமைப்பில் புகுந்துவிட்ட எல்லா வகையான இணை வைத்தலையும் முற்றிலுமாக அழித்தார்கள். முஸ்லிம்கள் தாங்கள் ஏகத்துவக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள் என்று கூறிக்கொண்ட போதிலும் பல்வேறு பல தெய்வக் கொள்கைக் கருத்துக்கள் அவர்களிடம் குடிகொண்டிருப்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டினார்கள். எடுத்துக்காட்டாக இயேசு தம் பூத உடலுடன் உணவு, தண்ணீர் எதுவுமின்றி வானத்தில் வாழ்ந்து வருவதாக நம்புகின்றனர். கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக அவர் மரணிக்கவே இல்லை; இயேசு இறந்தவர்களை உயிர்ப்பித்தார்; அவரால் பறவைகளைப் படைக்க முடிந்தது என்றும் நம்புகின்றனர்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இந்தக் கொள்கையில் உள்ள தவறைச் சுட்டிக்காட்டினார்கள். இறந்தவர்களை மீண்டும் உயிர்ப்பிப்பதும், ஒரு பொருளைப் படைப்பதும் இறைவனின் தனிப்பட்ட சக்திக்குட்பட்டதாகும். இறைவன் தன் ஆற்றல்களையும், பண்புகளையும் தன்னுடைய படைப்பினங்களில் யாருக்கும் பகிர்ந்தளித்ததில்லை. ஏனென்றால் அவ்வாறு செய்வது அவனது ஏகத்துவத்தைக் கேலிக்குரியதாக ஆக்கிவிடும். இறந்தவர்கள் ஒருபோதும் இந்த உலக வாழ்க்கைக்கு மீண்டும் வரவே முடியாது என்றும், இறைவனைத் தவிர யாருக்கும் படைக்கின்ற ஆற்றல் இல்லை என்றும் இஸ்லாமிய மார்க்க நூல்களிலிருந்தும், பகுத்தறிவு ரீதியாகவும் தெளிவாக நிரூபித்தார்கள். அருளப்பட்ட நூல்களில் காணப்படும் ‘இறந்தவர்களை உயிர்ப்பித்தல்’ என்னும் சொற்றொடர் மனிதர்களின் ஆன்மீக உயிர்ப்பித்தலையோ மரணத்தைத் தழுவுகின்ற அளவுக்கு நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒருவரை ஒருவரின்

பிரார்த்தனையால் குணமாக்குவதையோ குறிக்கும் என்று விளக்கினார்கள். 'படைத்தல்' என்ற சொல் ஆன்மீக மறுபிறப்பையோ மன வலிமையை ஒருமுகப்படுத்துவதன் மூலம் ஏற்படும் ஒருவகையான ஆன்மீக மாற்றத்தையோ குறிக்கும் என்றும் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் இத்தகைய புத்துயிர் ஊட்டுகின்ற ஆற்றலையும், படைக்கின்ற ஆற்றலையும் பெற்றிருந்தனர் என்றும் விளக்கினார்கள்.

## இயேசு உயிரோடு இல்லை

இதே போன்று இயேசு இறந்துவிட்டார் என்பதை திருக்குர்ஆனின் வசனங்களை மேற்கோள் காட்டி நிரூபித்தார்கள். இறைவனைத் தவிர வேறொரு மனிதர் வானத்தில் உயிரோடு இருக்கிறார் என்று நம்புவது இணைவைப்பாகும் என்றும் ஓர் உண்மையான இறைநம்பிக்கையாளரைப் பொருத்தவரை இது வெறுப்புக்குரிய செயலாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்கள். பெரும்பான்மையான முஸ்லிம் பிரிவினர்களால் சாதாரணமாகக் நம்பப்படுவது போன்று இயேசு சிலுவையில் அறையப்பட இருந்த வேளையில் உடலோடு வானத்திற்குத் தூக்கிச் செல்லப்படவோ, கிறிஸ்தவர்கள் நம்புவது போன்று சிலுவையில் இறந்து மீண்டும் உயிர் பெற்று வரவோ இல்லை.

ஆனால் திருக்குர்ஆனும் இயேசுவின் சொந்த வார்த்தைகளும் கூறுவது போன்று, அவர் சிலுவையில் அறையப்பட்டார்; ஆனால் அதில் மரணிக்கவில்லை; அதிலிருந்து உயிருடனேயே இறக்கப்பட்டார் என்று நிரூபித்ததன் மூலம் இயேசு உயிரோடு வானத்திற்கு தூக்கிச் செல்லப்பட்டார் என்ற நம்பிக்கையை அன்னார் மறுத்தார்கள். இந்த உண்மையை அன்னார்

பைபிளிலிருந்தும் பிற பதிவுகளிலிருந்தும் தெளிவாக நிரூபித்தார்கள். இதற்கு முன் மூடி முத்திரையிடப்பட்ட புத்தகமாக இருந்த பைபிள் இப்போது அன்னார் மூலம் திறந்த புத்தகமானது.

குறிப்பாகத் திருக்குர்ஆனில் அவரைச் சிலுவையில் அறையவே இல்லை என்று கூறும் ஒரு வார்த்தை கூட இல்லாத நிலையில் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்ற யூதர்கள், உரோமானியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய அனைவரின் ஒன்றுபட்ட சாட்சியத்தை முஸ்லிம்கள் மறுக்கமுடியாது என்று முஸ்லிம்களிடம் சுட்டிக் காட்டினார். “இந்தப் பொல்லாத விபச்சார சந்ததியினர் அடையாளத்தைத் தேடுகிறார்கள். ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை,” என்ற இயேசுவின் வார்த்தைகளின் பக்கம் கிறிஸ்தவர்களின் கவனத்தை ஈர்த்தார்கள். அதாவது, யோனா தீர்க்கதரிசி மீனின் வயிற்றில் மூன்று பகல்களும், மூன்று இரவுகளும் இருந்தது போல் மனித குமாரனும் மூன்று பகல்களும், மூன்று இரவுகளும் கல்லறையில் இருப்பார். யோனா தீர்க்கதரிசியின் அடையாளம் என்பது அவர் உயிரோடு மீனின் வயிற்றுக்குள் சென்றார்; அங்கு உயிரோடு இருந்தார்; அதிலிருந்து உயிரோடு வெளியே வந்தார் என்பதேயாகும் என்று அன்னார் விளக்கினார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் உயிரோடு இருந்தது தான் உண்மையான அடையாளம். பிறகு எப்படி இயேசு இறந்த நிலையில் கல்லறைக்குள் சென்றிருக்க முடியும்? ஏனென்றால் இயேசு சிலுவையில் இறந்து, இறந்த நிலையில் கல்லறைக்குள் சென்றிருந்தால் யோனா

தீர்க்கதரிசியின் அடையாளம் என்ற அவருடைய முன்னறிவிப்புப் பொய்யாகிப் போயிருக்கும். ஏனென்றால் யோனா இறந்த நிலையில் மீனின் வயிற்றிற்குள் செல்லவில்லை; அவர் இறந்து மீண்டும் உயிர் பெற்று வரவுமில்லை.

பிலாத்துவின் மனைவி இயேசு தொடர்பாகக் கனவு கண்டதையும், அவருக்காகத் தன்னுடைய கணவரிடம் பரிந்து பேசியதையும் பிலாத்துவுக்கு யூதர்களைப் பற்றிய அச்சம் இருந்தாலும், அவருடைய உள்ளத்தில் இயேசுவின் மீது கருணை இருந்திருக்க வேண்டும் என்பதையும் அன்னார் சுட்டிக்காட்டினார்கள். மேலும் இயேசு வெள்ளிக்கிழமை நண்பகல் வாக்கில் சிலுவையில் அறையப்பட்டார். அவருக்கு வலியைப் போக்குகின்ற மருந்துகள் கொடுக்கப்பட்டன. அடுத்த நாள் பஸ்கா பண்டிகை நாளாக இருந்தது. மாலையில் புழுதிக்காற்று வீசியது. பஸ்கா பண்டிகை நாளன்று இயேசுவை சிலுவையில் இருக்குமாறு விட்ட குற்றத்திற்கு ஆளாகக் கூடாதே என்று அஞ்சிய யூதர்கள் அவசர அவசரமாக இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கினார்கள். அவருடைய எலும்புகள் முறிக்கப்படவில்லை. அவருடைய பக்கவாட்டில் ஈட்டியால் குத்தியபோது காயத்திலிருந்து இரத்தம் வந்தது. இதுவே இன்னமும் உயிர் இருப்பதற்கான முடிவான சான்றாகும்.

அந்தக் கால வரலாற்றைப் படிக்கும் போது பின்வரும் விஷயம் தெரியவருகிறது. அதாவது சில நேரங்களில் மனிதர்கள் சிலுவையில் தாங்கள் படும் துன்பங்களிலிருந்து மரணம் அவர்களை விடுதலை செய்யும்வரை ஒரு வார காலம் சிலுவையிலேயே

இருந்திருக்கின்றனர். எலும்புகள் முறிக்கப்படாத நிலையில் மூன்று நாட்களுக்குள் எந்த மனிதனும் சிலுவையில் இறக்கவில்லை. இறப்புக்கான காரணம் பட்டினியே ஆகும்; அல்லாமல் சிலுவையில் அறையப்படுவது மட்டும் அல்ல. ஒரு வாரம் கழிந்த பின்பும் உயிர் போகாமல் இருந்த நிகழ்வுகளும் உண்டு. குற்றவாளியின் எலும்புகளை முறிப்பதன் மூலம் மரணிக்கச் செய்யப்பட்டது. பிறகு எப்படி ஆறு மணி நேரம் சிலுவையில் தொங்குவதனால் இயேசுவுக்கு மரணம் நிகழ்ந்திருக்கமுடியும்? அதுவும் அவரைக் காப்பாற்றுவதற்காகத் தீவிர முயற்சிகள் செய்யப்பட்ட நிலையில்.

அவர் சிலுவையிலேயே மரணித்திருந்தால் ஈட்டியால் குத்தியபோது அவருடைய விலாவிலிருந்து இரத்தம் வெளிவந்தது ஏன்? மேலும் அவர் இறந்த பின் உயிர்த்தெழுந்து, யூதர்களின் அதிகாரத்திலிருந்து அச்சமின்றியும் பாதுகாப்பாகவும் இருந்திருந்தால் அவர் மிகவும் இரகசியமாகச் சென்றதேன்? தாமஸ் தன் விரலால் தொட்டுப் பார்க்க எத்தனித்த காயங்கள் அவர் உடலில் இருந்தது எப்படி? அவரால் ரொட்டியும் மீனும் சாப்பிட முடிந்தது எப்படி? ஓர் ஆவியால் உண்ணவும் குடிக்கவும் முடியுமா? இந்த அடையாளங்கள் எல்லாம் அவரே செய்த முன்னறிவிப்புக்கிணங்க அவர் சிலுவையிலிருந்து உயிரோடு இறக்கப்பட்டார் என்பதையே தெளிவாகக் காட்டுகின்றன. யோனா தீர்க்கதரிசியைப் போல் மூன்று நாட்கள் கல்லறையில் உயிரோடு இருந்தார். அந்தக் கல்லறை இந்தக் காலத்துக் கல்லறையைப் போன்று மூடிய குழியாக இல்லாமல் ஓர் அறையைப் போன்று இருந்தது. அவர் அந்த

அறையிலிருந்து உயிரோடு வெளியே வந்தார். அதன் மூலம் எதிரிகளின் தீய திட்டங்கள் முறியடிக்கப்பட்டன.

காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேலர்களைத் தேடித் தாம் வந்திருப்பதாக அவரே கூறிருப்பதால் அவர் சிலுவையிலிருந்து உயிரோடு இறக்கப் பட வேண்டியது அவசியமாயிற்று என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இயேசுவின் காலத்தில் இஸ்ரவேல் கோத்திரத்தாரில் இரண்டு கோத்திரத்தார் மட்டுமே சிரியாவிலும், பாலஸ்தீனத்திலும் வசித்து வந்தனர் என்றும் மற்ற கோத்திரத்தார் நெபுகட்நேசர் அரசாங்கத்தால் சிறைபிடிக்கப்பட்டு பெர்சியாவுக்குக் கிழக்கில் உள்ள நாடுகளுக்கு நாடு கடத்தப்பட்டனர் என்றும் வரலாற்று நூல்களும், பைபிள் பதிவுகளும் நிரூபிக்கின்றன. அவர்கள் ஆப்கானிஸ்தானிலும், காஷ்மீரிலும் குடியமர்ந்தனர் என்றும் தெரிய வருகிறது.

ஆப்கானிஸ்தான நகரங்களின் பெயர்கள், புதைபொருள் ஆய்வுப்பொருள்கள், காஷ்மீர் கோத்திரங்களின் பெயர்கள், பழங்கால நடைமுறைகள் ஆகிய இவையனைத்தும் இந்த ஆய்வு முடிவுக்குச் சான்று பகர்கின்றன. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களால் ‘கஷீர்’ என்றும் அழைக்கப்படும் ‘காஷ்மீர்’ என்பது ‘ஷீரைப் போன்றது’ என்று பொருள்படும். இது ஒரு ஹீப்ரு வார்த்தையாகும். ஷீர் என்பது ‘மலர்களின் நாடு’ என்று பொருள்படும் சிரியாவின் பெயராகும். காஷ்மீர் மிகவும் செழிப்பான ஒரு பூமியாக இருந்ததால் நாடு கடத்தப்பட்ட யூத கோத்திரங்கள் அதனைத் தங்கள் தாயகத்தின் நினைவாக கஷீர் என்று அழைத்தனர். பட்டான்கள், காஷ்மீரிகளின் முகச் சாயலுக்கும்

யூதர்களின் முக அமைப்புக்கும் சிறப்பான ஒற்றுமை காணப்படுகிறது.

சுருக்கமாக யூதர்களின் மிகச் சிறந்த பத்துக் கோத்திரங்கள் ஆப்கானிஸ்தானிலும், காஷ்மீரிலும் குடியமர்ந்திருந்தனர். தம்முடைய பணியை நிறைவு செய்வதற்காக இயேசு இந்தப் பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. ஆப்கானிஸ்தானத்திற்கும், காஷ்மீருக்கும் இயேசு பயணம் செய்த பாதையை வரையறுக்க முடியும் என்பதை வரலாற்று ஆவணங்களிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) நிரூபித்தார்கள்.

மெஸபடொமியாவிலுள்ள நாஸிபின் என்ற நகரத்தில் ஒரு நடைமேடை இருக்கிறது. இந்த இடத்தில்தான் இயேசு தம்முடைய பயணம் ஒன்றின்போது ஓய்வு எடுத்ததாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன. இவை எல்லாவற்றையும் விட வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால் காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் உள்ள கான்யார் என்னும் மொஹல்லாவில் ஒரு கல்லறை உள்ளது; அந்தக் கல்லறை மேற்கிலிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசியினுடையது என்றும் அவர் 'யூஸ் ஆஸஃப்' என்று அழைக்கப்பட்டார் என்றும் பழங்கால ஆவணங்களும் வரலாற்றுக் குறிப்புகளும் கூறுகின்றன. அவர் அரச குமார தீர்க்கதரிசி என்றும் ஈஸா சாஹிப் அல்லது மெசாயா என்றும் அறியப்படுகிறார். வரலாற்று ஆவணங்களில் அந்தத் தீர்க்கதரிசியின் காலமாகக் குறிப்பிடப்படுகின்ற காலம் இயேசுவின் காலத்தோடு முற்றிலும் பொருந்துகிறது. சுருக்கமாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இயேசுவின் முழு வாழ்க்கையையும் ஆராய்ந்து கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக

இரகசியமாக இருந்த இயேசுவின் வரலாற்றின் ஒரு பகுதியை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்கள்; இவ்வாறு ஒரு வகையான இணை வைப்பின் வாசலை நிரந்தரமாக மூடினார்கள். மேலும் இறைவனின் முழுமையான தன்மையையும், ஏகத்துவத்தையும் உறுதியாக நிறுவியதன் மூலம் ஆன்மீக முன்னேற்றத்தின் வாசலைத் திறந்து விட்டார்கள்.

## மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தொடர்பு

இறைவனின் ஏகத்துவக் கோட்பாட்டிற்கு அடுத்தபடியாக மனித வாழ்க்கையை மிகவும் அதிகமாகப் பாதிக்கக் கூடிய கேள்வி மனிதனுக்கும் அவனைப் படைத்தவனுக்கும் இடையே நிலவும் தொடர்பு பற்றியதாகும். எனக்கும் என்னைப் படைத்தவனுக்கும் உள்ள உறவு என்ன? என் மீதுள்ள தனிப்பட்ட அன்பின் விளைவாக நான் பிறந்த நிமிடம் முதல் எனக்காக அவன் நியமித்துள்ள இலக்கு என்ன? என்பவை ஒரு மனிதனின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கும் கேள்விகளாகும். இந்தக் கேள்விகளைப் பற்றிய சரியான புரிதல் ஒரு மனிதனுக்கு நன்மையின் வாசல்களைத் திறக்கின்றது; இந்தக் கேள்விகளைப் பற்றிய புரிதலில் ஏற்படும் ஒரு தவறு அவனது முன்னேற்றத்தின் வாசல்களை அடைத்துவிடும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் மனித இனம் இந்த கேள்விகள் தொடர்பாகவும் தவறான புரிதலில் இருப்பதை கண்டார்கள். இவை பற்றிய சரியான புரிதலின் பக்கம் அவர்களை அழைத்துச் சென்றதன் மூலம் மிகவும் நன்றிக் கடன்பட்டவர்களாக

ஆக்கினார்கள். எல்லையற்றதும் முடிவில்லாததுமான முன்னேற்றமே மனித இருப்பின் நோக்கமாகும். எனவே இறைவன் தான் மனிதனைப் படைத்த நோக்கத்தை அவனே முறியடித்து விட்டான் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் விளக்கினார்கள். மனிதன் அவனால் உடைக்க முடியாத விலங்குகளோடு படைக்கப் படவில்லை. அதைப்போன்று அவனது சுதந்திரத்தின் வாசலை இறைவன் ஒருபோதும் அடைப்பதில்லை. மனிதன் தானே தன் கைகளால் அதைச் செய்து கொள்கிறான். அல்ல! மனிதன் தானே அதனை மூடிய போது அந்த வாசல்கள் அவனுக்காக மீண்டும் திறப்பதற்கான ஏற்பாட்டினை இறைவன் செய்தான்.

எல்லா மனிதர்களும் இறைவனோடு ஒரே விதமான தனிப்பட்ட தொடர்பையே கொண்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் யாரோடும் அவன் மாற்றான் தகப்பன் மனப்பான்மையோடு நடந்து கொள்வதில்லை என்றும் அன்னார் மேலும் விளக்கினார்கள். மிகச் சிறந்த தீர்க்கதரிசிகளும், சீர்திருத்தவாதிகளும் கூட இறைவனோடு உள்ள தொடர்பில் மனிதர்களிலிருந்து மாறுபட்டவர்கள் இல்லை; அவர்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றின் வாசல்கள் முழு மனித இனத்திற்கும் திறந்தே உள்ளன. தனக்கும் தன்னுடைய படைப்பினத்திற்கும் இடையே எதனையும் இறைவன் அனுமதிப்பதே இல்லை. எல்லாத் தீர்க்கதரிசிகளும் நேர்வழிகாட்டிகள் என்ற அந்தஸ்திலேயே உள்ளனர். அவர்களில் எவரும் இடை ஊடகமாகச் செயல்பட முடியாது. ஏனென்றால் தீர்க்கதரிசிகளின் நலமும் யாருடைய நேர்வழிக்காக அவர்கள்

அனுப்பப்பட்டார்களோ அவர்களின் நலமும் இறைவனுக்குச் சம அளவில் நேசத்திற்குரியதாகும். ஒருவர் தன்னுடைய தூய தன்மையாலும், நேர்மையான நடத்தையாலும் தன்னுடைய சக மனிதர்களை விட இறை நெருக்கத்தைப் பெறலாம். ஆனால் அவர் எவ்வளவு நெருக்கத்தைப் பெற்றபோதிலும் அவர் எவ்வளவு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த போதிலும் அது மற்றவர்களின் முன்னேற்றத்திற்கான வாசலை அடைத்துவிடாது. ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக முன்னேற்றத்தின் மிக உயரமான இடத்தை அடைய முடியும். தட்டுகின்ற அனைவருக்கும் வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன.

## இறைவனின் பண்புகளும் அவற்றின் நிறுத்தமும்

அடுத்து அன்னார் இறைவனின் கருணை, அருள் ஆகியவற்றின் வெளிப்பாடுகள் கடந்த காலத்திற்கு மட்டும் உரியவை; அவனது அருட்களின் வாசல்கள் இப்போது மனித இனத்திற்கு மூடப்பட்டுவிட்டன என்று மனித இனம் முழுவதிலும் பரவிக் கிடந்த தவறான கொள்கையை அகற்றினார்கள். இறைவனின் பண்புகளில் ஏதாவது ஒன்று ஏதேனும் ஒரு காலத்தில் நிறுத்தி வைக்கப்படக் கூடியது என்று நம்புவது பாவமும், அவமரியாதையுமாகும் என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். உயிரோடிருக்கும் ஓர் உயிரினம் உயிர் இருப்பதின் அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டும். தனக்கு உயிர் வழங்கக்கூடிய அமைப்பை ஈர்த்துக்கொள்ள வேண்டியது உயிருள்ள ஓர் உயிரினத்தின் அடையாளமாக இருப்பது போல் தனது

உயிரளிக்கும் பண்பின் தாக்கத்தைத் தனது படைப்புகளின் மீது ஏற்படுத்த வேண்டியது உயிருள்ள படைப்பாளியின் அடையாளமாகும். உயிருள்ள ஓர் இறைவன் இருக்கின்றான் என்றால் அவனது உயிரளிக்கும் பண்புகளை உலகில் நாம் தொடர்ந்து உணர முடிய வேண்டும். இறைவனின் அருளும் கருணையும் கடந்த காலத்தோடு நின்றுவிட்டன என்றும் இக்காலத்தில் அவை தொடரவில்லை என்றும் கற்பனை செய்வது இறைவன் தன் உயிர்த்தன்மையை இழந்துவிட்டான் என்றும் இப்போது இறந்துபோன ஒன்றைப்போல் ஆகிவிட்டான் என்றும் நம்புவதற்கு ஒப்பாக அமையும்.

ஆனால் அவன் எப்போதும் முழுமையானவன்; அவனது பண்புகள் எந்தவிதமான அழிவுக்கும் உள்ளாகாதவை. கடந்த காலத்தில் பேசியது போலவே இறைவன் இன்றும் தன் அடியார்களோடு பேசுகின்றான். கடந்த காலத்தில் அவர்களது பிரார்த்தனைகளைக் கேட்டதுபோல் இன்றும் அவர்களது பிரார்த்தனைகளைக் கேட்கின்றான்; கடந்த காலத்தில் தன்னுடைய அடையாளங்களை வெளிப்படுத்தியது போல் இன்றும் தன்னுடைய அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான். மேலும் கடந்த காலத்தில் செய்ததுபோல் இன்றும் தன்னுடைய புனிதத்தன்மையின் சாயலைத் தன் அடியார்களின் உள்ளங்களில் தொடர்ந்து படியச் செய்கின்றான். அவன் இந்தப் பண்புகளை இப்போது வெளிப்படுத்துவது இல்லை என்ற நம்பிக்கை இறைவனுக்கும் மனித இனத்திற்கும் இடையே பிரிவினையை உண்டாக்கியதன் விளைவாகும். பல்வேறு மார்க்கங்களும் ஆரம்பத்தில் பெற்றிருந்த உயிரூட்டும்

பண்புகளைத் தற்போது இழந்துவிட்டதை இதற்குக் காரணமாகக் கூறலாம். மேலும் இந்த இழப்பை மறைப்பதற்காக அந்த மார்க்கங்களின் அறிஞர்களும், ஆதரவாளர்களும் இறைவனின் அத்தகைய பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுவதைக் காண வேண்டிய தேவையில் முற்காலத்தைப்போல் இன்று உலகம் இல்லை என்ற நம்பிக்கையை வளர்த்திருக்கின்றனர்.

ஆனால் இன்றைய மக்கள் இது போன்ற அடையாளங்கள் அருளப் பெற்றவர்களை விட இறைநம்பிக்கையில் அதிக அன்பையும், மிகுந்த நேர்மையையும் கொண்டிருப்பதையும், இறைத் திருப்திக்காகத் தங்களுடைய பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், விருப்பங்கள், கருத்துக்கள், தங்களின் உயிர்கள் ஆகியவற்றைத் தியாகம் செய்வதற்கு ஆயத்தமாகவும், விருப்பமுடையவர்களாகவும் இருப்பதை நாம் காண்கிறோமா?

மோசே, எலியா, தாவூத், எசாயா, யோவான், இயேசு, கிருஷ்ணர், முஹம்மத் ஆகியோரையும், அவர்களைப் பின் பற்றியோர்களையும் விட இன்றைய மக்கள் இறைவன் மீது உறுதியான நம்பிக்கையையும் அதிக அன்பையும் கொண்டிருக்கிறார்கள் என்று ஒப்புக்கொண்ட போதிலும் கூட உலகம் இறைவனின் பண்புகளை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய தேவையில் இல்லை என்று கூறலாகாது. ஏனென்றால் அப்படிப்பட்ட வெளிப்படுத்துதல்கள் மனிதர்களின் உள்ளத்தில் இறைவனின் இருப்பைப் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான வழி என்பது மட்டுமல்லாமல் மனித இருப்பின் நோக்கமாகவே அது விளங்குகிறது.

அழகு நேசத்தை உருவாக்குகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் நேசம் தான் நேசிக்கின்றவரின் அழகை மேலும் மேலும் பார்த்து இரசிக்கத் தூண்டுகிறது என்பதிலும் ஐயமில்லை. நேசிக்கின்ற ஒருவரை தாம் நேசிப்பவரின் பக்கம் நெருக்கமாகக் கொண்டு வருவதுதான் நேசத்தின் ஒரே வெகுமதியாகும். எனவே இன்றைய மனிதர்கள் கடந்த கால மனிதர்களை விட அதிகமாக இறைவனை நேசிக்கின்றார்கள் என்றால் இறைவனின் பண்புகளின் முழுமையான வெளிப்பாட்டைக் காண்பதற்கு அவர்களுக்கு அதிகமான உரிமையிருக்கிறது. அதன் மூலம் அவர்களின் நேசம் திருப்தி அடையும்; அவர்களின் நம்பிக்கைக்குரிய வெகுமதி கிடைக்கும். தன்னுடைய நேசத்திற்குரியவனின் தரிசனத்தை விட ஓர் உண்மையான அன்பருக்குச் சொர்க்கம் வேறென்ன இருக்க முடியும்? விலகி இருக்கும் ஒருவருக்குத் தன் நேசத்திற்குரியவனின் நெருக்கத்தைவிட வேறென்ன வெகுமதி இருக்கமுடியும்? எனவே கடந்த காலத்தில் இறைவன் தன்னை வெளிப்படுத்திக் காட்டியது போல் இப்போதும் தன்னை வெளிப்படுத்திக் காட்டுவதாக வாதிக்கும் மார்க்கம் மட்டுமே உண்மையான மார்க்கம் என்று உரிமை கொண்டாட முடியும். அந்த வாதத்தைச் செய்யும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமே!

## இறைவெளிப்பாட்டைப் பற்றிய புரிதல்

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் மிகவும் ஒரு தவறான கருத்து பரவலாக நிலவியது; அது எல்லா மதங்களின் அடிப்படையையும் வலுவிழக்கச் செய்துவிட்டது; மார்க்கத்தின் சாரமே முற்றிலுமாக

மாறிப்போனது; அதன் விளைவாக இறைவெளிப்பாடு என்னும் தெய்வீக ஒளியின் இடத்தை மனித மூளையில் உதித்த கருத்துக்களும் கொள்கைகளும் பிடித்துக் கொண்டன. இறைவெளிப்பாட்டைப் பற்றிய முற்றிலும் தவறான கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சுதந்திரமான சிந்தனையும் கடைசியாகத் தோன்றிய தீர்க்கதரிசியின் காலத்திலிருந்து கடந்துவிட்ட கால இடைவெளியும் இறைவெளிப்பாடு என்பது மனதில் தோன்றும் எண்ண உதிப்புத்தான் என்று உலகின் பெரும்பகுதியை நம்பச் செய்தது.

ஒருபுறம் இறை வெளிப்பாடு முற்றிலுமாக நின்று போனதும் இதற்கு ஒரு காரணம். மறுபுறம் இறைவன் ஒரு பௌதீகப் பொருளாக இல்லாததாலும் அவன் பேசுவதற்கு மனிதர்களைப் போன்று பௌதீகப் பொருள்களைச் சார்ந்து நிற்காததாலும் அவன் வார்த்தைகளில் பேச முடியாது என்பதாலும் இவ்வாறு கருதப்பட்டது. இறை வெளிப்பாடு வார்த்தைகளில் அருளப்படுகின்றன என்றும் அது அருளப்படுகின்ற விதம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் உரையாடுவதைப் போன்று உறுதியானதாகவும், சந்தேகத்திற்கிடமின்றியும் அமைந்துள்ளது என்றும் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இறைவெளிப்பாடு வார்த்தைகளில் அமையாவிட்டால் அது முற்றிலும் சந்தேகத்திற்கிடமில்லாததாக இருக்க முடியாது என்றும் மேலும் நிச்சய உறுதியை நோக்கி இட்டுச் செல்ல முடியாது என்றும் எடுத்துக் காட்டினார்கள். ஏனென்றால் மன உதிப்புத்தான் இறைவெளிப்பாடு என்றால் ஒவ்வொரு மனிதனும் தாம் உதிப்பைப்

பெற்றதாகக் கற்பனை செய்யமுடியும். இதன் மூலம் மனித இனத்தைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லமுடியும். இறைவெளிப்பாட்டைப் பற்றிய தவறான புரிதல் நிலை பெற்றுவிட்டதன் காரணமாக இது போன்ற பல சம்பவங்கள் நடைபெற்று விட்டன.

சந்தேகங்களையும் தவறான புரிதல்களையும் அகற்றுவதே இறைவெளிப்பாட்டின் நோக்கமாகும். வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படாவிட்டால் அது சந்தேகம், நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றின் வாசல்களை இன்னும் அதிகமாகத் திறந்துவிடும். ஏனென்றால் அப்போது இறைவெளிப்பாட்டையும் ஒரு மனிதனின் சொந்த மனத்தின் கற்பனையையும் பிரித்துக் காட்டும் எந்த உபாயமும் இல்லாமல் போய்விடும். அதிக மகத்துவமும் கம்பீரமும் நிறைந்த வார்த்தைகளில் இறைவெளிப்பாடுகள் அருளப்படுகின்றனவென்றும் இரு மனிதர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடலைப் போன்று இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உரையாடல் நடைபெறமுடியும் என்றும் அதன் மூலம் இறைவெளிப்பாட்டைப் பெறுகின்றவர் மேற்கொண்டு எந்த ஆதாரமோ வாதமோ தேவைப் படாத அளவுக்கு நிச்சய உறுதியைப் பெறுகிறார் என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் விளக்கிக் கூறினார்கள்.

பேசுவதற்குத் தேவையான நாக்கை இறைவன் பெற்றிருக்கிறானா என்ற கேள்விக்கு அவன் தன்னுடைய விருப்பத்தையும் திருப்தியையும் வெளிப்படுத்துவதற்கு பௌதீகப் பொருளின் தேவை எதுவும் அவனுக்கு இல்லை என்று பதிலளித்தார்கள். பௌதீகக் கைகள் எதுவும் இல்லாமல் இந்த அகிலத்தைப்

படைத்திருக்கிறான். பௌதீக கண்கள் இல்லாமல் அவனால் பார்க்க முடியும்; அதைப்போன்று பௌதீக நாக்கின் உதவியின்றி அவனால் பேச முடியும் என்றும் அவர்கள் கூறினார்கள். உண்மையில் இறைவன் பேசுகிறான் என்று நாம் கூறும்போது அவன் உண்மையில் நாவினால் பேசுகிறான் என்ற பொருளில் கூறுவதில்லை. வார்த்தை வடிவத்தில் வெளிப்படுகின்ற விதத்தில் இயற்கையில் அசைவுகளை ஏற்படுத்துகின்றான்; அவை இறைவெளிப்பாட்டைப் பெறுகின்றவரால் கேட்கப்படுகின்றது. வார்த்தைகளின் தேவை அவனுக்கில்லை; ஆனால் இறைவெளிப்பாட்டைப் பெறுகின்ற மனிதனுக்கு வார்த்தைகளின் தேவை இருக்கிறது. இறைவெளிப்பாடுகள் வார்த்தைகளின் வழியாக அருளப்படுகின்றன என்று மட்டும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் வாதிக்கவில்லை. அதனை எடுத்துக்காட்டுகள் மூலம் நிரூபிக்கவும் அவர்களால் முடிந்தது. ஏனென்றால் அன்னாருடைய ஆன்மீக ஆற்றலினால் பலன் பெற்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் அத்தகைய இறைவெளிப்பாடுகளைப் பெற முடிந்தது; பெற்றிருக்கிறார்கள். இந்தக் கட்டுரையின் ஆசிரியரும் பலமுறை இத்தகைய இறைவெளிப்பாட்டைப் பெற்ற அனுபவமுடையவராக இருக்கிறார்.

இறைவெளிப்பாட்டின் தன்மையைப் பற்றிய இந்த விளக்கத்தின் காரணமாக உலகம் அன்னாருக்கு மிகவும் கடன் பட்டு நின்றது. ஏனென்றால் இறைவெளிப்பாடுகள் வெறும் மன உதிப்புத்தான் என்ற விளக்கத்தின் மூலம் இறைவெளிப்பாடுகள் மூலம் அருளப்பெற்ற எல்லா நூல்களின் கட்டுப்படுத்தும் தன்மையையும் அடித்துச்

செல்வதன் மூலம் மார்க்கத்தின் மீது தொடுக்கப்பட்ட அபாயகரமான தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிமுறையை அன்னார் வழங்கி விட்டார்கள். மேலும் பின்தங்கி விட்ட மக்களின் கால் எட்டுக்களை நிச்சயமாக உயிர்ப்பிக்கச் செய்யும் முழுமையான புரிதலைப் பெறக்கூடிய நம்பிக்கைகளைத் தூண்டிவிட்டார்கள்.

## எல்லாச் சமுதாயங்களும் இறைவெளிப்பாட்டைப் பெற்றன

இறைவனோடு தொடர்புடைய இன்னொரு முக்கியமான கேள்வி உள்ளது; அது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவும் உறவையும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவும் உறவையும் சமமாகப் பாதிக்கிறது. அதாவது எந்த சமுதாயங்களெல்லாம் இறைவெளிப்பாட்டினைப் பெற்றன? அவை இறைவெளிப்பாட்டினைப் பெறுவதற்கு எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதாகும். இந்தக் கேள்விக்குப் பதில் காணாமல் இறைவனின் இருப்புத் தொடர்பான பிற கேள்விகள் தொடர்பாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் மேற்கொள்ள நினைத்த சீர்திருத்தங்கள் முழுமை பெறமாட்டா. இந்தக் கேள்வி தொடர்பாக அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். இந்தக் கேள்வியைப் பொருத்தவரையில் இறைவன் அகிலம் முழுவதற்கும் அதிபதியாக இருப்பதால், அவனுடைய வழிகாட்டுதல் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக மட்டும் இருக்க முடியாது என்பதை அன்னார் சுட்டிக் காட்டினார்கள். அவன் மனித இனம் முழுமைக்கும் அதிபதியாக இருப்பதாலும் அவர்களனைவருக்கும் சிந்திக்கின்ற

மனதை வழங்கி இருப்பதாலும் எந்த ஒரு சமுதாயத்தையும் தன்னுடைய வழிகாட்டுதலிலிருந்து விலக்கி வைக்க முடியாது. திருக்குர்ஆன் கூறுவதாவது:-

“ஓர் எச்சரிப்பாளர் தோன்றாத எந்த ஒரு சமுதாயமும் இல்லை.” **(35:25)**

எல்லாச் சமுதாயங்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் இறைவன் தன் தூதர்களை அனுப்பி உள்ளான்; சூரியன் முழு உலகத்திற்கும் ஒளி வழங்குவது போல் இறைவெளிப்பாடு என்னும் ஒளி எல்லாக் காலத்திலும் பூமியின் இருண்ட மூலை முடுக்கெல்லாம் ஒளி வழங்கியுள்ளது. இன்று நாம் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் மத்தியில் இறைவெளிப்பாட்டின் ஒளியை நம்மால் காணமுடியவில்லையென்றால் அதன் பொருள் அவர்கள் மத்தியில் தீர்க்கதரிசி எவரும் தோன்றவில்லை என்பதல்ல; அவர்கள் தங்கள் சமுதாய மரபுகளை அழிந்து போகவிட்டு விட்டார்கள் என்பதேயாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் அன்னார் இந்தியாவின் தீர்க்கதரிசிகளான கிருஷ்ணர், ராமர், புத்தர். பெர்சியாவின் தீர்க்கதரிசியான ஸொராஸ்டர் ஆகியவர்களின் உண்மைத்தன்மையை நிரூபித்தார்கள். அவர்களின் வாதங்களை மறுப்பது இறைவனின் அகிலம் தழுவிய காத்தோம்பும் பண்பை மறுப்பதாகும் என்றும் கூறினார்கள்.

இது எந்த ஒரு பிரிவினரிடமும், மதத்தினரிடமும் காணப்படாத ஒரு கொள்கையாகும். மேலும் உண்மையில் பெரும்பான்மையான மக்கள் தத்தமது மார்க்க நிறுவனர்கள் மட்டுமே இறைவெளிப்பாட்டினைப் பெற்றார்கள் என்று நம்பினார்கள். மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இறைவெளிப்பாடுகள் அருளப்பட்டன

என்று நம்பியவர்களும் பெரும்பாலும் அந்த மதங்களின் நிறுவனர்கள் மனித இனத்தின் நன்மைக்காகச் செய்த சேவைகளின் காரணமாக ஏற்பட்ட ஒரு வகை தனிப்பட்ட மதிப்பின் காரணமாகவே ஆகும்; அகிலத்தைக் காத்தோம்பும் இறைவனின் பண்பை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் அல்ல. ஆனால் மனித இனத்திற்குத் தொண்டாற்றி வரலாற்றில் இடம் பிடித்துள்ள அவர்கள் இறைவனின் நல்லடியார்கள் என்பது மட்டுமில்லாமல் ஒரு சமுதாயத்தின் வரலாறு பாதுகாக்கப்பட்டுள்ளதோ இல்லையோ ஒவ்வொரு சமுதாயமும் அதன் தூதரைப் பெற்றுள்ளது என்பதற்கு இறைவனின் பண்புகளும் வசனங்களும் சான்று பகர்கின்றன என்றும், தூதர்கள் மூலம் வழிகாட்டுதலைப் பெறுவது என்பது மனித இனத்தின் உரிமையாகும் என்றும், இதனை இறைவன் எப்போதும் மறுப்பதில்லை என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து எடுத்துக் காட்டினார்கள். இந்தக் கொள்கை அனைத்து சமுதாயங்களுக்கும் இறை அன்பின் வாசல்களை எந்த அளவுக்குத் திறந்திருக்கிறது என்றால் மனித இனத்திற்கிடையே உள்ள உறவுகளை இணக்கம், அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்படிச் செய்துள்ளது. மேலும் எல்லா மார்க்கங்களின் நிறுவனர்களையும், நல்லடியார்களையும் அவமரியாதையிலிருந்தும் அவதூறுகளிலிருந்தும் பாதுகாத்திருக்கிறது.

## திருக்குர்ஆன் முழுமையான வேத நூல்

மறுபுறம் மனிதனின் சிந்தனைத் திறன் படிப்படியாக வளர்ச்சி அடைந்தது என்றும் அதன்

வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் அந்நிலைக்கேற்ற போதனைகளை ஞானமிக்க இறைவன் தொடர்ந்து வழங்கி வந்தான் என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மனிதனின் சிந்தனைத்திறன் முழுமையான வளர்ச்சி பெற்று மனித இனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே தொடர்புக்கான வழிமுறைகள் முழுமை பெற்று உலகம் அதன் முன்னேற்றத்தில் மனித இனம் முழுவதும் ஒரே நாடாகவும் ஒரே சமுதாயமாகவும் கருதப் படக்கூடிய காலம் வரை இது நடைபெற்றது. இந்தக் கால கட்டத்தில் இறுதி மார்க்கச் சட்டம் கொண்டுவரும் இறைத்தூதராக முஹம்மது (இறைவனின் சாந்தியும் சமாதானமும் அன்னார் மீது உண்டாவதாக) அவர்களை அருளப்பட்ட வேதங்களில் இறுதியானதும் முழுமையானதுமாகிய திருக்குர்ஆனோடு அனுப்பினான். அது எல்லாக் காலங்களின் தேவைகளையும் நிறைவு செய்யும் போதனைகளைக் கொண்டிருக்கிறது.

இருந்தபோதிலும் இறைவெளிப்பாடு, ஆன்மீக முன்னேற்றம் ஆகியவற்றின் கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன; என்றும் திறந்தே இருக்கும். எந்தப் புதிய மார்க்கச் சட்டமும் இனிமேல் அருளப்பட மாட்டாது; ஆனால் திருக்குர்ஆனில் அடங்கியுள்ள கருவூலங்களைத் திறந்து மனித இனத்திற்கு இறையுணர்வின் வாசல்களைத் திறந்து தரக்கூடிய இறைத்தூதர்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். ஏனென்றால் ஒரு முழுமையான வேதம் இருக்கும் போது புதியதொரு சட்டத்தின் தேவை இருக்காது; அதே நேரத்தில் மனிதனுக்கு இறைவனைப் பற்றிய புரிதலின் தேவை இருந்து கொண்டே இருக்கும். எனவே எந்த

ஒரு புதிய மார்க்கச் சட்டமும் தோன்ற முடியாது. ஆனால் ஆன்மீகப் பரிபூரணத்துவத்தின் காரணமாக அடையக்கூடிய இறைத்தூதுத்துவத்தின் வாசல் திறந்தே இருக்கிறது. ஏனெனில் இறைவன் நம் முன்னோர்களைக் காத்தோம்புவனாக இருந்ததுபோல் நம்மையும் காத்தோம்புபவனாக இருக்கிறான்.

இருந்தபோதிலும் மனித மனம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருப்பதால் திருக்குர்ஆனே அருளப்பட்ட வேதங்களில் இறுதியானதாகவும், முழுமையானதாகவும் இருக்கிறது என்ற கொள்கை மனிதன் தன் அறிவு வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டான்; இதற்கு மேல் செல்வதற்கு எதுவுமில்லை என்பதைக் குறிக்காது என்ற உண்மையை விளக்குவதிலும் வலியுறுத்துவதிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் கவனமாக இருந்தார்கள். மாறாக மிகவும் முழுமையான நூலானது அறிவு வளர்ச்சிக்கு அதிகம் உதவி செய்வதாக இருக்கவேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இறைவெளிப்பாட்டு நூலின் பொருளடக்கம் தொடர்பாக அன்னார் பின்வரும் அற்புதமான பரிசோதனையை முன்வைத்தார்கள். அது இறைவெளிபாட்டுப் புத்தகங்களைப் பற்றிய உண்மையைத் தேடுவோரின் பார்வையைப் புரட்டிப் போட்டது.

அதாவது இறைவனின் வார்த்தை என்பது இறைவனின் செயலைப் போன்று இருக்க வேண்டும். இறைவனின் செயல் முடிவில்லாத இரகசியங்களைக் கொண்ட கருவூலமாக இருப்பது போன்று இறைவனின் சொல்லும் இருக்கவேண்டும். இறைவனின் செயல் உலகம் படைக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை

முழுமையாகக் கண்டு பிடிக்கமுடியாத அளவுக்கு இருக்கிறது. அதேபோன்று இறைவனின் வார்த்தையும் முடிவில்லாத அறிவு, ஞானத்தின் கருவூலமாக இருக்கவேண்டும். ஏனென்றால் அவை முடிந்து போகுமென்றால் மனித வாழ்வின் ஒரு சிறு பகுதியோடு மட்டும் தொடர்புடைய பௌதீக வாழ்விற்கு முடிவில்லாத கருவூலங்களை வழங்கிய இறைவன் ஆன்மீக உலகமான அவனுடைய வேதத்தை அதனுடைய கருவூலங்கள் சீக்கிரம் முடிந்துவிடும் விதத்தில் படைத்திருக்கிறான் என்று ஒப்புக்கொள்ளக் கூடிய கட்டாயத்திற்கு ஆளாக்கிவிடும். ஆனால் அவ்வாறு இல்லை.

திருக்குர்ஆன் பௌதீக உலகத்தைவிட அதிக எண்ணிக்கையிலான கருவூலங்களைக் கொண்டிருக்கிறது; உண்மையிலேயே அவற்றைத் தேடுவோருக்கு அவை திறந்து தரப்படுகின்றன. இந்தப் புதிய கொள்கையைப் பற்றிச் சிந்திப்பதின் மூலம் பெரும்பான்மையான மக்கள் அறிவுப்பூர்வமான ஆனந்தத்தை அடைவர்; இது அறிவின் அடிவானத்தை எல்லையற்ற அளவுக்கு விரிவுபடுத்தும். ஆனால் நான் அதனை ஒரு நடைமுறை சோதனைக்கு உட்படுத்தினேன். திருக்குர்ஆனைக் கற்பதற்கான இந்தக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தியதன் மூலம் நான் அடைந்த பயன் என்னை பேரின்பத்தால் நிறைத்தது. திருக்குர்ஆனைக் கற்பதன் மூலம் வெளிப்படும் அறிவுலகின் விரிவைப் பற்றி நான் ஆழ்ந்து சிந்திக்கும்போது இந்த அகிலமே ஒரு துரும்பாக எனக்குக் காட்சியளிக்கிறது. ஏனென்றால் திருக்குர்ஆன் எனக்குக் காட்டும் ஆன்மீக உலகின் ஒரு

மூலையைக் கூட அகிலம் முழுவதும் சேர்ந்தாலும் நிரப்ப முடியாது. திருக்குர்ஆனின் இந்த அற்புதமே அதன் உண்மைக்கான வலுவான சான்றாகும்.

ஒரு மனிதன் எவ்வளவுதான் கற்றறிந்தவனாக இருந்த போதிலும் எதிர் காலத்தில் எழ இருக்கும் அத்தனை தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் முன்னரே வழங்க முடியாது. ஏனென்றால் மனிதனின் சூழ்நிலைகள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கின்றன. மனிதன் எதிர்காலத்தில் எந்த மாதிரியான சூழ்நிலைகளை எதிர்கொள்வான்; முற்றிலும் புதிய மார்க்க சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவிதமான புதிய அறிவியலையும் அறிவையும் பெறுவான்; அவனுடைய புத்திக்கூர்மை எந்த அளவுக்கு வளர்ச்சி அடையும்; எந்த வகையான ஆன்மீக உணவு அவனுக்குத் தேவைப்படும் என்பன போன்றவற்றை யாரால் யூகிக்க முடியும்?

எல்லாக் காலத்தின் தேவைகளுக்கும் ஏற்ற முழுமையான போதனைகளைக் கொண்டதும், எல்லாத் தீமைகளுக்கும் தீர்வாகவும் எல்லாக் காலத்திற்கான ஒழுக்க, ஆன்மீக முன்னேற்றத்திற்கான வழிமுறையாகவும் உள்ள ஒரு நூல் இறைவனால் அருளப்பட்ட நூலாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில் அது மனித இன வளர்ச்சித் தத்துவத்தை விளக்குகிறது. மேலும் என்றென்றும் மாறிக்கொண்டே இருக்கும் ஒன்றின் வளர்ச்சித் தத்துவத்தில் தேர்ச்சி பெறுவதென்பது மனித அறிவின் சக்திக்கு அப்பாற்பட்டதாகும்.

இஸ்லாத்தின் போதனைகள் அடிக்கடி குறை கூறப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் நிரூபித்துக் காட்டியது போல் இஸ்லாத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட எல்லா ஆட்சேபனைகளும் தீர்க்கமாக சிந்திக்காததன் விளைவாகவோ அல்லது உணர்வுகள் அறிவை மிகைப்பதன் காரணமாகவோ ஏற்பட்டவையாகும். இஸ்லாம் எத்தகைய ஒரு முழுமையான போதனையை வழங்குகின்றதென்றால் அதனை அறிவின் தீர்ப்புக்கும் மன உணர்வுகள் அல்லது மரபு சார்ந்த எண்ணங்கள் போன்றவற்றிற்கு ஆட்படாத சிந்தனையின் தீர்ப்புக்கும் உட்படுத்தினால் மனிதனின் ஒழுக்க, ஆன்மீக முன்னேற்றத்திற்கு இதைவிடச் சிறந்த அல்லது முழுமையான மார்க்கச் சட்டத்தைக் காண முடியாது. உண்மை இதற்கு முன்னர் இந்த அளவு அவதூறுக்கு ஆளானது இல்லை. ஆனால் இஸ்லாம் அவ்வளவு அவதூறுக்கு ஆளாகி இருக்கிறது.

## இஸ்லாமும் ஜிஹாதும்

மார்க்கம் வாளால் பரப்பப்படுவதை இஸ்லாம் அனுமதிக்கின்றது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால் திருக்குர்ஆன் தெளிவாக இவ்வாறு அறிவிக்கிறது:

“மார்க்கத்தில் எவ்விதக் கட்டாயமுமில்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நேர்வழிக்கும் தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு மிகத் தெளிவாகி விட்டது. எந்த ஒரு மனிதனும் இரண்டையும் பிரித்துப் பார்த்து அறிந்து கொள்ளலாம்” **(2:257)**

இஸ்லாத்தை அழிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் மார்க்கத்தைக் கைவிட்டுவிடுமாறு முஸ்லிம்களைக் கட்டாயப்படுத்தியும் போர் தொடுப்பவர்களை எதிர்த்து மட்டும்தான் போர் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தோடு எதிரி போர் செய்யும் வரைதான் அவர்களுக்குப் போரிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எப்போது எதிரி போரை நிறுத்திக் கொள்ள விரும்புவாரோ அப்போது அவர்களும் போரை நிறுத்திக் கொள்ளவேண்டும். கோபத்தின் காரணமாகவும், பழிதீர்க்கும் வெறியுடனும், எதிரியை அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், மேலும் பல தேவையற்ற உயிரிழப்பை ஏற்படுத்துவதன் மூலம் அமைதிக்காகச் செய்யப்படும் முயற்சிகளை நிராகரிக்கக் கூடாது.

இந்தக் கட்டளைகளுக்குப் பிறகும் இஸ்லாம் மார்க்கத்தை வாளால் பரப்ப அனுமதிக்கின்றது என்று கூறமுடியுமா? நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட போர்கள் அனைத்தும் தற்காப்புப் போர்களாகவே இருந்தன. அவை அனைத்தும் இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்காகச் சபதம் மேற்கொண்டு தங்கள் வீடுகளை விட்டுக் கிளம்பிய எதிரிகளுக்கு எதிராகவே நடைபெற்றன. ஒருவன் சார்ந்திருக்கும் மதத்தை இன்னொருவன் வாளால் அழிக்க முற்படும் போது அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் அவனுக்கு அடிபணிந்து போய் அவனுடைய சபலத்தை நிறைவேற்றுவதற்காகத் தங்கள்

உயிர்களைத் தியாகம் செய்யவேண்டும் என்று போதிப்பதுதான் உண்மையான மார்க்கத்தின் பணியா? நிச்சயமாக எந்த ஒரு உண்மையான மார்க்கமும் இது போன்ற போதனையை வழங்காது. ஏனென்றால் அதனை இன்னொரு விதமாகக் கூறுவதென்றால், தீமையும், கொடூரமும் தடையின்றிப் பெருகச் செய்யப்பட வேண்டும் எனவும், உண்மையும், நேர்மையும் அவற்றிற்காகத் தியாகம் செய்யப்பட வேண்டும் எனவும் போதிப்பதற்குச் சமமாகும்.

## இஸ்லாமும் அடிமை முறையும்

மேலும் இஸ்லாம் அடிமை முறையை ஆதரிக்கின்றது என்று குற்றம் சாட்டப்படுகின்றது. ஆனால் இஸ்லாம் அடிமை முறையின் மிகப் பெரிய எதிரியாக விளங்குகிறது. இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு மனிதர்களை அடிமைகளாக மாற்றுவதற்கு நிலவி வந்த எல்லா வழிமுறைகளுக்கும் இஸ்லாம் முற்றுப்புள்ளி வைத்தது. காரணம் எதுவுமின்றி சிறைபிடிக்கப்படும் மனிதர்களையோ, எதிரி இனத்தை அல்லது நாட்டைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காகவோ, உலகியல் போரில் சிறை பிடிக்கப்பட்ட கைதிகளையோ அடிமைகளாக ஆக்குவதை இஸ்லாம் தடை செய்கிறது. வாளின் மூலம் மார்க்கத்தைக் கைவிடச் செய்வதையோ ஒரு மார்க்கத்தை ஒப்புக் கொள்ளச் செய்வதையோ நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் போரில் சிறை பிடிக்கப்படும் கைதிகளை மட்டுமே அடிமைகளாக மாற்றுவதற்கு அது அனுமதிக்கின்றது. மனிதத் தன்மையின் வட்டத்திற்கு வெளியே நிறுத்தும் இத்தகைய

குற்றத்திற்காளாகின்ற முயற்சியை மேற்கொள்வது ஒரு குற்றச்செயல் என்பதில் சந்தேகம் கொள்ள முடியுமா?

ஒரு மனிதனின் பௌதீக சுதந்திரம் பறி போவதைக் கண்டு வெறுப்பை வெளிப்படுத்துகின்றவர்கள் அவ்வாறு தண்டிக்கப்படுகின்ற அந்த மனிதன் பிற மனிதர்கள் இறைவனை வழிபடுவதை வாளினால் பலவந்தமாகத் தடுத்து அவர்களின் ஆன்மாவை சாத்தானின் அடிமைத்தனத்தில் ஒப்படைக்க முயற்சித்ததை எண்ணிப் பார்க்க வேண்டும். அவன் தன் நோக்கத்தில் வெற்றி பெற்றிருந்தால் இலட்சக்கணக்கான மனிதர்கள் உண்மையைக் கைவிட்டு நிரந்தர இருளில் மூழ்குமாறு கட்டாயப்படுத்தப் பட்டிருப்பார்கள். இப்படிப்பட்ட மனிதன் தன்னுடைய குற்றத்திற்காக உண்மையில் வருந்தாத வரையிலும் தன்னுடைய நடத்தைக்காக உண்மையிலேயே வருந்தாத வரையிலும் அவருடைய சுதந்திரம் அவருக்கு மீண்டும் வழங்கப்படுவதற்கு அவர் தகுதியானவரா?

ஏனென்றால் அடிமைத்தனம் என்றால் என்ன? ஒரு மனிதன் அவனது தவறுக்கான பொறுப்பில் தனது பங்கைச் செலுத்தும் வரையிலும் - போருக்கான செலவில் தனது பங்கைச் செலுத்தும் வரையிலும் - அவனது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி வைப்பதேயாகும். போர்க் கைதிகளை வைத்துக் கொள்வதையும் அவர்களிடம் வேலை வாங்குவதையும் தடை செய்யும் தார்மீக - ரீதியிலான அல்லது அரசியல் ரீதியிலான காரணம் ஏதேனும் உள்ளதா? கடினமான போரினால் ஏற்பட்ட இழப்பில் தமது பங்கை ஈடு செய்யும்வரை முழு நாடுகளையும் சமுதாய, அரசியல், பொருளாதார அடிமைத்தனத்தில் வைத்திருப்பதை

அனுமதிக்கப்பட்டது என்று கருதும் போது, அப்படிப்பட்ட போரில் நேரடியாகப் பங்கேற்றவர்கள் போரினால் ஏற்பட்ட செலவுகளில் தமது பங்கைச் செலுத்த இயலும் வரை போர்க் கைதிகளாக வைக்கப்படுவது முறையற்றதென்றும் மனிதத் தன்மையற்றதென்றும் குறை கூறப்படுகின்றது.

அடிமையாக வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு போர்க் கைதியும் போருக்கான செலவினத்தில் தமது பங்கைச் செலுத்துவதன் மூலம் தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமைக்கு இஸ்லாம் வழிவகை செய்கிறது. எனவே அவர் தமது சுதந்திரத்தை விட அடிமைத்தனத்தை விரும்பவில்லை என்றால் அவரோ அவரது உறவினர்களோ அல்லது சகோதர நாட்டினரோ எந்த நாட்டின் மார்க்கத்தை அழிக்க முயற்சித்தாரோ பாதிக்கப்பட்ட அந்த நாட்டிற்கு அதன் மீது திணிக்கப்பட்ட போரினால் ஏற்பட்ட செலவில் தமது பங்கைச் செலுத்தி அவரது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளாதது ஏன்?

## இஸ்லாமும் வட்டியும்

மேலும் வட்டி கொடுப்பதையும், வாங்குவதையும் தடை செய்வது தொடர்பான இஸ்லாத்தின் போதனையும் ஆட்சேபிக்கப்படுகின்றது. ஆனால் வட்டியானது உலகின் குடிமை, சமுதாய அமைப்புகளின் இயல்பான அடிப்படையன்று; ஆனால் அந்த மாதிரியான ஓர் அடிப்படையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சற்றுச் சிந்திப்போமானால் திருக்குர்ஆன் கூறுவதுபோல் தற்காலத்தில் மேற்கொள்ளப்படும் அநேகப் போர்களுக்கு வட்டியே காரணமாகும் என்பது தெரியவரும்.

அரசாங்கங்களால் வட்டிக்குக் கடன் வாங்க முடியவில்லையென்றால் அவை போரில் ஈடுபடத் துணிய மாட்டா. ஏனென்றால் பணம் இல்லாமல் எந்தப் போரும் புரிய முடியாது. அதிலும் குறிப்பாக நவீன காலத்தில் போருக்கு மிகவும் அதிகமான பொருளாதாரத் தியாகங்கள் தேவைப்படுகின்றன. அரசாங்கங்களால் தேவையான பணத்தை வட்டியின் மீதான கடன் மூலம் திரட்ட முடியவில்லையென்றால் அவை ஆழ்ந்து சிந்திக்காமல் பெரும் செலவை ஏற்படுத்தி நாசத்தை விளைவிக்கும் போரில் அவசரப்பட்டு ஈடுபட மாட்டா. நேரடி வரிவிதிப்பு மக்களை உடனடியாகப் பாதிக்கும். அவர்கள் போரைத் தவிர்ப்பதற்கான எல்லா வழிகளையும் முயற்சி செய்யாமல் மிகப் பிரம்மாண்டமான செலவு ஆகும் பெரிய போர்களில் ஈடுபடுவதற்கு விரும்பமாட்டார்கள்.

அதே போன்று வட்டி கொடுப்பதும், வாங்குவதும் தடை செய்யப்பட்டால் நாட்டின் செல்வம் வெகு சிலர் கைகளில் குவியாது; இஸ்லாமிய நாடுகளில் காணப்படுவது போல் சமுதாய மக்கள் மத்தியில் ஒரு சீராகவும் பொதுவாகவும் பரந்து காணப்படும். இதன் மூலம் செல்வம் பரவலாகவும் சமமாகவும் பங்கீடு செய்யப்படும். இதன் காரணமாக வணிகம், தொழிற்சாலை ஆகியவற்றின் தலைவர்களும், இயக்குனர்களும் நிறுவனத்தின் இலாபத்தில் பங்கு என்ற அடிப்படையில் அதிகமான மக்களிடமிருந்து கடன் வாங்கும் கட்டாயத்திற்கு உள்ளாவார்கள். அதன் மூலம் அவர்களையும் ஒரு வகையான பங்குதாரர்களாக அனுமதிப்பார்கள்.

# இஸ்லாமும் பலதார மணமும்

மேலும், பலதார மணம் தொடர்பான இஸ்லாத்தின் போதனைகள் ஆட்சேபிக்கப்படுகின்றன. ஆனால் சில சமயம் ஒழுக்க, அரசியல், சமுதாய, இன, பொருளாதார ரீதியான பிரச்சினைகள் எழுகின்றன. அவற்றிற்கான திருப்திகரமான ஒரே தீர்வை வழங்குவது பலதார மணமாகவே இருக்கிறது. எடுத்துக்காட்டாகத் தன் மனைவி பைத்தியமாகவோ, நிரந்தரமாகச் செயல்பட முடியாதவளாகவோ ஆகிவிடும் நிலையில் ஒரு மனிதனுக்கு என்ன வழி இருக்கிறது? அப்பெண்ணைத் தனது குழந்தைகளுக்குத் தாயாக அனுமதித்து அதன் மூலம் மனித இனத்திற்கே துரோகமாக அமைகின்ற விதத்தில் வேதனையும் நோயும் நிறைந்த பரம்பரையைத் தமக்குப் பின்னால் விட்டுச் செல்ல வேண்டுமா? அல்லது அவர் குழந்தைப் பேறே இல்லாமல் இருந்து அதன் மூலம் தமது நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்த வேண்டுமா? அல்லது ஒழுக்கமற்ற வாழ்க்கையை மேற்கொள்வதன் மூலம் அவர் தம்முடைய சொந்த ஒழுக்கத்தையும் தம்முடைய சமுதாயத்தின் ஒழுக்கத்தையும் சீர்கெடுக்க வேண்டுமா? மிகச் சிறந்த அன்பும் அரவணைப்பும் தேவைப்படும் துயரத்திலும், ஆதரவற்ற நிலையிலும் இருக்கும் அவளுக்கு மணவிலக்குக் கொடுப்பதின் மூலம் இரக்கம், நடுநிலைமை ஆகிய உணர்வுகளை மரணிக்கச் செய்ய வேண்டுமா?

அப்படிப்பட்ட சூழ்நிலையில் இயற்கை, சமுதாயம், ஒழுக்கநெறி ஆகியவற்றின் தேவைகளை ஒன்றுபோல் நிறைவேற்றும் பலதார மணத்தைத் தவிர

வேறு வழிவகை ஏதேனும் உள்ளதா? உண்மையில் பலதார மணத்தைக் கண்டிப்பவர்களும், அதன் தேவையை மறுப்பவர்களும் ஒன்று இயற்கையின் தேவையை கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர். அல்லது மனிதனின் மீது சுமத்தப்பட்டுள்ள இயற்கையின் தேவைகளைப் புறந்தள்ளுகின்றனர்; அல்லது உண்மையான ஒழுக்கநெறிமுறைகளுக்குப் பதிலாக மேலோட்டமான ஒழுக்கநெறிப் பகட்டை விரும்புகின்றனர். பலதார மணம் புரியும் கணவன் மீது இஸ்லாம் விதிக்கும் கட்டுப்பாடுகளையும், பொறுப்புகளையும் அவர்கள் அறிந்திருந்தால், பலதார மணம் என்பது ஒரு மனிதன் சில சமயம் மேற்கொள்ளச் செய்யப்படும் ஒரு கடுமையான பாரம் என்பதையும் மகிழ்ச்சி அனுபவிப்பதற்கான வழி அல்ல என்பதையும் உணர்ந்திருப்பார்கள்.

## இஸ்லாத்தில் விவாகரத்து

இதே போன்று விவாகரத்து விஷயத்தில் இஸ்லாத்தின் மீது குறை கூறுபவர்கள் கணவன் மனைவி இருவரின் மனப்பாங்கு சில நேரங்களில் ஒன்றுக்கொன்று முற்றிலும் பொருந்தி வராத நிலைக்குச் சென்றுவிடுகின்றன என்பதை உணரத் தவறி விடுகின்றனர். அப்படிப்பட்டவர்களைச் சேர்ந்து வாழச் செய்வது நீரையும் நெருப்பையும் ஒன்றிணைக்கச் செய்யும் முயற்சியாகவே அமையும். அதன் விளைவு இரண்டும் தமது அழிவைச் சந்திக்கும். ஏனென்றால் இரண்டு பொருட்களையும் ஒன்று சேர்த்தவுடன் நெருப்பு அணைந்து போகும்; நீர் ஆவியாகிவிடும்; எஞ்சி இருப்பது நனைந்த சாம்பலாகவே இருக்கும். அதே

போன்று இத்தகைய தம்பதிகளை ஒன்று சேர்ந்து வாழும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டால் ஒன்று, அவர்கள் தங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக அழித்துக் கொள்வர்; அல்லது ஒழுக்க நெறிமுறைகளின் எல்லையை மீறிச் சமுதாயத்திற்கே ஆபத்தின் ஆரம்பமாக அமைவர். அவர்களின் நடத்தை மணவிலக்கை எதிர்ப்போர் முன் வைக்கும் வாதங்களுக்கு வெட்கக்கேடான விளக்கமாக அமையும். இத்தகைய அல்லது இது போன்ற இஸ்லாத்தின் போதனைகளுக்கெதிரான ஆட்சேபனைகள் அனைத்தும் அறியாமை அல்லது புரிதல் இல்லாமையின் விளைவாகும். ஏனென்றால் இஸ்லாத்தின் போதனைகள் மற்றனைத்து மார்க்கங்களின் போதனைகளை விடவும் கருணை, ஞானம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகும். மேலும் அவை ஒவ்வொரு காலத்தின் தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முழுமையும் நிறைவும் கொண்ட தீர்வுகளை வழங்குகிறது.

## நல்லொழுக்கப் போதனை

இறைவனின் தன்மை, அவனது வெளிப்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி நிலவிய சில தவறான கொள்கைகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களால் அகற்றப்பட்டதையும் இந்தக் கேள்விகள் தொடர்பாக அன்னார் வழங்கிய உயர்வான போதனைகளைப் பற்றியும் எடுத்துக் கூறிய பின் நான் இப்போது மனித வாழ்வின் மற்ற அம்சங்களைப் பற்றிய அன்னாரின் போதனைகளின் பக்கம் வருகிறேன்.

மனித இனத்தின் நல்லொழுக்கம் தொடர்பாக முழுமையான போதனைகளைக் கொண்டிராத எந்த ஒரு மார்க்கமும் முழுமையான மார்க்கம் என்று வாதிக்க

முடியாது. ஏனென்றால் நல்லொழுக்கம் என்பது ஆன்மீகத்தின் ஒரு பகுதியாக இல்லாத போதிலும் அவை அதன் முதல் படியாக இருக்கிறது. மேலும் அப்பழுக்கற்ற நல்லொழுக்கம் இல்லாத ஒரு மனிதன் முழுமையான ஆன்மீக முன்னேற்றம் அடைய முடியாது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் நல்லொழுக்கம் தொடர்பாக அற்புதமான கொள்கைகளைத் தந்துள்ளார்கள். அவற்றை ஆழ்ந்து கற்கும் ஒருவர் உலகு நல்லொழுக்க விதிகளைத் தேடி வெறுமனே இருளில் தத்தளித்துக் கொண்டு இருப்பதை ஒப்புக்கொள்ளச் செய்கிறது. இந்த விஷயம் முழுவதையும் இந்தச் சிறிய கட்டுரையில் விளக்கமாக விவரிக்க முயற்சிப்பது சாத்தியமில்லையாதலால் சில கொள்கைகளைப் பற்றிய சுருக்கமான குறிப்புரையுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

முதல் விஷயம் நல்லொழுக்கத்தை வரையறுப்பது தொடர்பானதாகும். நல்லொழுக்கப் பண்புகளின் தன்மை பற்றித் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு அது மனித இனத்தை மிக மோசமான தவற்றிற்கு இட்டுச் சென்று மார்க்க நூல்களில் காணப்படும் நீண்ட பயனற்ற விவாதத்திற்குக் காரணமாக அமைந்தது என்ற உண்மையின் பக்கம் முதன் முதலில் கவனத்தை ஈர்த்தவர்கள் அன்னாரே ஆவார்கள். மிருகத்தன்மைக்கும் நல்லொழுக்கத்திற்கும் இடைப்பட்ட ஒரு நிலை இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள மக்கள் தவறுகிறார்கள். குறைபாடுள்ள பயிற்சி, நோய், பழக்கம், அறியாமை, தீய எண்ணம் ஆகியவற்றின் காரணமாக மனிதன் முற்றிலும் சுய நலத்திற்காகச் சுயநல நோக்கங்களோடு செயல்படுவதும் மற்றவர்களின்

உணர்வுகளுக்கு எந்தவிதமான மதிப்போ மரியாதையோ அளிக்காமல் இருக்கும் நிலையையே மிருகத் தன்மை என்பது குறிக்கின்றது. ஆனால் அது மனிதனின் இயல்பான தன்மையல்ல.

ஏனென்றால் மனிதன் பல இயற்கையான உணர்வுகளைப் பெற்றிருக்கிறான்; அவை அவனைப் பிறருக்கு நன்மை செய்யத் தூண்டுகின்றன; அதனையே நல்லொழுக்கம் என்று மக்கள் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக மனிதன் இயல்பாகவே பிறரது துயரத்தைக் கண்டு வருந்துகிறான்; நன்னடத்தையின் பக்கமும், உண்மையின் பக்கமும் சாய்கிறான். ஏனென்றால் மனிதன் சமூக வாழ்க்கை சார்ந்தவனாகப் படைக்கப் பட்டிருக்கிறான். இந்த உணர்வுகள் ஒரு சமூக உறுப்பினருக்கு இருக்கவேண்டிய அவசியமான பண்புகளாகும். முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டு எந்தவிதமான போதனையும் இல்லாமல் வளர்க்கப்படும் ஒரு குழந்தையும் தன்னுடைய செயலில் இப்படிபட்ட உணர்வுகளை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட உணர்வுகள் நல்லொழுக்கத்திலிருந்து வேறுபட்டவை என்றும் அவை இயல்பான உந்துதல் மட்டுமே என்றும் இது காட்டுகின்றது.

எடுத்துக்காட்டாக அன்பு, வெறுப்பு ஆகிய இரண்டும் சம அளவில் இயற்கையான உணர்வுகள்; எனவே அவற்றுள் எந்த ஒன்றையும் நல்லது என்றோ கெட்டது என்றோ கூறமுடியாது. ஏனென்றால் அவற்றுள் ஒன்று நல்லது மற்றது தீயதென்றால் இறைவன் நமது இயல்பிலேயே தீமையை வைத்துள்ளான் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது வரும்; அது இறை நிந்தனையாக அமையும். மேலும் நமது அனுபவம்

இந்தக் கோட்பாட்டை மறுக்கிறது. சில விஷயங்களின் - எடுத்துக்காட்டாக, அடக்குமுறை, தீமை இழைத்தல் போன்றவற்றின் மீதான நமது வெறுப்புணர்வு மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஆனால் வெறுப்புணர்ச்சி என்பதே தீமையானது என்று கொண்டால் தீமை இழைப்பதன் மீது வெறுப்பு கொள்வதும் பாவம் என்றாகும்; இது அறிவீனமாகும்.

எனவே ஒரு மார்க்கம் அதனைப் பின்பற்றுபவர்களை அன்பு, மன்னித்தல், பாசம், நன்மை பயத்தல் போன்றவற்றைக் கடைபிடிக்குமாறும், ஊதாரித்தனத்தை விட்டொழிக்குமாறும் போதிப்பது இயல்பான உணர்வுகளை எடுத்துக் கூறுவதல்லாமல் நல்லொழுக்கப் போதனையாக அமையாது என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் விளக்கினார்கள். இயற்கையான உணர்வுகளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி அவற்றை முறையாகப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகளை வழங்குகின்ற மார்க்கமே நல்லொழுக்கப் போதனையை வழங்கிய மார்க்கம் என்று வாதிக்க முடியும். இன்னொரு விதமாகக் கூறுவதென்றால், இயல்பான சில உணர்வுகளைப் பயன்படுத்தி மற்ற உணர்வுகளை அடக்குவது என்பது நல்லொழுக்கமாகாது. இயல்பான எல்லா உணர்வுகளையும் அறிந்தும் உணர்ந்தும் உரிய இடத்தில் பயன்படுத்துவதும், தேவையில்லாத இடத்தில் கட்டுப்படுத்துவதுமே நல்லொழுக்கமாகும்.

இதனைப் பின்வருமாறு விளக்கலாம். மனித மனம் என்பது இயல்பான உணர்வுகள் எனும் மக்கள் குடியிருக்கும் ஒரு நாடு. இப்போது அவர்களுள் சிலரைத் தூக்கிலிட்டு விட்டு, மற்றவர்களை அவர்கள்

விரும்புகின்றவாறு செயல்பட அனுமதிப்பது நல்லொழுக்கப் போதனையின் செயலாக இருக்க முடியாது. ஏனென்றால் இது ஆட்சிமுறையாக இருக்காது; குழப்பமாகவே இருக்கும். இதற்கெதிரில் ஒவ்வொருவரின் செயல்பாட்டிற்கும் எல்லைகளை நிர்ணயம் செய்து எவரும் அந்த எல்லைகளைத் தாண்டிப் போக அனுமதிக்காமல் இருப்பதே அதன் பணியாகும். இந்தக் காரணத்தினால் தான் மனிதனின் செயல்கள் நல்லொழுக்கம் என்று கூறப்படுகின்றன; அதே போன்ற செயல்கள் மிருகங்களிடமிருந்து வெளிப்பட்டால் அவை நல்லொழுக்கம் என்று கூறப்படுவதில்லை.

பலநேரங்களில் ஒரு மிருகம் இரக்கக் குணத்தை வெளிப்படுத்துகிறது; அதனை நல்லொழுக்கம் என்று யாரும் கூறுவதில்லை. ஏனென்றால் அதன் செயல்கள் எல்லாம் உணர்ச்சிகளால் தூண்டப்படுபவை. மனிதனின் இயல்பான உணர்ச்சிகளில் ஏதாவது ஒன்றைக் கண்டித்து அதனைத் தீமை என்று அடக்க முயலும் எந்த ஒரு மார்க்கமும் நல்லொழுக்கத்தை வளர்க்கவில்லை; மாறாக அது நல்லொழுக்கத்தை அழிக்கவும், சமுதாயத்தை இழிவு படுத்தவும் உதவி செய்கிறது என்பதை அன்னார் சுட்டிக் காட்டினார்கள். ஒவ்வொரு இயல்பான உணர்ச்சியையும் பயன்படுத்துவதற்குரிய நேரத்தையும் சந்தர்ப்பத்தையும் குறிப்பிட்டுக் கூறும் மார்க்கம் மட்டுமே உண்மையான நல்லொழுக்கத்தை உருவாக்க முடியும்.

ஒரு மார்க்கத்தின் நல்லொழுக்கப் போதனை தொடர்பாக அன்னார் விதித்த இரண்டாவது கோட்பாடு என்னவென்றால் ஒவ்வொரு நல்லொழுக்கப் போதனையையும் பயன்படுத்த வேண்டிய சரியான

சந்தர்ப்பத்தை அது எடுத்துரைப்பதுடன் இயல்பான உணர்ச்சிகளைச் சரியாகவோ தவறாகவோ பயன்படுத்துவதன் விளைவாக ஏற்படக்கூடிய நல்லொழுக்கம் அல்லது தீயொழுக்கத்தின் வெவ்வேறு நிலைகளையும் அம்மார்க்கம் விளக்கிக் கூறவேண்டும். ஏனென்றால் இதைச் செய்யத்தவறினால் ஒன்று பெரும்பாலான மக்கள் மருண்டு போய் ஆரம்ப கட்டத்திலேயே நல்லொழுக்க மேம்பாட்டு முயற்சியைக் கைவிட்டு விடுவர். அல்லது தங்கள் இலக்கை ஒரு போதும் அடைய முடியாத பாதையில் பயணம் செய்வர். அவர்களின் நிலை ஆங்கில மொழி அறிவைப் பெற விரும்பும் ஒரு மாணவன் ஆக்ஸ்ஃபோர்டு அகராதியை மனனம் செய்ய ஆரம்பிப்பதைப் போன்றிருக்கும். அவர்கள் தங்கள் நேரத்தையும் முயற்சியையும் தியாகம் செய்வார்கள்; ஆனால் எந்த உபயோகமான முடிவையும் எட்ட மாட்டார்கள். எனவே நல்லொழுக்கப் பண்புகளின் பல்வேறு நிலைகளை விளக்கிக் கூறவேண்டியது மார்க்கத்தின் கடமையாகும். அப்போதுதான் முன்னேற்றப்பாதையின் எல்லா நிலைகளில் உள்ள மனிதர்களும் அதன் போதனைகளிலிருந்து பயன் பெற இயலும்.

அன்னார் கூறிய மூன்றாவது கோட்பாடு என்னவென்றால் ஒரு மார்க்கம் அதன் நல்லொழுக்கப் போதனைகள் எந்த அடித்தளத்தின் மீது அமைத்திருக்கின்றன என்பதை விளக்கிக் கூற வேண்டும்; ஏனென்றால் அவை பற்றிய அறிவு இல்லாமல் ஒரு மனிதன் உயரிய நல்லொழுக்கத் தரத்தை அடைவதற்குத் தேவையான முயற்சியை நிலைத்து நிற்கச் செய்கின்ற மகிழ்ச்சியின் உணர்வைப் பெறமாட்டான்.

நான்காவதாக அவர்கள் கூறியது; ஒரு மார்க்கமானது நல்ல நாட்டங்கள், தீய நாட்டங்களின் மூலாதாரம் எதுவென்று சுட்டிக் காட்டவேண்டும். மேலும் தீயவற்றின் வாசல்களை அடைப்பதற்கான வழியையும் நல்லவற்றிற்கான வாசல்களை விரிவாய்த் திறப்பதற்கான வழியையும் கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் தீமைக்கான நாட்டங்களை அடக்காதவரை தீமையை அழிக்க முடியாது. மேலும் பிரச்சனையின் இந்த அம்சத்தை ஒரு மார்க்கம் அணுகாதவரை அதன் நல்லொழுக்கப் போதனைகள் முழுமையற்றவையாகவே இருக்கும். அவற்றின் நடைமுறைச் சாத்தியமான செயல்பாடுகள் விளக்கப்படாதவரை புரிந்துகொள்ள முடியாத வெறும் கோட்பாடுகளால் அதிகமான பயன் இருக்காது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் நல்லொழுக்கப் போதனைகள் தொடர்பான இந்தக் கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டியது மட்டுமல்லாமல் மனிதனின் நல்லொழுக்க முன்னேற்றத்தின் இந்த எல்லா அம்சங்களையும் திருக்குர்ஆன் தெளிவாக எடுத்துக் கூறுகிறது என்பதை விரிவாக விளக்கிக் கூறினார்கள். அதன் மூலம் இஸ்லாம் மட்டுமே மனித இனத்தின் உண்மையான வழிகாட்டியாக இருக்க முடியும் என்பதை நிரூபித்தார்கள்.

மனிதனின் சமுதாயப் பழக்க வழக்கங்கள் தொடர்பான அம்சத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விதிமுறைகளை வகுப்பது ஒரு முழுமையான மார்க்கத்தின் மற்றொரு பணியாகும். அவற்றைப் பின்பற்றி நடப்பதன் மூலம் சமுதாயக் கட்டமைப்பும் நாகரீகமும் முழுமையடையும்; உலகில் அமைதியும் ஒழுங்கும் நிலைபெறும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்கள் இஸ்லாமியப் போதனைகளின் இந்த அம்சத்தையும் விளக்கியுள்ளார்கள்; அதில் அடங்கியுள்ள அற்புதமான உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்கள். அந்தப் போதனைகள் தொடர்பாகப் பரவியிருந்த தவறான கருத்துக்களை அகற்றினார்கள். பண்பட்ட, நன்கு கட்டமைக்கப்பட்ட சமுதாயத்தில் மட்டும் தான் ஒரு தனி மனிதன் தன்னுடைய நல்லொழுக்கப் பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான நல்வாய்ப்பு கிடைக்கும் என்பது சற்றுச் சிந்தனை செய்தால் புரிய வரும். ஏனென்றால் ஒரு சாதாரண மனிதன் ஓரளவுக்குத்தான் தியாகம் செய்யமுடியும். அதைத் தாண்டி அவரால் செல்லமுடியாது. அதற்கு மேல் அவரிடம் எதிர்பார்ப்பது அவருடைய பொறுமையின் மீது மிகவும் அதிகமான பாரத்தைச் சுமத்துவதாக அமையும். விளைவு முதலில் அவர் திகைத்துப் போவார்; இறுதியில் முற்றிலும் தம் சுய கட்டுப்பாட்டை இழந்துவிடுவார். எனவே ஒரு தனி மனிதனின் நல்லொழுக்க மேம்பாட்டிற்கு ஒரு பண்பட்ட சமுதாயக் கட்டமைப்பு அத்தியாவசியமானதாகும். இல்லையென்றால் உயர் நல்லொழுக்கப் பண்புகள் குறிப்பிட்ட சிலரோடு அடைபட்டு நின்றுவிடும்.

மனித வாழ்வின் இந்த அம்சத்தைப் பற்றி இஸ்லாம் விரிவாக விவரிக்கிறது. இது தொடர்பான இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறி உள்ளார்கள். ஆனால் இந்தக் கொள்கைகளைப் பற்றி ஒரு மேலோட்டமான குறிப்பே இந்தக் கட்டுரையின் வரையறைக்குள் சாத்தியம் என்பது வெளிப்படையாகும். ஆட்சியாளருக்கும் குடிமக்களுக்குமான உரிமைகள்,

கடமைகள், நீதி பரிபாலனத்தில் சுதந்திரம், மனித உரிமைகளின் புனிதத்தன்மை, எஜமானருக்கும், பணியாளருக்குமிடையேயான உறவு, அவர்களுக்கிடையே எழும் சர்ச்சைகளுக்கான தீர்வு, முஸ்லிம் குடிமகனின் கடமைகள், ஏழைகளின் உரிமைகள், பல்வேறு மார்க்கங்களுக்கிடையேயான உறவு, பல்வேறு அரசாங்கங்களுக்கிடையேயான உறவு போன்றவை தொடர்பாக இஸ்லாம் விரிவாகப் பேசுகிறது. மார்க்கங்களுக்கு மத்தியில் அது மட்டுமே தனித்து இலங்குகிறது என்பதை ஒருவர் ஒத்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்காளாகிறார். ‘அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாம்’ என்னும் தலைப்பில் வெளிவந்த என்னுடைய நூலில் இந்த அம்சம் பற்றி விரிவாகக் கூறியுள்ளேன். இங்கு நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இது தொடர்பாக விளக்கியுள்ள கோட்பாடுகளைப் பற்றிச் சுருக்கமாக மட்டும் எடுத்துக் கூறுவேன். ஆட்சியாளருக்கும் குடிமக்களுக்குமான உறவு தொடர்பாக அன்னார் கூறியதாவது: முதலில் அரசாங்கம் பொது மக்களின் பணியாளராகும். எப்போதும் அது தன்னை அவ்வாறே கருத வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் தாமே ஆன்மீக ஆட்சியதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் தம்மைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்கள்:

منه از بهر ما کرسی که ماموریم خدمت را

“எனக்காக நாற்காலி போட வேண்டாம்; ஏனென்றால் நான் தொண்டு செய்வதற்காக நியமிக்கப் பட்டிருக்கிறேன்.”

இந்த வார்த்தைகளில் இரண்டு மிகப் பெரிய கோட்பாடுகளை அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது, அரசாங்கம் பொதுமக்களின் சேவகன் ஆகும். அரசாங்கத்திற்கு ஓய்வே இல்லை. மற்றவர்கள் மீதான ஆட்சியதிகாரத்திற்கு நியமிக்கப்படுபவர்கள் கடமைக்காகத் தங்கள் வசதிகளைத் தியாகம் செய்ய வேண்டும். தங்களின் நேரம் முழுவதையும் மக்கள் சேவைக்காக அர்ப்பணிக்க வேண்டும். அன்னார் அடிக்கடி ஓர் அரபிப் பழமொழியைக் கூறுவதுண்டு.

سيّد القوم خادمهم

“ஸய்யிதுல் கவ்மி காதிமுஹூம்”

அதாவது, “ஒரு சமுதாயத்தின் தலைவர் அதன் தொண்டனாவார்”

மற்றவர்களின் நலத்திற்காகத் தனது நலத்தைத் தியாகம் செய்வது அவரது கடமையாகும். ஒரு முறை சில மக்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களைக் காண வந்தார்கள்; அப்போதைய வழக்கப்படி அன்னார் அமர்ந்திருந்த விரிப்பிலிருந்து சற்றுத் தள்ளி மிகவும் பணிவாக அவர்கள் அமர்ந்தார்கள். அப்போது அன்னார் இதைக் கண்டு மிகுந்த அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். மேலும் கூறினார்கள், “இந்த மக்களைக் கண்டு நான் ஆச்சரியம் அடைகிறேன். மஸீஹ் தோன்றி விட்டார்; இருந்தும் இவர்கள் தங்கள் பழைய பழக்க வழக்கங்களை விட்டொழிக்க மாட்டார்கள். வாருங்கள்! என் அருகில் அமருங்கள்.”

இரண்டாவதாக இஸ்லாத்தின் படி ஒரு நாட்டின் நிர்வாகம் என்பது மக்களின் ஆலோசனையின் படி நடத்தப்பட வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

அவர்கள் எல்லா விஷயங்களிலும் தம்முடைய சீடர்களுடன் கலந்தாலோசனை செய்வார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஆலோசனை வழங்குவதற்கு வரவேற்கப் பட்டார்கள். சில நேரங்களில் அவர்களோடு தாம் கருத்து வேறுபாடு கொண்டாலும் ஆலோசனை செய்வதின் முக்கியத்துவத்தை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில நேரங்களில் அவர்களின் ஆலோசனைப்படி செயல் பட்டார்கள். இதன் மூலம் இஸ்லாம் முதன்முதலில் உலகுக்கு அறிமுகப்படுத்திய உண்மையான ஜனநாயக உணர்வை அன்னார் மீண்டும் உயிர்ப்பித்தார்கள்.

மூன்றாவதாக, சமூகங்களுக்கிடையே ஏற்படக்கூடிய ஒழுங்கீனத்திற்கு வழிவகுத்து பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கக் கூடிய மோதல்களை மத்தியஸ்தம் செய்து தீர்த்து வைப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்று வலியுறுத்தினார்கள். அவர்கள் சமூகங்களுக்கிடையேயான மோதல்களின் பக்கம் அவ்வப்போது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தார்கள். மேலும் முரண்பாடுள்ள விஷயங்களைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைத்துப் பொது அமைதியைப் பாதுகாக்க வேண்டும் என அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினார்கள். ஆனால் மனசாட்சியின் சுதந்திரமான செயல்பாட்டிலோ தனி மனித உரிமைகளிலோ எந்தவிதமான தலையீட்டையும் அவர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. உண்மையில் ஒவ்வொரு பணியாளருக்கும் அவரது உழைப்பின் முழு மதிப்பிற்குரிய கூலியைப் பெற்றுத்தருவது அரசாங்கத்தின் கடமை என்று வலியுறுத்துகின்ற அளவுக்கு இஸ்லாம் தனிமனித உரிமையின் புனிதத் தன்மையைப் போதிக்கிறது. முழு

சமுதாயத்தையும் பாதிக்கக் கூடிய கருத்து மோதலின் மீது கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு எல்லா அரசாங்கங்களும் ஆளாகின்றன. ஆனால் தனிப்பட்ட பணியாளர்கள் கூட சில நேரங்களில் தங்களுக்கு முழுமையான கூலி வழங்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டுகளுடன் அரசாங்கத்தை அணுகியதை ஆரம்பகால இஸ்லாமிய வரலாறுகள் தெரிவிக்கின்றன. அரசாங்கமும் அவர்களுடைய முறையீடுகளின் மீது கவனம் செலுத்தியது.

இருந்தபோதிலும், ஒரு புறம் ஏழைகளின் உரிமைகளின் மீது சிறப்பான கவனம் செலுத்திய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள், அவர்களை நமது சகோதரர்களாக நடத்த வேண்டும் என்று கற்பித்தார்கள். மறுபுறம் ஒரு மனிதன் தன் திறமைகளைப் பயன்படுத்திப் பெற்றவற்றைப் பறிக்கக் கூடாது என்றும் போதித்தார்கள். திறமைகளிலும், தகுதிகளிலும் உள்ள வேறுபாடுகளின் காரணமாக ஏற்படும் போட்டி உலகின் முன்னேற்றத்திற்குத் தேவையானது என்று அன்னார் கருதினார்கள். ஆனால் ஒரு சமுதாயத்தில் செல்வத்தைப் பெற்றிருப்பவர்கள் அதில் இஸ்லாம் வரையறுத்துள்ள ஒரு பகுதியை ஏழைகளின் நலத்திற்காக ஒதுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; எஞ்சிய பகுதியை தமது சொந்த விருப்பங்களை நிறைவு செய்வதற்காகப் பயன்படுத்துவதை விடப் பொது நன்மைக்கான நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். அதாவது செல்வத்தைப் பதுக்கிவைப்பதிலும் வீணாகச் செலவு செய்வதிலும் கிடைக்கும் மகிழ்ச்சியை விட அதனைப் பரவச் செய்வதில் கிடைக்கும் இன்பத்தைப் பெரிதும் விரும்ப வேண்டும்.

இந்த வகையில் இஸ்லாத்தின் போதனைகள் தனித்திலங்குகின்றன. தனி மனித முதலாளித்துவக் கோட்பாட்டை இஸ்லாம் அங்கீகரிப்பதுடன் அதனை நிலைநிறுத்தவும் செய்கிறது. ஆனால் மற்றவர்களின் உழைப்பின் பங்களிப்பின்றி எந்த ஒரு மனிதனும் செல்வந்தனாக முடியாது என்பதையும் ஒத்துக் கொள்கிறது. எனவே செல்வந்தரின் செல்வத்தில் ஒரு பகுதி தனியாக ஒதுக்கப்பட்டு அந்தச் செல்வத்தை உருவாக்குவதற்காக ஏழைகள் வழங்கிய பங்களிப்பிற்கு ஈடாக ஏழைகளின் நன்மைக்காக அரசாங்கத்தின் மூலம் செலவிடப்பட வேண்டும் என்று தெளிவாகக் கட்டளையிடுகின்றது. அனைத்து மக்களின் வாழ்க்கைத் தேவைகளையும் கல்விக்கான வழிவகைகளையும் நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் அது வலியுறுத்திக் கூறுகிறது.

சர்வதேச விவகாரங்களைப் பொருத்தவரையில் தனி மனிதர்களைப் போலவே நாடுகளும், அரசாங்கங்களும் நல்லொழுக்க வரையறைக்குட்பட்டவை என்பதை உணராதவரை அவற்றைத் திருப்திகரமான அடித்தளத்தின் மீது அமைக்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். உண்மையில் தனி மனிதர்களிடம் எதிர்பார்க்கப்படும் நல்லொழுக்கத் தராதரத்திற்கு அரசாங்கங்கள் உட்பட்டவையல்ல என்று நிலவும் தவறான கோட்பாட்டின் விளைவாகவே பெரும்பாலான சர்வதேச மோதல்கள் ஏற்படுகின்றன.

உலக அமைதி ஏற்பட ஒவ்வொரு நாட்டுக் குடிமகனும் தங்களுடைய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க

வேண்டியது அவசியமாகும் என்றும் அன்னார் கருதினார்கள். தங்களுடைய உரிமைகளைக் கேட்பதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால் அவ்வாறு செய்யும் போது பொது அமைதியைப் பாதிக்கும் என்று கருதக் கூடிய விதத்திலோ அரசாங்கத்தின் அதிகாரத்தைச் சிறுமைப்படுத்தக் கூடிய விதத்திலோ நல்லொழுக்கப் பார்வையில் ஆட்சேபணைக்குரிய விதத்திலோ உள்ள வழிமுறைகளைப் பின்பற்றக் கூடாது.

மேலும் ஏதாவதொரு மார்க்கத்தில் உண்மையான நம்பிக்கை வைத்துள்ள மக்கள் இருக்கின்றவரையிலும், சம்பிரதாயமான சந்தர்ப்பங்களில் மட்டும் மார்க்கப் போர்வை அணியும் மக்களால் உலகம் முற்றிலும் நிரம்பி இருக்காதவரையிலும் மார்க்க சம்பந்தமான வேறுபாடுகள் தோன்றத்தான் செய்யும் என்பதை அவர்கள் கவனத்தில் கொண்டார்கள். மேலும் உலகமோ அல்லது அதிலுள்ள பெரும்பான்மையான மக்களோ ஒரு பொதுவான மார்க்கத்தின் பிணைப்பினால் ஒன்றிணையும் போதுதான் உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். எனவே இந்த அகிலத்தில் அமைதியை ஏற்படுத்தவும் தம் மூலம் மனிதர்கள் ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கப் படுவதற்கும் அதன் மூலம் வெளிப்புற அமைதியையும் ஆத்மீக அமைதியையும் பெறுவதற்கும் இறைவன் தம்மை அனுப்பி இருப்பதாக அன்னார் வாதித்தார்கள்.

தற்போது நிலவும் நிலைமைகளின் முன்னேற்றத்திற்காக அன்னார் பின்வரும் ஆலோசனைகளை முன் வைத்தார்கள்:

**1.** பல்வேறு மதங்களின் நிறுவனர்களையும், தலைவர்களையும் பற்றி அவர்களைப் பின்பற்றுபவர்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்ற விதத்தில் குறிப்பிடக் கூடாது.

**2.** மதத்தைப் பரப்புகின்ற போது ஒவ்வொரு மார்க்கத்தின் பிரச்சாரகரும் தமது மார்க்கத்தின் சிறப்புகளை விளக்கிக் கூறுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்; பிற மார்க்கத்தைத் தாக்கிப் பேசக்கூடாது. பிற மார்க்கங்களின் குறைகளைக் காண்பது ஒருவரது சொந்த மார்க்கத்தின் உண்மைக்குச் சான்றாகாது. ஒரு மதத்தின் உண்மைத்தன்மையை அதன் போதனைகளின் சீரிய தன்மையை எடுத்துக் கூறுவதன் மூலமே நிறுவ முடியுமேயல்லாமல் பிறமார்க்கங்களின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலமல்ல.

**3.** தங்கள் மார்க்கத்தின் வேத நூல்களிலிருந்து நேரடியாக ஊகித்துணர முடியாத கொள்கையையோ போதனையையோ ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுவோர் தமது மார்க்கத்தின் சார்பாக எடுத்துரைக்கக் கூடாது. கொள்கையும் அதற்கான சான்றும் அந்த மார்க்கத்தின் வேத நூலிலிருந்தே எடுத்து வைக்கப்பட வேண்டும். இந்த விதியைக் கண்டிப்பாகக் கடைபிடிக்காதவரை ஒரு மார்க்கத்தின் உண்மைத்தன்மை தொடர்பாக சரியான ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு இல்லையென்றால் ஒரு

மதத்தின் சார்பாக எடுத்து வைக்கப்படும் போதனைகள் அந்த மதத்தின் வேத நூல்களில் காணப்படுகின்றனவா அல்லது பிற மார்க்கங்களின் நூல்களைக் கற்றதினால் பெறப்பட்டவையா அல்லது தற்காலத்திய சிந்தனையால் விளைந்தவையா என உலகம் கண்டு பிடிக்க முடியாது. ஒவ்வொரு மார்க்கத்தின் ஆதரவாளர்களும் தத்தமது மார்க்கத்தின் போதனைகளை அந்த மார்க்கத்தின் வேத நூல்களிலிருந்து எடுத்து வைத்து அந்தப் போதனைகளை அந்த நூலிலிருந்து பெற்ற வாதங்களின் மூலம் வலுப்படுத்தினால் பல்வேறு மார்க்கங்களின் வாதங்களைப் பற்றி பொதுமக்கள் எளிதாக ஒரு முடிவுக்கு வரமுடியும்; விரைவில் உண்மை தெளிவாகும். நமது வழிகாட்டலுக்காக இறைவன் ஒரு மார்க்கத்தை அருளினால் அந்த மார்க்கம் அதன் பக்கபலத்திற்குத் தேவையான அனைத்துக் கொள்கைகளையும் வாதங்களையும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் அவ்வாறு இல்லையென்றால் அது நமக்கு உதவியாக இருப்பதை விடுத்து அதன் உண்மைக்குச் சான்று பகர நமது உதவியை நாடி நிற்கும்.

**4.** பல்வேறு மார்க்கங்களின் சார்பாளர்கள் தமது மார்க்கப் போதனையின் சாராம்சத்தை விளக்குவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அப்போதனைகளின் படிச் செயல்படுவதால் விளையும் நடைமுறை பயன்களைச் செயல்ரீதியாக எடுத்துக் காட்ட வேண்டும். அதன் மூலம் அந்தப் போதனைகள் ஏதேனும் பயனை நோக்கி இட்டுச் செல்கின்றனவா இல்லையா என்பதைப் பொதுமக்கள் முடிவு செய்ய ஏதுவாக வேண்டும். ஒரு மருந்தின் பண்புகளை ஒரு குறிப்பிட்ட நோயின் மீது அது

ஏற்படுத்தும் தாக்கத்தைக் கொண்டு விளக்கிக் காட்ட முடியும் என்னும் போது ஒரு மார்க்கத்தின் போதனைகளின் தன்மைகளை இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உறவை நிலைநிறுத்துவதில் அது அடையும் வெற்றியை வைத்து ஏன் செயல் படுத்திக் காட்ட முடியாது?

அமைதியையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கான இஸ்லாத்தின் போதனைகளில் சிலவற்றை மட்டும்தான் நான் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி மனித வாழ்க்கையின் இந்த அம்சத்தைப் பற்றி இஸ்லாம் விரிவான கட்டளைகளை வழங்கியுள்ளது என்பதைப் பற்றி என்னுடைய 'அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாம்' என்னும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளேன். அது பன்னாட்டு அமைப்பின் வரைபடத்தை வழங்குவதோடு கூட அந்த அமைப்பின் அடித்தளமாக அமைய வேண்டிய கொள்கைகளையும் விவரிக்கிறது. இந்தக் கொள்கைகள் இப்போது இருக்கும் லீக் ஆஃப் நேஷன்ஸ் அமைப்பின் அடிப்படையாக அமைத்திருக்கும் கொள்கைகளில் இருந்து வேறுபட்டவையாகும். ஆனால் அந்தக் கொள்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால் அவை இல்லாமல் எந்த ஒரு பன்னாட்டு அமைப்பும் வெற்றிகரமாகச் செயல்பட முடியாது என்ற முடிவுக்கு அனைவரும் வருவார்கள்.

## மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை

மனிதன் படைக்கப்பட்ட நாளிலிருந்தே மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை இருப்பதை நம்பி வந்துள்ளான். எல்லா மார்க்கங்களும் அப்படிப்பட்ட

நம்பிக்கையை அளித்து வந்துள்ளன. எனவே மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையைப் பற்றி நிலவும் நம்பிக்கைகளில் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் அவர்கள் ஏற்படுத்திய சீர்திருத்தங்களைப் பற்றி நான் கூறாவிட்டால் இந்தக் கட்டுரை முழுமையற்றதாக இருக்கும். ஆனால் இது மிகவும் நுட்பமான ஒரு கேள்வியாக இருப்பதாலும் நீண்ட விளக்கம் தேவைப்படுகின்ற ஒன்றாக இருப்பதாலும் நான் விளக்கங்களுக்குள் செல்லாமல் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையைப் பற்றிய புரிதலில் உள்ள சில பிரச்சினைகளைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுவதுடன் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் கைக்கொண்ட பார்வையையும் பற்றிக் கூறுவதோடு நிறுத்திக் கொள்வேன்.

முதல் கேள்வி மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு எவ்வாறு நிகழும் என்பதாகும். மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு இந்த உலக வாழ்வைப் போன்று பௌதீக உடல் சார்ந்த வாழ்வாக இருக்காது என்பது அன்னார் வழங்கிய பதிலாகும். அது, உடல் மீண்டும் உயிர் பெற்று எழுவதாக இருக்காது; ஆன்மா உயிர்த்தெழுவதாக அமையும். இந்த பௌதீக உடல் இவ்வுலகுக்கே உரியது; இங்கேயே முடிவுறும். மறு உலகில் ஆன்மாவுக்கு ஆன்மீகமான உடல் வழங்கப்படும்; அது ஆன்மீக இன்பத்தையும் ஆன்மீக துன்பத்தையும் உணரக்கூடியதாக இருக்கும்.

இரண்டாவது கேள்வி, மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு எப்போது தொடங்கும். இதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் வழங்கிய பதில், மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு மரணத்திற்குப் பின் உடனடியாகத்

துவங்குகின்றது; ஆயிரக்கணக்கான ஆண்டு இடைவெளிக்குப் பின் ஒரு குறிப்பிட்ட நாளில் துவங்குவது அல்ல என்பதாகும். ஆனால் அந்த வாழ்க்கை மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கல்லறையின் நிலை என்று அழைக்கப்படும் முதல் நிலையை, கருவறையில் கழிக்கின்ற மனித வாழ்வின் நிலைக்கு ஒப்பிட்டுக் கூறலாம். இந்த நிலையில் கருவறையில் உள்ள ஒரு குழந்தை ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு புதிய ஆன்மாவைப் பெறுவதைப் போன்று, (கல்லறையின் நிலையிலுள்ள) ஆன்மா மற்றுமோர் ஆன்மாவைப்பெற்று, தானே அந்த ஆன்மாவிற்கு உடலாக மாறுகின்ற வரை, ஆன்மாவானது பல்வேறு மாற்றங்களை அனுபவிப்பதுடன் புதிய ஆற்றல்களையும் திறமைகளையும் பெறுகிறது. வேறொரு வகையில் கூறுவதென்றால் ஆன்மா ஒரு புதிய பிறப்பை அனுபவிக்கிறது.

பிறகு இரண்டாவது நிலை ஆரம்பிக்கின்றது அதுவே அதன் மறு பிறப்பாகும். இதனைக் குழந்தையின் பிறப்புக்கு ஒப்பிடலாம். இந்த நிலையில் ஆன்மா இரண்டாவது வாழ்வின் சூழ்நிலைகளை உணரத் தொடங்குகிறது. ஆனால் இந்த நிலைகளைப் பற்றிய அதன் உணர்வு ஒரு குழந்தையின் உணர்வைப் போன்று முழுமையற்றதாகும். இந்த நிலை கடந்த பின் மூன்றாம் நிலை ஆரம்பிக்கின்றது. இதனைப் பருவ நிறைவு அடைந்த ஓர் இளைஞனின் பருவத்திற்கு ஒப்பிட்டுக் கூறலாம். இந்த நிலையில் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வின் நிலைமைகளை ஆன்மாவால் முழுமையாக உணர முடிகின்றது. பிறகு அது சொர்க்கத்திலோ நரகத்திலோ வைக்கப்படுகிறது.

## சொர்க்கமும் நரகமும்

மூன்றாவது கேள்வி, சொர்க்கம், நரகம் ஆகியவற்றின் தன்மை என்ன என்பதாகும். மனிதன் மரணத்திற்கு முன் வாழ்ந்த வாழ்க்கையின் தன்மையைப் பொருத்து அவன் அனுபவிக்கும் மகிழ்ச்சியையோ துக்கத்தையோ ஒத்த நிலைகளைப் போன்றதாக இருக்கும் என்பது அன்னாரின் பதிலாகும். அவை பௌதீகமானவையாக இருக்காது. ஏனென்றால் நமது பௌதீக உடல்களால் அதனை அனுபவிக்க முடியாது. ஆனாலும் அவை முற்றிலும் ஆன்மீகமானவை என்றும் கூற முடியாது. ஏனென்றால் அந்த வாழ்விலும் மனிதன் ஓர் ஆன்மீகமான உடலைப் பெற்றிருப்பான். அதுவே இந்த வாழ்வில் மனிதனின் ஆன்மாவுக்கான கூடாக செயல்படுகிறது. அது இவ்வுலகில் மனிதன் கொண்டிருக்கும் உடலை விட நேர்த்தியானதும் நுட்பமானதுமான உணர்வுகளைப் பெற்றிருக்கும். எனவே மரணத்திற்குப் பின்னுள்ள மகிழ்ச்சியும் வேதனையும் மனிதன் அந்த வாழ்வில் வழங்கப்படும் தகுதிகளுக்கு ஏற்றாற் போல் அமையும்.

நான்காவது கேள்வி, சொர்க்கமும் நரகமும் நிரந்தரமானவையா அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உட்பட்டவையா என்பதாகும். அன்னாரது பதிலாவது, ஆன்மாவுக்கு நிரந்தரமான வாழ்வு வழங்கப்படும். மனிதனின் முடிவில்லாத முன்னேற்றத்திற்கான வழிகளைச் சொர்க்கம் திறக்கும். ஆனால் மனிதன் முழுமையை அடைவதற்கான நோக்கத்தோடு படைக்கப்பட்டிருப்பதால் நரகத்தின் தண்டனை நிரந்தரமானதாக இருக்காது. ஏனென்றால் நரகம்

நிரந்தரமானதாக இருந்தால் மனிதப் படைப்பின் நோக்கம் முறியடிக்கப்பட்டுவிடும். ஏனென்றால் சில மனிதர்கள் என்றென்றும் முழுமையடையாத நிலையிலேயே இருந்துவிடுவர். உண்மையில் நரகம் என்பது ஒரு மருத்துவமனையைப் போன்றதாகும். மனிதன் உலகில் தன்னுடைய செயல்களின் விளைவாகப் பெறுகின்ற சொர்க்கத்தின் இன்பங்களை அனுபவிக்க முடியாமல் செய்யும் ஆன்மீக நோய்கள் அங்கு குணமாக்கப்படும். உதாரணமாக கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு மனிதன் சூரியனின் ஆற்றல் மிகு ஒளியால் பாதிக்கப்படுகிறான். அதிலிருந்து மகிழ்ச்சியைப் பெறுவதற்குப் பதிலாக அவன் அந்நோயிலிருந்து குணமாகும் வரை ஓர் இருண்ட அறையில் வைக்கப்படுகிறான். ஒரு மனிதன் நரகத்தில் தன்னுடைய நோய்களிலிருந்து குணமான பின் இறைவனின் அருள் அவனை ஒரு புதிய வாழ்வின் முன்னேற்றப் பாதையைப் புதிதாகத் துவங்குவதற்கு ஏதுவாக அவனைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். இவ்வாறு ஒருவரது நம்பிக்கை அல்லது நிராகரிப்பு எப்படி இருந்தபோதிலும் என்றும் நிலைத்திருக்கும் இறைக்கருணையின் ஒன்று சேர்க்கப்படாத, என்றென்றும் நிலைத்திருக்கும் பேரின்ப வீட்டிற்குள் அனுமதிக்கப்படாத எவரும் எஞ்சியிருக்க மாட்டார்.

சுருக்கமாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இஸ்லாத்தில் புகுந்து விட்ட தவறுகளின் எல்லா அம்சங்களையும் போக்கித் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளை உலகிற்கு வழங்கினார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

## அன்னாரின் வாதத்திற்கான சான்றுகள்

இங்கு நியாயமாக ஒரு கேள்வி கேட்கப்படலாம். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் உண்மைக்கான தனிப்பட்ட சான்றுகள் யாவை என்பதாகும். முழுமையான போதனையே ஒரு தீர்க்கதரிசியின் உண்மைக்கு உறுதியான சான்றாகும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் முழுமையான போதனையின் அழகைப் போற்றுவதற்குத் தேவையான அறிவாற்றலை எல்லா மனிதர்களும் பெற்றிருக்கமாட்டார்கள். எனவே ஒரு சாதாரண அறிவாற்றல் கொண்ட மனிதன் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள ஏதுவாக அமையும் சான்றுகளும் இருக்க வேண்டும் என்பது அவசியமாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் முந்தைய நபிமார்களின் உண்மையை நிரூபணம் செய்த அனைத்துச் சான்றுகளையும் பெற்றிருந்தார்கள் என்பதே பதிலாகும். மேலும் முந்தைய நபிமார்கள் செய்து காட்டிய அனைத்து அற்புதங்களையும் அன்னார் செய்தார்கள். ஒரு தீர்க்கத்தரிசியின் உண்மைக்கான மிகச் சிறந்த சான்று அவருடைய வாழ்வின் முழுமையான புனிதத் தன்மையாகும். காணுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் அனைவரும் அதன் உண்மையை ஒப்புக் கொள்ளுகின்ற அளவுக்கு ஒரு தீர்க்கத்தரிசியின் வாழ்வு சீரான தூய்மையும் நேர்மையும் கொண்டிருக்கும்.

அவர்களின் குற்றங்கள் மக்களுக்குத் தெரியாது என்று நான் கூறவில்லை. ஏனென்றால் தமக்கு எதிராக எந்தத் தீமையையும் நிரூபிக்க முடியாத இலட்சக்கணக்கான மனிதர்கள் இருக்கலாம். ஆனால்

நான் கூறுவது என்னவென்றால் அவர்களின் நேர்மை மனிதர்களால் சான்றளிக்கப்படும். அதன் அடிப்படையில் அந்த மனிதர் எந்தத் தீமையும் செய்தவரல்ல என்று உறுதியாகக் கூறுவது மட்டுமன்றி எந்தத் தீமையையும் அவரிடமிருந்து எதிர்பார்க்கமுடியாது என்பதேயாகும். தமது உண்மைக்குச் சான்றாக இயேசு பின்வருமாறு கூறுகிறார்;

“என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை.” (யோவான் **8:46**)

இதன் மூலம் அவர் தனக்கெதிராக எந்தப் பொய்மையும் நிரூபிக்கப்பட முடியாது என்று உணர்த்துவது மட்டுமல்லாமல் அவரது வாழ்க்கை உண்மையல்லாத ஒன்றைக் கூறக் கூடிய சாத்தியமில்லாததாக அமைந்திருந்தது என்பதை அவர்கள் அறிவார்கள் என்பதுமாகும். மேலும் அத்தகைய அறிவைப் பெற்றிருந்த அவர்கள் அவர் கடவுளைப் பற்றி அவர்களுக்குச் சொன்னவற்றை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர் அவர்களை வினவினார். ஏனென்றால் மனிதன் தொடர்பான விஷயங்களில் ஒரு போதும் பொய்யுரைக்கும் குற்றம் புரியாத ஒரு மனிதர் இறைவனுக்கு எதிராகப் பொய்யுரைக்கத் துணியமாட்டார். இந்த வாதம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாலும் முன்வைக்கப்பட்டது.

فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ ۔ اَفَلَا تَعْقِلُوْنَ

“ஃபகத் லபிஸ்து ஃபீகும் உமுரம் மின் கப்லிஹீ அ ஃபலா தஃகிலூன்”

“நான் இதற்கு முன்னர் ஒரு நீண்ட வாழ்நாளை கழித்திருக்கின்றேனே; இதன் பிறகும் நீங்கள் ஏன் என்னை ஒரு பொய்வாதி என்று கூறுவதிலிருந்து தவிர்ந்து கொள்வதில்லை?” (திருக்குர்ஆன் **10:17**)

அதாவது என்னுடைய வாழ்வின் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு மணி நேரமும் உங்கள் கண்களுக்கு முன்னால் இருக்கின்றது. மேலும் நான் எப்பொழுதும் உண்மையைக் கடைபிடித்துள்ளேன் என்பதையும் என்னால் பொய்யுரைக்க முடியாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பிறகு எப்படி நீங்கள் என்னைப் பொய்வாதி என்று குற்றம் சுமத்த முடியும். இது இயேசுவின் வாதத்தைவிட தெளிவானதும் அழுத்தமானதுமான வாதமாகும். மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய எதிரிகளை நோக்கி இதே போன்ற வார்த்தைகளில் சவால் விடுத்தார்கள். அவர்கள் தம்முடைய முழு வாழ்வையும் அவர்களுடைய எதிரிகளின் கண்களுக்கு முன்னால் கழித்துள்ளார்கள். இருந்தும் அவர்கள் ஏன் அன்னாரைப் பொய்வாதி என்று கூறுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளவில்லை என்று அவர்களுடைய எதிரிகளை நோக்கிக் கூறுமாறு இறைவன் அன்னாருக்குக் கட்டளையிட்டான். மேலும் ஒரு எச்சரிக்கையாகப் பின்வருமாறு அவன் கூறுகின்றான்:

“மனிதர்கள் உம்மைப் பார்க்கின்றார்கள். இருந்தும் ஏன் அவர்களுக்கு காண்கின்ற கண்கள் இல்லை.” அதாவது உம்முடைய வாழ்வின் அற்புதமான தூய்மையைக் கண்டும் அவர்கள் எப்படி உம்முடைய வாதத்தின் மீது சந்தேகம் கொள்ளமுடியும்?

இந்த முன்னறிவிப்புக்கிணங்க வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் தம்முடைய எதிரிகளை நோக்கிச் சவால் விடுத்தார்கள்; ஆனால் எவரும் அதனை ஏற்க முன் வரவில்லை. அன்னாருடைய வாழ்க்கை முழுவதும் தூய்மையும் நேர்மையும் சீராக அமைந்திருந்ததை அன்னாருடைய கடுமையான எதிரிகள் கூட ஒப்புக்கொள்கின்றனர். இந்துக்களிலும், சீக்கியர்களிலும் அன்னாருக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அவர்கள் பின்னாளில் அன்னாருடைய கடுமையான எதிரிகளாக மாறினர். ஆனால் அவர்கள் அனைவரும் அன்னாருடைய தனித்துவம் வாய்ந்த அப்பழுக்கற்ற குணநலன்களுக்கு ஒருமனதாகச் சான்று பகர்கின்றனர்.

வயது முதிர்ந்த சீக்கியப் பெரியவர் ஒருவர் அன்னாரைப் பற்றி பேசும்போது எப்போதும் கண்ணீர் நிறைந்த கண்களுடனேயே பேசுவார். அன்னாரை ஒரு 'பிறவிப் புனிதர்' என்றே கூறுவார். அன்னாரின் பரம எதிரியாக இருந்தவரும் அன்னாருக்கு எதிராக ஆலிம்களிடம் மார்க்கத்தைவிட்டு வெளியேறியவர் என்ற மார்க்கத் தீர்ப்பைப் பெறுவதற்காக இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தவரும், அரசாங்கத்தையும் மக்களையும் அன்னாருக்கு எதிராகத் தூண்டிவிடுவதற்காக நல்லொழுக்கத்தின் அனைத்து விதிகளையும் காற்றில் பறக்க விட்டவருமான பட்டாலாவைச் சேர்ந்த மௌலவி முஹம்மது ஹுஸைன் என்பவர் 'இஷாத்துஸ் ஸுன்னா' என்னும் தமது பத்திரிகையில் அன்னாரைப் பற்றி பின்வருமாறு எழுதினார்: 'நான் அவரை (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களை) குழந்தைப் பருவத்திலிருந்தே அறிவேன். அவர் தன்னுடைய நேரத்தாலும், பணத்தாலும்,

பேனாவாலும், நாவாலும், தமது சொந்த முன்னுதாரணத்தின் மூலமும் கடந்த பதின்மூன்று நூற்றாண்டுகளில் இணை காண முடியாத அளவுக்குத் தொடர்ந்து இஸ்லாத்திற்கு உதவி செய்துள்ளார்; தொண்டாற்றி உள்ளார்.' அன்னாரின் வாழ்விலும் பண்புகளிலும் காணப்பட்ட இந்த ஈடிணையற்ற தூய்மை அன்னாரின் வாதத்தின் உண்மைத்தன்மைக்கான உறுதியான சான்றாகும்.

வார்த்தைகளின் மூலம் அருளப்படும் இறைவெளிப்பாடுகளின் மீது அன்னார் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்; மேலும் இறைவன் தம்மோடு உரையாடுவதாக வாதித்தார்கள். தாம் உள்ளுணர்வுகளால் தூண்டப்படுவதாக மட்டும் வாதம் செய்திருந்தால் அன்னார் தம்முடைய வாதத்தில் தவறிழைத்திருக்கலாம் என்று கூறுவதற்கு இடமிருக்கும். ஆனால் அன்னார் வார்த்தை வடிவிலான இறைவெளிப்பாட்டைப் பெறுவதாக வாதம் புரிந்ததால் அன்னார் தம் வாதத்தில் உண்மையாளராக இல்லாமல் இருந்தால் வேண்டுமென்றே பொய் கூறுபவராக இருக்கவேண்டும் அல்லது ஒரு பைத்தியக்காரராக இருக்க வேண்டும். ஆனால் அன்னாரது முழு வாழ்க்கையும் இந்த இரு அனுமானங்களுக்கும் எதிராக அமைந்துள்ளதால் அன்னாரது வாதம் முற்றிலும் உண்மையானது என்ற முடிவுக்கு வரவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

ஒரு பொய்வாதி ஒரு போதும் வெற்றி பெற விடப்படுவதில்லை என்று எல்லா இறைவேதங்களும் ஒன்றுபட்டுக் கூறுவது அன்னாரது வாதத்தின் உண்மைக்கு மற்றுமொரு உறுதியான சான்றாக விளங்குகிறது. பைபிள் கூறுகிறது:

"சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத்துணியும் தீர்க்கதரிசியும் வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக் கடவன்." (உபாகமம் **18:20**)

மேலும்,

"ஆதலால் நான் அனுப்பாதிருந்தும், என் நாமத்தைக் கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி இந்த தேசத்திலே பட்டயமும் பஞ்சமும் வருவதில்லையென்கிற தீர்க்கதரிசிகளைக் குறித்து இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள்."

(எரேமியா **14:15**)

மேலும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

"இனி ஒருவன் தரிசனம் சொன்னால் அவனைப்பெற்ற அவன் தகப்பனும் அவன் தாயும் அவனை நோக்கி: நீ கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய் பேசுகிறபடியால் நீ உயிரோடிருக்கப் படாது என்று சொல்லி அவனைப் பெற்ற அவன் தகப்பனும் அவன் தாயும் அவன் தரிசனம் சொல்லும்போது அவனைக் குத்திப் போடுவார்கள்." (சகரியா **13:3**)

இதே போன்று திருக்குர்ஆனும் பின் வருமாறு கூறுகிறது:

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ۔ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ۔ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ

"அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர்

நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெரு நரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம்.'' (திருக்குர்ஆன் **69:45-47**)

ஒரு மனிதன் தாமாகச் சில வசனங்களை உருவாக்கிப் பிறகு அவற்றை இறையறிப்புகள் என்று உலகிற்கு அளித்தால் அவன் வெற்றி பெற அனுமதிக்கப் படுவதில்லை என்றும் அவரது அமைப்பு உலகில் பலமாகக் காலூன்றுவதற்கு முன்னரே அவர் அழிக்கப்பட்டு விடுவார் என்றும் மேலே கண்ட வசனங்கள் காட்டுகின்றன. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதத்தின் மீது இந்தச் சோதனையைப் பயன்படுத்தும் போது, நாம் அன்னாரின் உண்மையின் மீது உறுதியைப் பெறுகிறோம். ஏனென்றால் அன்னார் தமது நாற்பதாவது வயதில் தாம் இறையறிவிப்புப் பெறுவதாக முதன்முதலில் வாதித்தார்கள். இந்த வாதத்தை வெளியிட்ட பின் முப்பத்தி நான்கு அல்லது முப்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தார்கள். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் ஓர் இயக்கத்தை நிறுவினார்கள்; சாதாரணமான வாழ்நாளை வாழ்ந்து முடித்தார்கள்; அன்னாரின் மரணமும் அன்னாரின் மரணத்திற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னரே அன்னார் வெளியிட்ட இறை முன்னறிவிப்புக்கிணங்கவே நிகழ்ந்தது; அதில் அன்னாரது வாழ்வு நீர் இன்னும் இரண்டரை மிடறு மட்டுமே எஞ்சியிருக்கிறது என்று அன்னாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

சகோதர சகோதரிகளே! ஒரு மனிதன் வேண்டுமென்றே சில கூற்றுக்களை உருவாக்கி அவற்றை மக்கள் மத்தியில் வெளியிடுவதற்காக இறைவன் தமக்கு அருளிய இறைவெளிப்பாடுகள் என்று அவற்றை

இறைவன் மீது சாட்டிக் கூறி எந்தவிதமான தடையோ தண்டனையோ இன்றி தன்னுடைய படைப்பினங்களை வழி கெடுக்க உயிருள்ள ஓர் இறைவன் அனுமதிப்பான் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றா? அவ்வாறு இருக்குமென்றால், நம்பிக்கைக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? நேர்மைக்கு என்ன பாதுகாப்பு இருக்கும்? தானே தப்பெண்ணத்தில் உழலும் ஒரு மனிதன், உதாரணமாக ஒரு பைத்தியக்காரர், அல்லது தமது உள்ளுணர்வுகளையே இறையறிவிப்புகள் என்று கருதுபவர் தம்முடைய சொந்த எண்ணங்களையே உதிப்புகள் என்று புரிந்து கொள்பவர் ஒரு வகையில் மன்னிக்கத்தக்கவர்; அவர் கடுமையான தண்டனைக்குத் தகுதியானவராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு மனிதர் வார்த்தை வடிவிலான இறையறிவிப்புகளைப் பெறுவதாக வாதிக்கும் போது அவருடைய வாதம் உண்மை இல்லையென்றால் அவர் ஒன்று பைத்தியக்காரராக இருக்கவேண்டும்; அல்லது வேண்டுமென்றே பொய்யுரைப்பவராக இருக்க வேண்டும். எனவே அப்படிப்பட்ட வாதம் புரியும் ஒரு மனிதர் பைத்தியக்காரர் இல்லையென்றும் மாறாக அவர் தம்முடைய வாதத்தில் ஒரு நீண்ட காலம் நிலைத்து நின்று அந்தக் காலத்தில் தம்முடைய பணியையும் நிறைவேற்றுகின்றார் என்றும் நிரூபிக்கப்பட்டால் அவர் ஒரு நேர்மையான மனிதர் என்றும் இறைத்தூதர் என்றும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மேலும், அன்னாரது வாதத்திற்கு ஆதாரமாக முந்தைய தீர்க்கதரிசிகளின் கரங்களால் இறைவன் நிகழ்த்திக் காட்டியதைப் போன்றே அன்னார் மூலமாக நிகழ்த்திக் காட்டிய அற்புதமான அடையாளங்களை

எடுத்துக் கூறலாம். இந்த அடையாளங்கள் இலட்சக்கணக்கில் உள்ளன. ஆனால் அவற்றுள் புறச் சான்று எதுவும் தேவைப்படாத சிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகக் கூறுகிறேன்.

முதலில் நான் அன்னாரது இலக்கிய அற்புதத்தை எடுத்துக் கொள்கிறேன். அது அன்னார் உயிரோடு இருந்த காலத்தில் சான்றாக அமைந்தது மட்டுமல்லாது எல்லாக் காலத்திலும் அன்னாரது வாதத்திற்கு உறுதியான சான்றாக விளங்கும். அன்னார் பஞ்சாபிலுள்ள ஒரு குக்கிராமத்தில் வாழ்ந்தார்கள் என்றாலும், அவர்கள் பள்ளிக்கோ மார்க்கக் கல்விக் கூடத்திற்கோ செல்லவில்லை என்ற போதிலும், தனிப் பயிற்றுனர்கள் மூலம் குறைவான ஆரம்பக் கல்வி மட்டுமே கற்றார்கள் என்ற போதிலும், அரேபியாவிலிருந்து வெகு தொலைவில் அரபியைவிட பாரசீக மொழியே பெரும்பாலும் பழக்கத்தில் இருந்து வந்த ஒரு நாட்டில் வாழ்ந்து வந்த போதிலும், பஞ்சாப் எல்லாவிதமான கல்விக்கும் எதிரிகளாக விளங்கிய சீக்கியர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில் பிறந்திருந்த போதிலும் அரபி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கூட போட்டி போட முடியாத அளவுக்கு அரபி மொழியில் அற்புதமான அறிவைத் தமக்கு இறைவன் வழங்கி இருப்பதாக அன்னார் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அரபி மொழியில் பல நூல்களை எழுதி வெளியிட்டார்கள். மேலும் அரேபியா, எகிப்து, சிரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தமது எதிரிகளிடம் அன்னாரின் வாதத்தில் அவர்களுக்கு சந்தேகம் இருக்குமானால் இலக்கிய நடை, மொழியின் தூய்மை,

கட்டமைப்பில் அழகு, பொருளில் உயர்வு, கருத்துச் செறிவு ஆகியவற்றில் தமது நூலுக்கு இணையான அரபி நூலை எழுத முன்வருமாறு அழைப்பு விடுத்தார்கள். ஆனால் யாரும் அந்தச் சவாலை ஏற்கத் துணியவில்லை. அன்னாரால் எழுதப்பட்ட நூல்கள் இன்றும் உள்ளன; அவற்றிற்கு இணையான ஒன்றை யாரும் படைக்க முடியாது என்றும் அப்படிப்பட்ட ஒரு முயற்சியில் யாராவது ஒருவர் இறங்கினால் அவருக்கு எதிராக இறைவனின் கரங்கள் உயரும் என்று நாங்கள் இன்றும் வாதிக்கிறோம்.

மேலும் அன்னாரது குறிக்கோள் நிறைவேற இருப்பது பற்றியும், அன்னார் பெறவிருக்கின்ற இறுதி வெற்றி குறித்தும் அன்னார் வெளியிட்ட பல முன்னறிவிப்புகள் உள்ளன. அவை மனிதச் சிந்தனைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நிறைவேறி வருகின்றன. அன்னார் தமது வாதத்தை வெளியிட்ட போது அன்னாரை அனேகமாக யாருக்கும் தெரியாது. அன்னார் ஒரு மதிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி அவர்களது தந்தையின் மரணம் நேரிட்ட காலத்தில் அவர்களின் பரம்பரைச் சொத்தில் பெரும் பகுதி அவர்களின் கையை விட்டுப் போயிருந்தது. அவர்களது ஊரான காதியான் கல்விக்கோ வணிகத்திற்கோ முக்கிய நகரமாக இருந்ததில்லை. எந்த ஒரு நிர்வாகப் பிரிவின் தலைமையகமாகவும் அது இருந்ததில்லை. அது இரண்டாயிரம் பேரைக் கொண்ட ஒரு சிறிய கிராமம். அருகிலுள்ள இரயில்வே நிலையத்திலிருந்து பதினொரு மைல் தூரத்தில் அமைந்திருந்தது. வாரத்திற்கு இரண்டு முறை தான் தபால் வரும். அங்குள்ள பள்ளியின்

தலைமையாசிரியரே தபால் அதிகாரியாகவும் தபால் எழுத்தர் ஆகவும் கடை நிலை ஊழியராகவும் பணியாற்றினார். அதன் குடிமக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொண்ட சிறு விவசாயிகள். வாழ்க்கையின் குறைந்த பட்சத் தேவைகளைக் கூடச் சந்தையிலிருந்து பெற முடியாதவர்கள். இந்தக் கிராமத்தில் ஒதுங்கி வாழ்ந்த காரணத்தால் அந்த கிராமத்திலுள்ள சில மக்களுக்குக் கூடத் தெரியாத நிலையில் இருந்த அன்னார் பின்வரும் இறையறிவிப்பை வெளியிட்டார்கள்;

“இறைவன் ஒரு தீர்க்கதரிசியை எழுப்பினான். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளாது எதிர்க்கும்; ஆனால் இறைவன் அவரை ஆதரிப்பான்; அவருடைய உண்மையைப் பலமான அடையாளங்கள் மூலம் நிலை நிறுத்துவான்; இறைவன் உமக்கு உதவி செய்து உம்முடைய பெயரை மக்கள் மத்தியில் அறியச் செய்வதற்கும் கண்ணியப் படுத்துவதற்கும் உரிய நேரம் அருகில் உள்ளது. இந்த இயக்கத்தின் நிறுவனர் நீர் அல்ல; இறைவனே அதன் நிறுவனர். கூறுவீராக! உண்மை வந்துவிட்டது; அதற்கு எதிராக நிற்கும் அனைத்தும் தோல்வி அடைந்து விடும்; பொய்மையால் உண்மையை எதிர்த்து நிற்க முடியாது. இறைவனே தனது தூதரை நேர்வழியோடு அனுப்பினான்; பிற மார்க்கங்களின் மீது இஸ்லாத்தின் வெற்றியை நிறுவுவதற்காக இஸ்லாமியத் தத்துவத்தினால் அவரை நிறைத்தான். அவனும் அவனது தூதரும் எப்போதும் வெற்றி பெற வேண்டுமென்று இறைவன் முடிவு செய்துவிட்டான். அவனுடைய தூதரும் அவரைப் பின்பற்றியவர்களும் உலகத்தில் நலிந்தவர்களாகவும்

குறைவானவர்களாகவும் கருதப்பட்டாலும் முடிவில் அவர்களே வெற்றி பெறுவர்.

கவனமாகக் கேட்பீராக! இறைவனின் உதவி அருகில் இருக்கிறது; தொலைவில் உள்ள நாடுகளிலிருந்து மனிதர்களும் பொருட்களும் உம்மிடம் வரும்; நாம் உமக்கு ஒரு மிகப் பெரிய வெற்றியை அளிப்போம். மனிதர்கள் உம்மிடம் வரும்போது அவர்களிடம் பாராமுகமாக இருக்காதீர். அவர்களுக்குப் போதனை செய்வதில் களைத்துவிடாதீர் உம்முடைய வீட்டைப் பெரிதாக்குவீராக. ஏனென்றால் பெரும் எண்ணிக்கையிலான விருந்தினர்கள் உம்மிடம் வருவார்கள். பலர் தங்கள் வீடுகளை முற்றிலும் துறந்து உலக விஷயங்களை விட உம்மீதுள்ள அன்பிற்கு முக்கியத்துவம் அளித்து உமக்கு அருகில் குடி அமர்வார்கள். அவர்களின் அன்பின் ஆழத்தையும் விசுவாசத்தின் அளவையும் நீர் அறியமாட்டீர். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும்; அவர்கள் உம்மீது அருட்களை இறக்குமாறு வேண்டுவார்கள். இறைவன் உம்முடைய பெயரை மகிமைப் படுத்துவான். வானங்களும் பூமியும் என்னுடையதாக இருப்பதை போன்று உம்முடையதாக இருக்கும்; அதாவது வானத்திலுள்ள மலக்குகளும் பூமியிலுள்ள மனிதர்களும் உமக்கு உதவி செய்வதற்கு ஆயத்தமாய் இருப்பார்கள். உம்முடைய முன்னோர்களின் பெயர்கள் கண்ணியமிக்கவையாக இருந்தபோதிலும் மறக்கப்பட்டுவிடும். உம்முடைய குடும்பம் உம்முடைய பெயரிலேயே அறியப்படும்.

இஸ்லாத்திற்கு எதிராக மோதுகின்றவர்களை பாரசீக வம்சாவழியில் வந்த ஒரு மனிதர்

(வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) வெற்றி கொள்வார். நாம் உம்மை எல்லாக் காலத்திற்கும் மனித இனத்திற்கு ஓர் அருட்கொடையாக அனுப்பியுள்ளோம். 'வெற்றியின் நாள் வந்துவிட்டது' என்றும் முஸ்லிம்களின் பாதங்கள் புகழ் கோபுரத்தின் உச்சியில் மிகவும் உறுதியாக நாட்டப்பட்டு விட்டது என்றும் மகிழ்ச்சி கொள்வீராக. உம்முடைய எல்லாத்திட்டங்களையும் நிறைவேற்றுவான்; உம்முடைய விருப்பங்களையெல்லாம் வழங்குவான். பிற மார்க்கங்களை விட அதிகமான பின்பற்றுபவர்களை அவன் உமக்கு வழங்குவான். உலகின் மூலை முடுக்கெல்லாம் உமது பெயரை அறியச் செய்வான். எல்லாச் சமுதாயங்களும் உமது கொடியின் கீழ் ஒன்று சேரும். அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருள் தேடுவார்கள். மூன்று நூற்றாண்டு காலகட்டத்திற்குள் எல்லா மேற்கத்திய நாடுகளும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிடும். ஏனைய மார்க்கங்களைப் பின்பற்றுபவர்கள் எண்ணிக்கையில் குறைந்து காணப்படுவர்."

தம்மைப் பின்பற்றும் ஒருவர் கூட இல்லாத நிலையில், அரசாங்கமும் மக்களும் அவர்களை எதிர்த்து வந்த ஒரு காலத்தில் அன்னார் இந்த இறை முன்னறிவிப்புகளைப் பெற்று வெளியிட்டார்கள். சாதாரணமாக ஒரு மார்க்கத்தின் வெற்றிக்குத் துணைபுரியும் காரணிகளையும், அஹ்மதிய்யா இயக்கம் எதிர் கொண்ட - இன்றும் எதிர் கொண்டு வரும் - சிரமங்களையும் கருத்தில் கொள்ளாதவரை இந்த முன்னறிவிப்புகள் நிறைவேறியதில் உள்ள முக்கியத்துவத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியாது.

சாதாரணமாக ஒரு மார்க்கத்தின் வெற்றிக்குக் காரணமாக அமையக்கூடிய காரணங்களாவன:

முதலாவதாக, வெற்றிடம். முழுமையான சட்ட நெறிகளைக் கொண்டிருக்காத ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற ஒரு சமுதாயத்தின் முன் அப்படிப்பட்ட நெறிமுறைகளைக் கொண்டிருக்கும் ஒரு மார்க்கம் எடுத்துவைக்கப்பட்டால், உண்மையில் அந்தச் சமுதாயம் முதலில் அந்தப் புதிய மார்க்கத்தை எதிர்க்கும். ஆனால் அது தங்கள் அமைப்பைவிடச் சிறந்ததாக இருப்பதைக் கண்ட பின்னர் இயற்கையாகவே அதனை ஏற்றுக் கொள்ள ஆரம்பிக்கும். அப்படிப்பட்ட மார்க்கத்தின் போதனைகளைத் தொடர்ந்து கேட்கும் போது - அதன் காதுகள் அவற்றிற்கு பழகிப் போய்விடும் போது - அதனை எதிர்ப்பதற்குத் தூண்டிய ஒரே காரணமும் அகற்றப்பட்டுவிடுகின்றது. மேலும் காலம் தாழ்த்தாமல் அதனை ஏற்றுக்கொள்கின்றது. முழு சமுதாயமும் ஒட்டு மொத்தமாக அந்த நம்பிக்கையைக் கடைபிடிக்கின்றது. தமக்கென முழுமையான மார்க்க நெறிகளைக் கொண்டிராத சமுதாயங்களின் முன்னால் அப்படிப்பட்ட ஒரு மார்க்கம் எடுத்து வைக்கப்படுவதில் இதற்கான எடுத்துக் காட்டுகளைக் காணலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு எல்லாத் திசைகளிலிருந்தும் காற்று விரையும் என்ற இயற்கை விதிக்கிணங்க ஒரு மார்க்கத்தின் வெற்றி அமைகிறது.

இரண்டாவதாக, கிளர்ச்சி. ஒரு மார்க்கத்தின் கோட்பாடுகள், காரணமற்ற கடுமை, மத குருக்களின் அடக்குமுறை, தங்களுடைய உலகியல், அறிவுசார் முன்னேற்றத்திற்குத் தடையாக இருத்தல்,

அடக்குமுறையிலிருந்து தங்களை விடுவித்து, தொந்தரவோ தடையோ இல்லா முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் ஒரு மார்க்கத்திற்கு மாறும் ஆவல் ஆகியவற்றால் சில சமயம் மக்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு புதிய மார்க்கம் ஏற்றுக்கொள்ளப்பட அதிகமான வாய்ப்பு இருக்கிறது. கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய மார்க்கங்களின் விஷயத்தில் இவ்வாறு தான் நடைபெற்றது.

மூன்றாவதாக, தற்காலச் சிந்தனைகளைப் பிரதிபலிப்பது. அவர்கள் சார்ந்து இருக்கும் மார்க்கம் அனுமதிக்காத அல்லது மத குருமார்கள் ஏற்றுக் கொள்ளாத புதிய சிந்தனைகளும் புதிய வழிமுறைகளும் வெளியாகும் பொழுது எந்த விதமான அடக்குமுறையோ துன்புறுத்தலோ இல்லாவிட்டாலும் கூட தாங்கள் தங்கள் மார்க்கத்தின் கட்டளைகளுக்கு எதிராக நடக்கின்றோமே என்ற எண்ணம் மக்களை அமைதியிழக்கச் செய்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் மக்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட புதிய சிந்தனைகளும் புதிய வழிமுறைகளும் மதத்தின் பெயரால் முன்வைக்கப்பட்டால் அந்த மார்க்கம் எளிதான ஏற்பைப் பெறும். ஏனெனில் மக்கள் தங்கள் மனசாட்சியின் குரலை ஒடுக்குவதற்குத் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் வழிமுறையைத் தேடிக்கொண்டிருந்தனர்.

நான்காவதாக, நிறுவனரின் ஆளுமைத்தன்மை. ஒரு மார்க்கத்தின் நிறுவனர் அல்லது தோற்றுநர் சமுதாயத்தில் ஒரு முக்கியமான இடத்தை ஏற்கனவே பெற்றிருப்பார் என்றால் அவர் தாம் நிறுவிய மார்க்கத்தின் பிரச்சாரத்திற்காக அந்தச் சமுதாயத்தின்

வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்த முடியும். உதாரணமாக அவர் ஒரு மார்க்கப் பெரியவர் அல்லது இயக்கத்தின் வாரிசாக இருத்தல் அல்லது அந்த சமுதாயத்தின் ஆற்றல் மிக்க அல்லது அதிகாரம் பொருந்திய ஓர் இடத்தை பெற்றிருத்தல். அத்தகைய மனிதரால் உருவாக்கப்பட்ட மார்க்கம் அவர் தலைமை ஏற்கும் சமுதாயத்தினரின் உடனடியான ஒப்புதலை பெறும். தம்முடைய மார்க்கத்தின் பிரச்சாரத்திற்கான வழிவகைகளை அவர் உடனடியாகப் பெறுகிறார். அந்த அமைப்பையும் சமுதாயத்தின் பாரம்பரியத்தையும் தம்முடைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் வசதியை அவர் பெறுவார். இதன் மூலம் அவருடைய பணி எளிதாக நிறைவேறும். மக்களின் மார்க்கம் சார்ந்த நம்பிக்கைகளால் சூழப்பட்ட குடும்பத்தையோ இனத்தையோ சேர்ந்த ஒருவரோ இதே போன்ற வசதியை பெறலாம்.

ஐந்தாவதாக, இடம். ஒரு மார்க்கம் தோன்றிய இடம் ஒரு நாட்டின் தலைநகர் அல்லது வாணிப மையம் அல்லது மார்க்க முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடம் அல்லது ஒரு பெரிய துறைமுகம் அல்லது அறிவியல், வரலாற்று முக்கியத்துவம், அரசியல், மார்க்கம், சமுதாயம், அறிவுச்சார்பு அல்லது இது போன்ற முக்கியத்துவத்தின் காரணமாக மக்கள் அடிக்கடி ஒன்று கூடும் இடமாக இருப்பதன் காரணமாக கணிசமான ஆதரவைப் பெறலாம். அத்தகைய மார்க்கம் பொது மக்களின் உடனடியான கவனத்தை ஈர்த்து உடனடியான விளம்பரத்தைப் பெறுகிறது. அதன் பரவுதலை இது அதிகமாக்குகிறது.

ஆறாவதாக, அமைப்பு. ஒரு மார்க்கத்தின் பரவுதலை அதிகமாக்கும் இன்னொரு காரணி அது அரசியல், பொருளாதாரம் அல்லது மக்களின் பிற தேவைகளோடு பிணைந்திருப்பதாகும். அத்தகைய மார்க்கமும் அப்படிப்பட்ட அமைப்பின் காரணமாக உடனடியான ஏற்பைப் பெறும்.

ஏழாவதாக, தாராளமான அனுமதி. மார்க்கக் கட்டளைகளைக் கடைபிடித்து ஒழுகுவது சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அவசியமாகும் என்று வலியுறுத்தாமல் ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டின் மீது நம்பிக்கை கொள்வது மட்டுமே போதுமானது என்றோ ஒரு தனி மனிதருக்கு விசுவாசமாக நடப்பதே போதுமானதென்றோ அதனைப் பின்பற்றுபவர்கள் தம் விருப்பம் போல் செயல்பட்டுக் கொள்ளலாம் என்றோ அனுமதிக்கும் ஒரு மார்க்கம் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்களால் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படும். ஏனென்றால் அது முழுமையான செயல் சுதந்திரத்தை அளிக்கிறது.

எட்டாவதாக, போலியான இன்பத்தைத் தூண்டுதல். பலமான மருந்துகள் அல்லது மெஸ்மரிச ஆற்றல்கள் அல்லது மந்தமான மனதிற்கு கற்பனை மிகுந்த சொர்க்கத்தின் இன்பங்களைக் காட்டுதல் அல்லது கற்பனையான நரகத்தின் பயங்கரங்களைக் காட்டுதல் ஆகியவற்றின் மூலம் மக்களின் கற்பனையைத் தூண்டிவிடுவதன் மூலம் சில மார்க்கங்கள் ஏற்பைப் பெற முயற்சிக்கின்றன. அதன்மூலம் அதனைப் பின்பற்றுபவர்கள் மீது ஒரு போதும் உதறித் தள்ள முடியாத பலமான கட்டுப்பாட்டைப் பெறுகின்றன. அவர்கள் மற்றவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்துவதற்கு உதவி செய்கின்றன.

ஒரு மார்க்கத்தின் பரவுதலுக்குத் துணை செய்பவைகளாக மேலே குறிப்பிடப்பட்ட வழிவகைகள் எதனையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பெற்றிருக்கவில்லை என்பது அவர்களின் வாழ்க்கையை ஆய்வு செய்யும் போது தெளிவாகிறது. அப்படிப்பட்ட ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள அன்னார் முயற்சி செய்யவும் இல்லை என்றும் தெரிகிறது. ஆப்பிரிக்காவிலோ அல்லது தூரப் பகுதியிலுள்ள தீவுகளிலோ வாழுகின்ற பண்பாடற்ற சில பழங்குடியினரைத் தவிர மற்ற அனைவரும் ஏதேனும் ஒரு கட்டமைக்கப்பட்ட மார்க்கத்தோடு இணைந்திருந்த ஒரு கால கட்டத்தில் தான் அன்னார் தோன்றினார்கள். அவ்வாறு இணைந்திராத மக்கள் யாரேனும் இருந்தாலும் அவர்களை ஒரு சமுதாயம் என்றோ இனம் என்றோ கூற முடியாத அளவுக்குக் குறைந்த எண்ணிக்கையிலும் சிதறியும் காணப்பட்டார்கள்.

இரண்டாவது காரணியான கிளர்ச்சியும் அவர்களுக்கு அமையவில்லை. ஏனென்றால் நவீன கலாச்சாரம் மனித மனங்களை உறுதியாக ஆக்கிரமித்துக் கொண்டது. எந்த அளவுக்கென்றால் எல்லா மதங்களைச் சேர்ந்த குருமார்களும், அறிஞர்களும் அதன் தாக்கத்தை எதிர்த்துப் போரிடுவதை விடுத்து தத்தமது மார்க்கங்களை அதனோடு இயைந்ததாக ஆக்க ஆர்வம் கொண்டிருந்தனர். வேறு வழியின்றியும் விருப்பத்தோடும் நவீன சிந்தனையால் இழுத்துச் செல்லப்பட்டனர். பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றியவர்கள் தங்கள் மார்க்கத் தலைவர்களின் மீது இன்று இருப்பது போல் மிகவும் திருப்தி அடைந்திருந்தார்கள். ஏனென்றால் அவர்களுடைய மார்க்க அறிஞர்களும் மத குருக்களும்

அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்கும் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான வாழ்க்கையைத் தடையின்றிப் பின்பற்றுவதற்கும் எந்த விதமான தடையையும் விதிக்கவில்லை; அல்லது மிகவும் பலவீனமான மறுப்பைத் தெரிவித்தார்கள். சில நாடுகளில் அங்கு நிலைபெற்றுள்ள மார்க்கத்தின் மீது அதிருப்தி நிலவியது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றிய நாட்டிலும், அன்னார் முதன் முதலில் அழைப்புப் பணியை மேற்கொண்ட மக்கள் (அதாவது இஸ்லாத்தின் சுன்னத் பிரிவைச் சேர்ந்தவர்கள்) மத்தியில் பொதுவாக அதிருப்திக்குக் காரணமாக அமையும் மதகுரு முறைமையின் அடக்குமுறை இல்லாத காரணத்தால் அத்தகைய வெறுப்புணர்வு நிலவவில்லை.

இந்த இரண்டு காரணிகளும் பொய்யான மார்க்கத்தின் பரவுதலுக்கு தூண்டுதலாக அமையும் என்பது மட்டுமல்லாமல் உண்மையான மார்க்கம் அருளப்படுவதற்குரிய இரண்டு காரணங்களாகவும் திகழ்கின்றன. ஆனால் அவற்றின் அனுகூலத்தைப் பெற்றுக்கொள்வது முற்றிலும் சரியானதும் முறையானதுமான இந்த இரண்டு காரணிகளும் இல்லாத ஒரு நேரத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் தோன்றினார்கள். இவ்வாறு முன்னோர்களுக்குச் சாதகமாக அமைந்த சில வழிமுறைகள் அன்னாரின் காலத்தில் இல்லாத காரணத்தால் முந்திய தீர்க்கதரிசிகளின் பணியை விட அன்னாரது பணி கடினமானதாக அமைந்தது.

மேலே கூறப்பட்ட மூன்றாவது காரணம். அதாவது நிகழ்காலத்திய எண்ணங்களைப்

பிரதிபலிக்கின்ற ஒரு யுக்தியாகும். இது பொய்யான மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்பவரும் முன்னிறுத்துபவரும் உபயோகிக்கின்ற வழிமுறையாகும். ஆகையால் இறைவனின் உண்மையான தீர்க்கதரிசியான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் அதனைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக, ஒருபுறம் மார்க்கத்தை மூட நம்பிக்கைகளின் மொத்த உருவமாக மாற்றும் எல்லாக் கருத்துக்களும் தவறென்று அவர்கள் மறுத்தார்கள். மறுபுறம் புதிய உலகாதாய கலாச்சாரத்தின் மூலம் உருவான எல்லாத் தீய போக்குகளையும் எதிர்த்தார்கள். தனது பண்புகளைத் தொடர்ந்து உலகிற்கு வெளிப்படுத்திவரும் என்றும் வாழும் ஒரே இறைவன் மீது மனிதர்களை நம்பிக்கை கொள்ளச் செய்வதும், அற்புதங்களின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்வதும், வானவர்களின் இருப்பையும் பிரார்த்தனை ஒப்புக் கொள்ளப்படுவதையும் ஏற்றுக் கொள்ளச் செய்வதையும், வார்த்தை வடிவிலான இறை அறிவிப்புகளின் சாத்தியக் கூற்றை விளக்கிக் காட்டுவதும் இஸ்லாமிய போதனைகளின் படி உள்ள மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வைப் பற்றி அவர்கள் திருப்தி கொள்ளும் விதத்தில் விளக்குவதும், இஸ்லாமியக் கலாச்சாரத்தின் விதிமுறைகளை உலகின் முன் வைப்பதும் ஒரு சாதாரணமான பணியல்ல; ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துணிச்சலோடும் விடா முயற்சியோடும் இந்தப் பணியை நிறைவேற்றினார்கள். இந்தக் கருத்துகள் நவீன கலாச்சாரத்தை விரும்புபவர்களுக்கு ஏற்புடையதல்ல என்ற எண்ணத்தினால் அன்னார் சிறிதும் பாதிக்கப்படவில்லை.

ஒரு மார்க்கத்தின் பரவுதலில் நான்காவது அம்சம் அதன் நிறுவனரின் செல்வாக்கு; இந்த அம்சத்தைப் பொருத்தும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் எந்தச் சிறப்பான தன்மையையும் பெற்றிருக்கவில்லை. அவர்கள் மார்க்கரீதியான செல்வாக்குப் பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் ஒரு கண்ணியமிக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாம்; ஆனால் அது ஒரு சாதாரணமான குடும்பம். அவர்கள் ஸெய்யது வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; அதாவது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழித்தோன்றல் அல்லர். ஸெய்யது வம்சத்தைச் சேர்ந்தவர்களை ஸுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களும் கண்ணியத்தோடு நடத்தினார்கள்; ஷியாக்களும் மிகவும் மதிப்போடு நடத்தினார்கள். இறுதிக்காலத்தில் தோன்றுவார் என்று வாக்களிக்கப்பட்ட ஒருவரோ அல்லது இறைத்தூதரோ ஸெய்யதுகள் மத்தியில்தான் தோன்றுவார் என அவர்கள் இருசாராரும் நம்பினார்கள். எனவே அன்னாரது வெற்றி அவர்கள் மதக்குருக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாலோ மக்களின் மதம் சார்ந்த நம்பிக்கைகளை ஒருங்கே கொண்டிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாலோ கிடைத்ததாகக் கூறமுடியாது. தம்முடைய அறிவாற்றல் மிகுந்த பாரம்பரியத்தின் மூலம் சிறப்புப் பெறுகின்ற அளவுக்கு அவர்கள் எந்த ஒரு மிகச் சிறந்த கல்வி நிலையத்திலும் கல்வி கற்றவருமல்லர். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களிடம் அதிகாரம் அல்லது செல்வாக்கின் காரணமாக அந்த சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்றும் தமது கொள்கைகளைப் பரப்புவதற்கு அந்தச் சமுதாயத்தின் வளங்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றும் கூறுகின்ற

அளவுக்கு அவர்கள் எந்த ஒரு மார்க்கப் பெரியவரின் சீடரோ அல்லது ஏதேனும் ஒரு மார்க்கப் பிரிவு அல்லது உலகியல் அமைப்பின் தலைவரோ ஏதேனும் ஒரு மார்க்கப் பிரிவின் கலீஃபாவோ (மார்க்கத் தலைவர்) அல்லர்.

ஐந்தாவது அம்சம் இயக்கத்தின் தலைமையகம் அனுகூலமான இடத்தில் அமைந்திருப்பது. இது தொடர்பாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் பிறந்த இடமும் அன்னார் வாழ்ந்த இடமும் அஹ்மதிய்யா இயக்கத்தின் தலைமையகமும் ஆன காதியானின் அமைவிடத்தைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அது ஒரு நாட்டின் தலைநகரமோ, ஒரு பிராந்தியத்தின் தலைநகரமோ, வாணிபத்தலமோ, தொழில் நகரமோ, மார்க்க முக்கியத்துவம் வாய்ந்த இடமோ அல்ல. அல்லது அறிவுசார் அல்லது அரசியல் அல்லது சமுதாய இயக்கத்தோடு தொடர்புடைய நகரமும் அல்ல. அருகிலுள்ள இரயில் நிலையத்திலிருந்து பதினோரு மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமமாகும். அங்கு ஒரு தார்ச்சாலை கூடக் கிடையாது. இந்த விஷயத்தைப் பொருத்தவரையில் இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் இருந்ததைவிட இன்றும் அவ்வூரில் பெரிய மாற்றம் எதுவும் வந்துவிடவில்லை. ஒரு பின்தங்கிய நாட்டின் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் கருதப்பட்ட பகுதியில் அது அமைந்திருந்தது. கடலிலிருந்து அது அமைந்திருக்கும் தூரம், பயணிகள் அது அமைந்திருக்கும் பகுதிக்குச் செல்வதைப் பற்றிச் சிந்திப்பதையே தடுக்கிறது.

ஆறாவது அம்சமான மார்க்கத்தின் மூலம் பெறுகின்ற அரசியல், சமுதாய, பொருளாதார ஆதாயம்

அஹ்மதிய்யா இயக்கத்தின் விஷயத்தில் காணப்படவில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் அரசியல் தொடர்புகளிலிருந்து முற்றிலும் விலகி இருந்தார்கள். அந்தந்த நாட்டிலுள்ள மக்கள் அந்தந்த நாட்டின் அரசாங்கத்திற்கு உண்மையான விசுவாசத்தோடு இருக்க வேண்டும் என்ற கருத்தே அவர்களின் அரசியல் கோட்பாட்டில் அடங்கி இருந்தது. இந்தியாவின் சுதந்திரம் என்னும் ஒளிமிக்க சூரியன் உதயமாவதைக் கீழ்வானத்திலிருந்து காண ஏக்கம் நிறைந்த கண்களுடன் கீழ்வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இந்தியக் குடிமக்களுக்கு இந்தக் கோட்பாடு எவ்வளவு வெறுப்புக்குரியதாக இருந்திருக்கும் என்பதை எளிதில் புரிந்து கொள்ளமுடியும். அஹ்மதிய்யா இயக்கத்தின் உண்மையில் திருப்தி கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் அதன் இந்த அரசியல் நிலைபாடு காரணமாக மட்டும் அதில் இணைவதில் தயக்கம் காட்டுகின்றனர் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

அதே போன்று பொருளாதார ரீதியிலான அனுகூலத்தைப் பெறும் நம்பிக்கையும் இருக்கவில்லை. ஏனென்றால் ஏற்கனவே நிலைபெற்ற ஒரு பழைய இயக்கத்தால் மட்டுமே இந்த நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும். இதற்கெதிரில் அஹ்மதிய்யா இயக்கத்தைப் பொருத்தவரையில் மிகப் பெரிய அளவிலான பொருளாதார தியாகம் தேவைப்படுகிறது. ஏனென்றால், இயக்கத்தின் முறையான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வாழும் ஒவ்வொரு உறுப்பினரும் தமது வருமானத்தில் பத்தில் ஒரு பாகம் முதல் மூன்றில் ஒரு பாகம் வரை இயக்கத்தின் நிதிக்குப் பங்களிப்புச் செய்கின்றனர்.

ஒரு மார்க்கத்தின் பரவுதலுக்குரிய ஏழாவது வழிமுறை தாராளமான அனுமதியாகும். அதாவது, அதனைப் பின்பற்றுபவர்களுக்கு முழுமையான செயல் சுதந்திரம் அளிப்பதும், ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டின் மீது மட்டும் நம்பிக்கை வைத்தல் அல்லது அதன் தலைவர் மீது முழுமையான ஈடுபாடு வைத்தல் மட்டுமே போதுமானது என்று வலியுறுத்துவது. இந்த வழிமுறை போலி போதகர்களாலும், பொய் வாதிகளாலும் மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் அனைத்து உண்மையாளர்களைப் போன்றே இயக்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரிடமும் விருப்பங்கள், சொத்து, சமுதாயப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் உண்மையான தியாகத்தை வேண்டினார்கள். தம்மைப் பின் பற்றியவர்களுடைய வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் மார்க்கத்தின் ஆட்சிக்குட்படுத்தினார்கள். மேலும் சில கொள்கைகளின் மீதான வாயளவிலான நம்பிக்கை அறிவிப்போடு மட்டும் அன்னார் நிறைவடைந்துவிடவில்லை.

மார்க்கத்தின் பரவுதலுக்காகச் சில சமயங்களில் பயன்படுத்தப்படும் எட்டாவது வழிமுறை கற்பனையைத் தூண்டுவதாகும். அதாவது, பொய்யான, முறையற்ற வழிமுறைகளின் மூலம் மக்களின் கவனத்தை ஈர்ப்பதாகும். உதாரணமாக ஓர் ஆனந்த மாளிகையைக் கட்டி அந்த மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கு முன்னால் அதனைச் சொர்க்கமாகக் காண்பிப்பது. அல்லது பலமான மருந்துகள் மூலம் அவர்களின் கற்பனையைக் கிளர்ந்தெழச்செய்வது. அல்லது, மெஸ்மரிஸம் அல்லது அதைப் போன்ற ஆற்றல்கள் மூலம் இயக்கத்தின் நிறுவனர் அல்லது தலைவருக்கு

அபாரமான ஆன்மீக ஆற்றல் இருப்பதாக நம்பிக்கையை வளரச் செய்வது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தையும் கடுமையாகக் கண்டித்தார்கள். அவற்றை ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடையாகக் கருதினார்கள். எளிதில் ஏமாறக்கூடிய மக்கள் மீது புத்திசாலித்தனமான கயவர்கள் பயன்படுத்தும் ஏமாற்று வேலைகள் என்று வர்ணித்தார்கள்.

இத்தனை இடர்ப்பாடுகளுக்கும் மத்தியில் மேலே கூறிய இறைவெளிப்பாட்டை வெளியிட்டது அதில் அடங்கியுள்ள முன்னறிவிப்புகள் அசாதாரணமானவை என்று காட்டுகின்றது. அவை நிறைவேறிவிட்டன என்று நாம் மன நிறைவு அடைந்தோமென்றால் அன்னாரின் உண்மைக்கான உறுதியான சான்று நமக்குக் கிடைக்கும். சகோதரர்களே! சகோதரிகளே! இந்த மாநாட்டில் உங்கள் மத்தியில் இந்தக் கட்டுரை படிக்கப்படுவதே முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் மோசமான எதிர்ப்பு நிறைந்த சூழ்நிலைக்கு மத்தியில் அன்னாரால் வெளியிடப்பட்ட முன்னறிவிப்புகள் நிறைவேறியதற்குப் போதுமான சான்றாகும். இதுவரை நிறைவேறாதவைகள் நிறைவேறும் முகத்திலிருக்கின்றன. ஒரு குக்கிராமமான காதியான் இன்று உலகம் முழுவதும் தெரிந்த ஓர் ஊராக இருக்கின்றது. மூன்றில் ஒரு பங்கு நூற்றாண்டுக்கு முன்னர் தனி மனிதராக இருந்த அவர்கள் இன்று எல்லாக் கண்டங்களிலும், எல்லா நாட்டிலும், எல்லா இனத்தையும், எல்லா வகுப்பையும் சேர்ந்த மக்கள் மத்தியில் அன்னாரைப் பின்பற்றுபவர்கள் இருப்பதைப் பெருமையுடன் கூற முடியும். அவர்களின் பெயர் உயர்வடைந்து விட்டது; அன்னாரது எதிரிகள் கூட

அவர்களின் பெயரை மரியாதையுடனேயே உச்சரிக்கின்றனர்.

இன்று எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாலும் எந்த பண்பாட்டைப் போற்றுபவர்களாலும் இழிவுபடுத்த முடியாத அளவுக்கு அவர்கள் இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டி இருக்கிறார்கள். அனைத்து மார்க்கங்களின் மத்தியில் அது பெருமையிலும், கண்ணியத்திலும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. நம்பிக்கை இழந்த அந்தத் தற்காப்புக் காலம் கடந்து விட்டது. மனித இனத்தின் மீது கொண்ட கருணையின் காரணமாகவும், அன்பின் காரணமாகவும் இருண்ட சக்திகளை எதிர்த்துப் போரிட்டு வருகின்றது. தன்னைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை நாள் தோறும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அஹ்மதிய்யா இயக்கத்தின் கொள்கை பரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. உலகின் எல்லாப் பாகங்களிலும் அஹ்மதிய்யா இயக்கத்தின் உறுப்பினர்களைக் காண முடியும். இறைவனின் வல்லமை மிக்க அடையாளங்களால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் உண்மை நிறுவப்பட்டு வருகிறது. இப்போது காதியான் உலகின் கவனத்தை ஈர்த்து வருகிறது. பொதுப்பாதையிலிருந்து பல மைல் தூரத்தில் அமைந்திருக்கும் வேறு முக்கியத்துவம் எதுவுமில்லாத குக்கிராமம் உலகின் எல்லாப் பகுதியிலிருந்தும் விருந்தாளிகளை ஈர்த்து வருகிறது. ஏற்கனவே உலகின் பல பகுதிகளிலிருந்தும் **1500** –க்கும் அதிகமானோர் காதியானுக்குச் சென்று அங்கு குடியமர்ந்து விட்டனர். தினமும் ஏறத்தாழ **300** விருந்தினர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மேஜையில் உபசரிக்கப் படுகின்றனர்.

வாதத்திற்கு முன்பும் பின்பும் உள்ள தமது நிலையைப் பற்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் ஓர் அரபிக் கவிதையில் விவரித்துள்ளார்கள். அது இவ்வாறு அமைந்துள்ளது:

“ஒரு காலம் இருந்தது; அப்போது நான் பிறரது மேஜைகளிலிருந்து விழுந்த துணுக்குகளால் உணவருந்தி வந்தேன்; இன்று பல குடும்பங்கள் என்னுடைய மேஜையில் உணவருந்துகின்றனர்.”

கவிதையின் முதல் பகுதி பின்வரும் உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் ஆரம்ப காலங்களில் தம்மை முழுமையாக ஆன்மீக விஷயங்களுக்கு அர்ப்பணித்துக் கொண்டதையும், அவர்களது தந்தையாரின் மரணத்திற்குப் பின் தம்முடைய பாரம்பரியச் சொத்து முழுவதையும் தமது சகோதரரின் கைகளில் ஒப்படைத்துவிட்டார்கள். அவரே அன்னாரது தேவைகளைக் கவனித்துக் கொண்டார்.

இயக்கங்களின் உலகில் இத்தனை சிரமங்களுக்கு எதிரிலும் மேலே கூறிய சூழ்நிலைகளில் இவ்வளவு வேகமாகவும் ஆச்சரியகரமாகவும் வளர்ச்சி பெற்ற ஓர் உதாரணம் உள்ளதா? மார்க்கங்கள் செழித்து வளர்ந்துள்ளன; அதே நேரத்தில் கஷ்டங்களை எதிர் கொள்ள நேரிட்டுள்ளது. ஆனால் அவற்றுள் எதுவும், அவை உண்மையானவையாக இருந்தாலும் பொய்யானவையாக இருந்தாலும், இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் அஹ்மதிய்யா இயக்கம் பெற்ற வெற்றியை பெறவில்லை. இந்த இயக்கம் இன்னும் அதன் மழலைப் பருவத்திலேயே இருக்கிறது. இதுவரை அது பெற்றவை அனைத்தும் இனி வரவிருப்பவற்றின்

நிழலே ஆகும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இலட்சக்கணக்கான மக்கள் அதனை ஏற்றுக் கொள்வதை உலகம் காணும். இங்கு இருக்கும் உங்களில் பலரும் அதனைக் காண்பீர்கள். ‘‘கர்த்தரின் நாமத்தினால் வந்தவர் ஆசிர்வதிக்கப்பட்டவர்’’ என்று அவர்கள் வியந்து கூறுவர். அவரை ஏற்க மறுப்பவர்கள் மஸீஹின் இரண்டாவது வருகைக்காகத் தொடர்ந்து காத்திருப்பர். அவர்களுடைய நம்பிக்கைகள் ஒவ்வொன்றாக முற்றுப் பெற்று ஏமாற்றத்தில் முடியும். நிராசை மிகுந்து அவர்கள் அவரை நோக்கித் திரும்பும் வரை இவ்வாறு நடைபெறும். மூன்று நூற்றாண்டுகள் கழிவதற்கு முன் உலகின் பெரும்பாலானோர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுவிடுவர். முஸ்லிம்களின் பாதங்கள் புகழ் என்னும் கோபுரத்தின் உச்சியில் நிறுவப்படும்.

இது மட்டுமல்லாமல் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இலட்சக்கணக்கான அடையாளங்களைக் காட்டியுள்ளார்கள். அதன் மூலம் இறந்தவர்கள் உயிர் பெறச் செய்யப் பட்டுள்ளனர்; செவிடர்கள் கேட்கும் சக்தியைப் பெற்றனர்; குருடர்கள் பார்வை பெற்றனர்; முடவர்கள் நடந்தனர்; தொழு நோயாளிகள் நலம் பெற்றனர்; பீடிக்கப்பட்டு இருந்தவர்கள் முழுமை பெற்று இறைச் சன்னிதானத்தில் தாழ்மையுள்ள குழந்தைகள் போல் ஆகினர். அவர்களால் காட்டப்பட்ட அடையாளங்கள் விண் கோளங்களைச் சேர்ந்தவையாகவும் பூமியின் வளிமண்டலத்தைச் சேர்ந்தவையாகவும் பூமிக்குக் கீழுள்ள சூழ்நிலைகளைச் சார்ந்தவையாகவும் மலைகள், ஆறுகள், நண்பர்கள், பகைவர்கள், அரசாங்கங்கள், அதன் குடிமக்கள், முழு அண்ட சராசரங்கள், வாழ்வு, மரணம், சிலரின்

மக்கட்பேறு, சிலரது மக்கட்பேறற்ற தன்மை, நோய் பரவுதல், அற்புதங்கள், குணங்கள் ஆகியவை தொடர்புடையவையாகவும் இருந்தன. எடுத்துக்காட்டாக உலகப் போர், ஜார் மன்னரின் கஷ்டங்கள், துருக்கியர்களின் தோல்வி, தொற்று நோய் பரவுதல், தொடரான பூமியதிர்ச்சி, இன்னும் பல நிகழ்வுகள் பற்றி அவர்கள் செய்த முன்னறிவிப்புகள் உரிய காலத்தில் நிறைவேறின. ஒரு வகையில் இந்த மாநாடும் அவர்களுடைய முன்னறிவிப்பின் நிறைவேற்றம் தான். **1892** ஆம் ஆண்டு அவர்கள் 'இஸாலயே அவ்ஹாம்' என்ற நூலை வெளியிட்டார்கள். அதில் அவர்கள் தாம் கண்ட தெய்வீகக் காட்சி ஒன்றை விவரித்துள்ளார்கள். அதில் அவர்கள் இலண்டனில் உள்ள ஒரு மேடையில் நின்று கொண்டு உரையாற்றினார்கள். பின்னர் அவர்கள் சில பறவைகளைப் பிடித்தார்கள். தமது கொள்கைகள் இலண்டனில் பிரச்சாரம் செய்யப்படும் என்றும் தம்மூலம் மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அதற்கு அவர்கள் விளக்கம் கூறியிருந்தார்கள்.

சுருக்கமாக அவர்கள் எல்லா வகையான அடையாளங்களையும் காட்டியிருந்தார்கள். அவையனைத்தையும் இங்கே விவரிக்க முடியாது. உயிருள்ள ஓர் இறைவன் இருப்பதை நிரூபிப்பதற்கும் அவனுடைய இருப்பின் காரணத்தையும் பொருளையும் புரிய வைப்பதற்காக இறைவனின் ஒவ்வொரு பண்பையும் அடையாளங்கள் மூலமாகவும் அவர்கள் நிகழ்த்திக் காட்டினார்கள் என்று கூறுவது மட்டுமே போதுமானதாக இருக்கும். அவர்களின் எதிரிகள் கூட இந்த அடையாளங்களுக்குச் சான்று பகர்கின்றனர்; அவை பல நூல்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. முற்காலத்தில்

நன்மக்கள் இறைவனைக் கண்டு அவனது குரலைக் கேட்டது போன்று இறைவனை காண்கின்ற அளவுக்கு நம்பிக்கையைப் பெறுவதற்கு இந்த அடையாளங்கள் இலட்சக்கணக்கான மக்கள் உறுதியான நம்பிக்கையைப் பெறச் செய்தது. இறைவனின் தூய்மையான கருணையால் இந்த கட்டுரை ஆசிரியரும் பல சந்தர்ப்பங்களில் இறைவனின் இனிமையான வார்த்தைகளைக் கேட்டுள்ளார். அவனுடைய பண்புகள் தம்மிடமோ தம்மூலம் பிறரிடமோ வெளிப்படுவதை அனுபவித்துள்ளார். இதுவே நான் ஆரம்பத்தில் விளக்கியுள்ள நம்பிக்கையும் உறுதிப்பாடும் ஆகும். இதனை உருவாக்குவதே தீர்க்கதரிசிகளின் பணியாகும். இதுவல்லாமல் மார்க்கம் என்பது பெயரளவிலும் பொருளும் மதிப்பும் இல்லாத ஒன்றாகவே இருக்கும்.

**சான்றுகள் எவ்வளவு தான் உறுதியானவையாக இருந்த போதிலும் சில மக்கள் வெறுமனே தாம் கேள்விப்படுகின்றவற்றால் திருப்தி அடைய மாட்டார்கள் என்பதால் அத்தகைய மக்களும் உறுதியும் திருப்தியும் அடைவதற்கான வழிவகைகளை இறைவன் ஏற்படுத்தியுள்ளான் என்பதை இந்தக் கட்டுரையை நிறைவு செய்யும் முன் குறிப்பிட விரும்புகிறேன். அவற்றுள் ஒன்று இதுவாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களே விளக்கி இருப்பது போன்று அப்படிப்பட்ட மனிதர் நாற்பது நாட்கள் தொடர்ந்து விருப்பு வெறுப்பற்ற மனதோடு பிரார்த்தனை செய்யவேண்டும். கடைசி நாள் இரவில் இறைவனிடம் பின்வருமாறு பிரார்த்தனை செய்ய வேண்டும்.**

"இறைவா! இஸ்லாத்தின் புனிதமான போதனையை அதன் உண்மை வடிவில் எடுத்துக் கூறி மக்களை அதன்மேல் நம்பிக்கை கொள்ளச் செய்வதன் மூலம் இவ்வுலகில் அதனை நிறுவுவதற்கு இறைவன் தம்மை அனுப்பி இருப்பதாக வாதிக்கும் இந்த மனிதரை உண்மையிலேயே நீ அனுப்பி இருந்தால், உண்மையான விஷயங்களைப் பற்றிய அறிவு எனக்கு இல்லாத காரணத்தால் உண்மையைப் பற்றிய சரியான ஒரு முடிவுக்கு வரமுடியாத நான் உன்னிடம் இறைஞ்சுகிறேன்; நீயே எல்லா உண்மைகளின் ஊற்றுக்கண். அனைத்து நேர் வழிகாட்டல்களின் மூலமான நேர்வழிகாட்டியே! உன்னுடைய படைப்பினங்கள் துன்பப்படுவதைக் காணவிரும்பாத கருணையாளனே! இந்த உண்மையை எனக்குத் தெளிவுபடுத்துவாயாக!"

ஒரு மனிதன் உண்மையான உள்ளத்தோடு நாற்பது நாட்கள் இவ்வாறு பிரார்த்தித்து வருவாரேயானால், அந்த நாற்பது நாள் காலத்தில் இறைவன் அவரது உள்ளத்தை உண்மையின் பக்கம் திறந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு ஆதரவாக ஏதேனும் அடையாளத்தைக் காட்டுவான். இது முற்றிலும் இறைவனின் கரங்களில் உள்ள திருப்திக்கான வழிமுறை என்பதாலும், பிரார்த்தனையின் விளைவாக ஏற்படுவதாக இருப்பதாலும் உண்மையைத் தேடுவோரின் உள்ளத்தை முழுமையான உறுதிப்பாட்டின் பக்கமும் நம்பிக்கையின் பக்கமும் இட்டுச் செல்லவல்லது. மிகவும் முக்கியமான இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவதற்கு இது நீதியும் நேர்மையும் மிக்க வழியாக இருப்பதால் மேற்கத்திய நாடுகளிலுள்ள உண்மையின் நேசர்கள் இதனை வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஏனென்றால் அப்படி நிகழும் பட்சத்தில், மனிதனின் மனம் இன்னொரு மனிதனின் பேச்சாற்றலாலோ, புத்திசாலித்தனத்தினாலோ கவரப்பட்டுவிட்டது என்ற சந்தேகத்திற்கு இடமிருக்காது. இது தன்னைப் படைத்தவன் முன் படைக்கப்பட்டவன் வைத்த வேண்டுகோளும் அதற்கு அதைவிட உண்மையும் நீதியும் மிக்க தீர்ப்பை வழங்க முடியாத அளவுக்குக் கருணை மிக்க நீதிபதி வழங்கிய தீர்ப்புமாகும்.

தம்முடைய வாதங்களை முழுமையாக ஆராய்ந்த பிறகும் அன்னார் ஒரு பொய் வாதி என்றும், மனித இனத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் அன்னாரை நியமிக்கவில்லை என்றும் அவர்களுடைய வாதம் மனித இனத்தை ஏமாற்றுவதற்காக அன்னாரால் உருவாக்கப்பட்ட ஒரு உபாயம் என்றுமுள்ள தங்களுடைய கருத்தில் நிலைத்து நிற்கும் தமது எதிரிகளைத் திருப்திப் படுத்துவதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் மற்றொரு தீர்வை முன் வைத்தார்கள். அப்படிப்பட்ட மக்கள் திருப்தி கொள்ளும் பொருட்டு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் பின்வரும் தீர்வை முன்வைத்தார்கள். அவர்கள் தமது நூலான 'ஹகீகத்துல் வஹீ' என்னும் நூலைக் கவனமாகப் படிக்க வேண்டும்; அதில் அந்நூல் வெளிவரும் வரை நிறைவேறியுள்ள அடையாளங்களை விவரித்துள்ளார்கள்; பிறகு அவர்கள் இறைவனைச் சாட்சியாக வைத்துப் பின் வருமாறு சத்தியம் செய்து கூற வேண்டும்; அவர்கள் அந்நூலைக் கவனமாகப் படித்து விட்டார்கள் என்றும் அதனைப் படித்த பின்னரும் அவர்கள் அன்னாரைப் பொய் வாதியென்றும், பொய்யர் என்றுமே கருதுகின்றனர் என்றும் அவர்கள் தங்கள் நம்பிக்கையில்

பொய்யர்களாகவும் அன்னார் உண்மையாளராகவும் இருக்கும் பட்சத்தில் முற்காலத்திய இறைதூதர்களின் எதிரிகளுக்கு இறைவன் வழங்கிய தண்டனையைப் போன்ற தண்டனையைத் தாங்களும் அனுபவிக்கச் செய்ய வேண்டும் என பிரார்த்திக்க வேண்டும். அப்படிப்பட்ட பிரார்த்தனைக்குப் பின் முந்தைய இறைத்தூதர்களின் எதிரிகள் அனுபவித்த தண்டனையைப் போன்ற தண்டனையை அத்தகைய மனிதர்களும் அனுபவிப்பார்கள்; மனித இனத்திற்கு ஒரு பாடமாக அமைவார்கள். இறைவனின் கருணையை விட்டு விலகி தம்மீது தண்டனையை வரவழைத்துக் கொண்ட மனிதர்களின் உதாரணங்களை எடுத்துக் கூற முடியும். அவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சவாலை ஏற்று அதன் விளைவாக மனிதனால் விளைவிக்க முடியாத தண்டனையை அத்தகையவர்கள் பெற்றார்கள். அவர்கள் தமக்குத்தாமே அழிவைத் தேடிக் கொண்டாலும் மற்றவர்கள் காப்பாற்றப் படுவதற்குக் காரணமாக அமைந்தார்கள்.

பல்வேறு மார்க்கத் தலைவர்களுக்காக மூன்றாவதான ஒரு வழிமுறையும் முன்வைக்கப்பட்டது. ஒரு மரம் அதன் கனியால் அறியப்படுகிறது என்பதும், ஒரு மார்க்கம் அது ஏற்படுத்தும் விளைவுகளால் அறியப்படுகிறது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். பிறகு ஏன் யாருடைய கரங்களில் இறைவனின் மகத்துவம் வெளிப்படுத்தப் படுகிறது என்று பார்க்கக் கூடாது? இந்த நோக்கத்திற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இயேசு நாதரின் நடைமுறையோடு ஒத்திருந்த ஒரு பரிசோதனையை முன்

வைத்தார்கள். அன்னார் கூறுகிறார்கள்; மிகவும் மோசமான நோயினால் பீடிக்கப் பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மனிதர்களை இந்தச் சோதனைக்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம். அவர்களைத் தமக்கும் பிறமதத்தை முன்னிலைப் படுத்தும் ஒருவருக்கும் இடையில் சீட்டுக்குலுக்கிப் போட்டுச் சரிசமமாகப் பிரித்துக் கொள்வோம். பிறகு ஒவ்வொரு தரப்பாரும் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நோயாளிகளின் நோய் தீர்வதற்காகப் பிரார்த்திக்க வேண்டும். தீர்வை அடைவதற்கான இந்த முறை கையாளப்பட்டால், தாம் இறைவனின் கரங்களால் உதவி செய்யப்படுவதை உலகமே ஒப்புக்கொள்ளத்தக்க விதத்தில் தம்முடைய எதிரிகளின் பிரார்த்தனைகளுக்கு எதிரில் தமக்குத் தெளிவான வெற்றி கிடைக்கும் என அன்னார் வாதித்தார்கள்.

ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இறந்து விட்ட நிலையில் இந்த வழிமுறையைப் பின்பற்றி எப்படி ஒரு முடிவுக்கு வர முடியும் என்ற மறுப்பு எழலாம். இதற்குப் பதிலாக நான் கூறுவது என்னவென்றால் ஓர் இறைத்தூதர் ஒரு காட்சியை நிகழ்த்திக் காட்டுவதற்காக இவ்வுலகிற்கு அனுப்பப்படுவதில்லை என்று கூற விரும்புகிறேன். அவர் முழு உலகிற்கும் ஒரு கருணையாக விளங்குகிறார். அவர் நற்செய்திகளை மட்டும் கொண்டுவருவதில்லை; அருட்களையும் கொண்டு வருகிறார். மேலும் அவரது

உண்மைக்கான மிகப் பெரிய சான்று என்னவென்றால் இறைவன் தன்னுடைய அடையாளங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்திக் காட்டும் ஒரு சமுதாயத்தை அவர் விட்டுச் செல்கிறார். அதாவது உண்மையை ஒப்புக் கொள்வதால் உண்மை மேலும் பரவக்கூடிய வாய்ப்பிருக்கும் ஒரு சமுதாயம் ஒரு அடையாளத்தைக் காண விரும்பினால் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் அவர்கள் இறந்திருந்த போதிலும் இறைவன் தன் அடியார்களிடத்தில் கருணை உள்ளவனாக இருக்கின்ற காரணத்தாலும் அவர்களை எப்போதும் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வழி நடத்த விரும்புவதாலும் அவன் நிச்சயமாக அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டுவான் என்று நான் நம்புகிறேன்.

அஹ்மதிய்யத்தின் கொள்கைகளைப் பற்றிய அவசியமான இந்த சுருக்கமான அறிமுகத்திற்குப் பிறகு இங்கு இருப்பவர்களுக்கும் அவர்கள் மூலமாக கிழக்கிலும் மேற்கிலும் வாழும் அனைவருக்கும் இந்தச் செய்தியைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

சகோதரர்களே! சகோதரிகளே! இறைவனின் ஒளி உங்களுக்காக ஒளிர்ந்திருக்கிறது. காலப்போக்கில் உலகம் நேசமிகு கதை என்று கருதத் தொடங்கிய ஒன்று உங்கள் கண்களின் முன்னால் தோன்றியிருக்கிறது. இறைவனின் மகத்துவம் ஓர் இறைத்தூதர் மூலம் உங்கள் முன் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அவருடைய வருகை நோவா முதல் முஹம்மது (ஸல்) அவர்கள் வரை முன்னர் வந்த அனைத்து இறைத்தூதர்களாலும் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது; மேலும் அவன்

மாண்டுபோன மக்களின் இறைவன் மட்டுமல்ல. இப்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் இறைவனும் அவனே; முன்னர் சென்று போன மக்களின் இறைவன் மட்டுமல்ல; இனி வரவிருக்கும் மக்களின் இறைவனும் அவனே என்பதை இறைவன் உங்களுக்குச் செயல்படுத்திக் காட்டியிருக்கிறான். எனவே அந்த ஒளியை ஒப்புக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் உள்ளங்கள் ஒளி பெறச் செய்யுங்கள்.

சகோதரர்களே! சகோதரிகளே! இந்த வாழ்வு என்பது ஒரு நிகழ்வு மட்டுமே என்றும் ஒன்றுமற்ற தன்மையே அதனைப் பின் தொடரும் என்றும் கற்பனை செய்வது தவறாகும். ஒன்றுமற்ற தன்மை என்ற ஒன்றே இல்லாத ஒன்றாகும். இந்த ஆன்மா அழிவதற்காகப் படைக்கப்பட்டதல்ல. மாறாக என்றும் நிலைத்திருக்கும் வாழ்வுக்காகப் படைக்கப்பட்டதாகும். மனிதன் பிறந்த நேரம் முதல் முடிவில்லாத பாதையில் பயணிக்கிறான். மரணம் என்பது அவனது பயண வேகத்தை அதிகரிக்கின்ற ஒரு வழிமுறையாகும். சின்னச் சின்ன போட்டிகளில் ஒருவரை ஒருவர் முந்த முயற்சி செய்யும் நீங்கள் இதுவரை சென்றுவிட்டவர்களுக்கும் அவர்களது இடத்தை நிரப்பியவர்களுக்கும் இடையில் நடைபெறும் இம்மாபெரும் போட்டியை எவ்வாறு உதாசீனப் படுத்தமுடியும். நன்னெறி கொண்ட ஒரு மனிதர் கிழக்கில் தோன்றினார் என்பதையும் அவர் மூலம் உண்மையை உங்கள் வாசலை வந்தடையுமாறு இறைவன் செய்துள்ளான் என்பதையும் நீங்கள் உணரவில்லையா? நீங்கள் பெற்றுள்ள இந்த அருளுக்காக உண்மையான நன்றி உடையவர்களாக இருங்கள். அதன் மூலம் மேலும் இன்னும் அதிகமான அருளைப் பெறுவீர்கள்.

அவனுடைய கருணையைப் பெறுவதற்கு ஓடிச் செல்லுங்கள். அதன் மூலம் உங்கள் மீதான அவனுடைய கருணை அளவில் பெருகும். மூளையைச் செயல் இழக்கச் செய்யும் போதைப் பொருட்களை வெறுத்து ஒதுக்கும் நீங்கள் எந்த நன்மையையும் செய்யாததும் ஆன்மாவின் ஏக்கத்தை மேலும் தணியச்செய்கின்றதுமான போதனையில் எவ்வாறு திருப்தி கொள்கின்றீர்கள்? நீங்கள் சிலைகளின் முன் தலை குனிய மறுக்கின்றீர்கள். ஆனால் வாழ்வின் அடையாளமே இல்லாத ஒரு கடவுளின் கற்பனையான உருவத்தின் முன் எவ்வாறு தலை வணங்க முடியும்? வாருங்கள் உங்களுக்காக இறைவன் வழங்கியுள்ள உயிர் அமிழ்தத்தைப் பருகுங்கள். இந்த அமிழ்தம் பகுத்தறிவைக் கொல்வதில்லை; மாறாக ஒளி பெறச் செய்கின்றது. இது நரம்பு மண்டலத்தைச் செயல் இழக்கச் செய்வதில்லை; மாறாக மேலும் வலுவடையச் செய்கின்றது.

களி கூறுங்கள் மணப்பெண்ணின் தோழியரே! மகிழ்ச்சி பண் பாடுங்கள். ஏனென்றால் மணமகன் வந்துவிட்டார்!

தேடியவர் கிடைத்துவிட்டார். யாருக்காக காத்திருந்ததால் காத்திருந்தவர்களின் கண்கள் பூத்துப் போனதோ அவர் உங்கள் கண்களுக்கு இப்போது ஒளியூட்டுகின்றார். அதிபதியின் பெயரால் வருகிறவர் அருளுக்குரியவர். ஆம் அதிபதியின் பெயரால் வருகிறவர் அருளுக்குரியவர். அவரை கண்டடைபவர் அனைத்தையும் கண்டடைவார். அவரைக் காணாதவர் எதனையும் காணமாட்டார். நமது சொற்பொழிவின் இறுதியாக அனைத்துலகின் அதிபதியான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.